# தமிழரசு

ஜூன் 2012

விலை ரூ.20/-

செய்தி–மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 14.6.2012 அன்று, தலைமைச் செயலகத்தில், 2011–2012ஆம் கல்வியாண்டில் தமிழை மொழிப்பாடமாகக் கொண்டு 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கி வாழ்த்தினார்கள்.

# தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி - மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2043
வைகாசி – ஆனி
ஜூன் 2012

மலர் : 43 விலை ரூ.20 இதழ் : 12


ஜனநாயகம் என்பது ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற இரண்டும் சேர்ந்ததுதான். எதிர்க்கட்சி இல்லாமல் ஜனநாயகத்தை நிலை நிறுத்த முடியாது என்பதுதான் எனது திடமான எண்ணமாகும். எந்த ஒரு பிரச்சினையிலும் பல்வேறு வகையான கருத்துகள் வெளிப்பட்டால்தான், அந்தக் கருத்துகளைச் சீர்தூக்கிப் பார்த்து பெரும்பான்மையோருக்கு பயனளிக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க இயலும்.

– மாண்புமிகு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்


## ஆசிரியர் குழு

ஆசிரியர் - வெளியிடுபவர் :
முனைவர் **பொ.சங்கர்** இ.ஆ.ப..
இயக்குநர். செய்தி - மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
**டி.ஆர். ஜெயஸ்ரீ**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
க. சண்முகசுந்தரம்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
ச.ஜெயலலிதா
இரா.ராஜசேகரன்
அ. மகேஸ்வரி

உதவி ஆசிரியர்
சு.கமலா

நிருபர்கள்
தி.பெரியார் சாக்ரடீசு
ஜெ.ஜெயசிம்ஹன்

இதழ் உதவியாளர் / கணினி வடிவமைப்பு
அ.மதன்

கணினி வடிவமைப்பு
இரா.பாலாஜி


## இந்த இதழில்...


★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் 'குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின'ச் செய்தி ...... 2

★ தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையம் ஏற்படுத்துவது குறித்த குறிப்பாணை நிறுத்தப்பட வேண்டும் . ...... 3
(புதுடெல்லியில் 5.5.2012 அன்று நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை)

★ அதிகளவு நிதியுதவி அளித்து தமிழக அரசின் புதுமையான திட்டங்களுக்கு மத்திய அரசு ஆதரவளிக்க வேண்டும் ...... 11

★ மணமக்கள் ஒற்றுமையுடன் துன்பத்தைத் தகர்த்தெறிந்தால் வாழ்க்கை சுவைக்கும்! ...... 23
(மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் 18.6.2012 அன்று 1006 ஜோடி மணமக்களுக்குத் திருமணங்களை நடத்தி வைத்து ஆற்றிய உரை)

★ ஓராண்டுச் சாதனைகள் இன்னும் பல சாதனைகளை எட்டுவதற்கான அடித்தளமாக அமையும் ...... 28

★ 10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசுகள்! ...... 44

★ புதிய எழுச்சியுடன் தமிழகக் காவல்துறை ! ...... 49

★ டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை ....... 68


## அட்டைப்பட விளக்கம்

முதலாம் அட்டை :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் தலைமையிலான அரசு பதவியேற்று ஓராண்டு நிறைவடைந்ததையொட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வாழ்த்து தெரிவித்தனர். (16.5.2012)

நான்காம் அட்டை :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் 1006 ஜோடி மணமக்களுக்கு திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் கோயில் அருகில் திருமணங்களை நடத்தி வைத்தார். (18.06.2012)


தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்.
110,அண்ணாசாலை.
சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/ 28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in

# அனைத்து குழந்தைகளையும் மதிப்புள்ளவர்களாக மாற்றி சமுதாயத்தின் சொத்தாகக் காப்போம்!



மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

**குழந்தைத் தொழிலாளர் முறை**

**எதிர்ப்பு தினச் செய்தி**

உலகெங்கும் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான விழிப்புணர்வை வளர்க்கும் நாளாக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 12ஆம் தேதி "குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம்" கடைபிடிக்கப்படுகிறது. குழந்தை நலன் பேணும் நெறியிலிருந்து விலகி, அவர்களைப் பணியில் அமர்த்தும் முறை கொடியது. இந்த நாளில் குழந்தைத் செல்வத்திற்கு கல்விச் செல்வம் வழங்க மறுப்பது மனித நெறிக்கு எதிரானது என்பதனை அனைவரும் உணர வேண்டும்.

பெற்றோர் உழைப்பு வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை!
குழந்தைகள் உழைப்பு நாட்டிற்குச் சிறுமை!

ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி கற்கும் வாய்ப்பு, உடல் ஆரோக்கியம், குழந்தைப் பருவத்தை அனுபவித்தல் ஆகியவற்றை அளித்தாக வேண்டும். அனைத்துக் குழந்தைகளையும் மதிப்புள்ளவர்களாக மாற்றி அவர்களைச் சமுதாயத்தின் சொத்தாகக் காக்க வேண்டும் என்பதே எனது தலைமையிலான தமிழக அரசின் உயரிய உன்னத நோக்கமாகும்.

குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதில் தமிழகம் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. குழந்தைகள் சுதந்திரமாகக் கல்வி கற்றிடவும், பெற்றோர்களின் சுமைகளைக் குறைத்திடவும், கட்டணமில்லா கல்வி, சத்தான சத்துணவு, விலையில்லா மடிக்கணினி, சீருடைகள், பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மிதிவண்டிகள், காலணிகள், புத்தகப் பை, கணித உபகரணப் பெட்டி, வண்ணப் பென்சில்கள், புவியியல் வரைபடப் புத்தகம், ஆன் லைன் மூலம் வேலை வாய்ப்புப் பதிவு வசதி, கல்வி பயிலுதலில் இடை நிற்றலைக் குறைக்க ஊக்கத் தொகைகள் ஆகிய எண்ணற்ற திட்டங்களை உங்கள் அன்புச் சகோதரியின் அரசு செயல்படுத்தி வருகிறது.

குழந்தைகள் மூலம் பெறப்படும் வருமானம், வீட்டிற்கு அவமானம் என்பதைப் பெற்றோர்கள் உணரவேண்டும். குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு நாளில் அனைத்துப் பெற்றோர்களும் குழந்தைகளின் உரிமைகளை மதிப்பதோடு 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை வேலைக்கு அனுப்ப மாட்டோம் என உறுதி பூண்டு, நாம் அனைவரும் ஒன்றிணைந்து குழந்தை நேய மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்கிட நம் கடமையை ஆற்றிடுவோம்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்






# தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையம் ஏற்படுத்துவது குறித்த குறிப்பாணை நிறுத்தப்பட வேண்டும்

புதுடெல்லியில் 5.5.2012 அன்று நடைபெற்ற தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையம் தொடர்பான அனைத்து மாநில முதலமைச்சர்கள் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்

**மா**ண்புமிகு பிரதமர் அவர்களே! இன்று இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ள ஏனைய சான்றோர்களே!

16.04.2012 அன்று நடைபெற்ற உள்நாட்டுப் பாதுகாப்பு குறித்த முதலமைச்சர்களின் மாநாடு, பொது அமைதி மற்றும் காவல்துறை தொடர்புடைய துறைகளில், உள் விவகாரங்கள் அமைச்சகம் நடவடிக்கை எடுப்பதாக ஒப்புக்கொண்டு, உறுதிமொழி அளித்ததைத் தொடர்ந்து, மாநில அரசுகளுக்கு நன்னம்பிக்கையளிக்கும் வகையில் நிறைவுபெற்றது. பயனுள்ள விவாதங்கள் நன்முறையில் பதிவு செய்யப்பட்டு, முதலமைச்சர்கள் வெளிப்படுத்திய உணர்வுகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

முதலமைச்சர்களின் இந்த மாநாடு தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையம் தொடர்புடைய பிரச்சினைகளை விவாதிப்பதற்காக கூட்டப்பட்டுள்ளது. 03.02.2012 நாளிட்ட உள்விவகாரங்கள் அமைச்சகத்தின் அலுவலகக் குறிப்பாணை மூலம் தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையம் அறிவிக்கை செய்யப்பட்டது. இந்த ஆணை, தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தின் அமைப்பு, அலுவல்கள், அதிகாரங்கள் மற்றும் கடமைகளை வரையறுக்கவும், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான பயனுள்ள ஒரே கட்டுப்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு அமைப்பு அமைய வேண்டும் என்பதே இவ்வாணையின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கவும் தோன்றுகிறது. நமது நாட்டின் பயங்கரவாதத்திற்கு எதிரான கட்டமைப்பின் திறன்களை ஆய்வு செய்ததன் மூலம் இந்த ஆணை வெளியிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

**“ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் உளவுத்தகவலைப் பரிமாறிக்கொள்வதுதான் முன்னேற்றத்திற்கான சரியான வழியாகும். மத்திய உளவுப்பிரிவைச் சேர்ந்த பணியாளர்களை மட்டுமே முக்கிய அதிகாரிகளாகத் தெரிவு செய்வது இராணுவ உளவுத்தகவல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு போன்ற பிற முகவரமைப்பு களுக்கு இரண்டாம் நிலைத் தகுதியை அளிப்பது, மாநில பதவித்தரங்களை முற்றிலுமாக விலக்குவது ஆகியவை எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துவதாகவும் செயற்பாட்டுத்திறன்களைப் பெரிதும் குறைப்பதாகவும் அமையும்.”**

இருப்பினும், தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தை அமைப்பதற்கான உள்விவகாரங்கள் அமைச்சகத்தின் ஆணையோ, எங்களுக்கு சுற்றனுப்பப்பட்ட நிகழ்ச்சி விவரக் குறிப்போ, தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தை அமைப்பதற்கான அவசியத்தை ஏற்படுத்திய பயங்கரவாத எதிர்ப்புக் கட்டமைப்பு திறன்களில் உள்ள இடைவெளிகளையும், குறைபாடுகளையும் குறிப்பிடாதது வியப்பளிப்ப தாகவுள்ளது. இந்த ஆணையின் முன்னுரை, கார்கில் போருக்குப் பின், ஏற்படுத்தப்பட்ட அமைச்சர்களின் குழு மத்திய உளவுப்பிரிவில் பன்முகவரமைப்பு மையம் ஒன்று ஏற்படுத்தலாம் என்று பரிந்துரைத்தது பற்றித் தெரிவிக்கிறது. மத்திய உளவுப் பிரிவிலிருந்து மட்டுமே பணியாளர்களைத் தெரிவு செய்வதற்குப் பதிலாக வெவ்வேறு உளவுப்பிரிவுகள் மற்றும் பாதுகாப்பு முகவரமைப்புகளிலிருந்து பயங்கரவாத எதிர்ப்பு மையத்திற்கான பணியாளர்களை வரவழைத்துக் கொள்ளலாம் என்று இரண்டாவது நிருவாகச் சீர்திருத்த ஆணையம் பரிந்துரைத்தது. இதில் மத்திய உளவுப்பிரிவு, பல்வேறு மாநில உளவுத்தகவல் முகவரமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்றும் திறனற்றதாகவுள்ளது என்பது எனது கருத்துப்படி முதலாவது முறையார்ந்த குற்றச்சாட்டு ஆகும். இதைச் சரி செய்வதற்குப் பதிலாக, உள்விவகாரங்கள் அமைச்சகம், மத்திய உளவுப்பிரிவில், தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தின் செயலாக்கப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தவும், சட்ட விரோதமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ், அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியின் அதிகாரங்களுடன், உளவுப் பிரிவின் கூடுதல் இயக்குநருக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கவும் கருதுகிறது. இது முறையற்றது மட்டுமல்லாமல், அமைச்சர்கள் குழுவின் கருத்துகள் மற்றும் நிருவாகச் சீர்திருத்த ஆணையத்தின் கருத்துகளைப் பிரதிபலிப்பதாகவும் அமையவில்லை.

உள்விவகாரங்கள் அமைச்சகத்தின் அலுவலகக் குறிப்பாணையின் 2.2ஆம் பிரிவு, தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தின் தலைவர், மத்திய உளவுப்பிரிவில் கூடுதல் இயக்குநர் பதவித் தரத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரியாக இருக்க வேண்டுமென்றும், தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தின் முக்கியமான பணியாளர்கள், மத்திய உளவுப்பிரிவிலிருந்து வரவழைக்கப்படுவர் என்றும் தெரிவிக்கிறது. ரா (RAW), டிஜிஎம்ஐ (DGMI), என்சிபி (NCB) முதலிய பிற முகவரமைப்புகளிலிருந்து தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்திற்கு அயல்பணியில் வரவழைக்கப்படுகிற பிற அதிகாரிகள் முக்கியமான பிரிவிற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். அவர்கள் வெளிப்பிரிவுகளில் மட்டுமே செயலாற்ற அனுமதிக்கப்படுவர். இதன் மூலம் அவர்கள் இரண்டாம் நிலைத் தகுதியை மட்டுமே துய்ப்பர் என்பது புரிந்துகொள்ள முடிகிறது. மேலும், மாநில உளவுத்தகவல் முகவரமைப்புகளிலிருந்து மாநில பதவித்தரங்களைச் சேர்ந்த அதிகாரிகளை வரவழைப்பது பற்றிய குறிப்பு கூட இல்லை. இவ்வாறு தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையம் மத்திய உளவுப்பிரிவினால் மட்டுமே ஆதிக்கம் செலுத்தப்படும். மேலும், பல்வேறு முகவரமைப்பு களுக்கிடையே, தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்திற்காகத் தெரிவு செய்யப்படவிருக்கிற பணியாளர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிற முறை உளவுப்பிரிவுகளிடையே உள்ள பிளவுகளை மேலும் அதிகமாக்கும் நடவடிக்கை என்பது தெளிவாகிறது. நான், 17.02.2012 அன்று மாண்புமிகு பிரதமருக்கு எழுதிய கடிதத்தில், மத்திய உளவுப்பிரிவின் நடவடிக்கை, மாநில காவல்துறையைப் பெரிதும் சார்ந்துள்ளது என்பதையும் பல மத்திய முகவரமைப்புகள், உள்ளூர் மொழி, பயங்கரவாத நடவடிக்கைகள் முதலியவை பற்றி நன்கு அறிந்திருக்க மாட்டார்கள் என்பதையும் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன். எனவே, ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் உளவுத்தகவலைப் பரிமாறிக்கொள்வதுதான் முன்னேற்றத்திற்கான சரியான வழியாகும். மத்திய உளவுப்பிரிவைச் சேர்ந்த பணியாளர்களை மட்டுமே முக்கிய அதிகாரிகளாகத் தெரிவு செய்வது இராணுவ உளவுத்தகவல் மற்றும்

ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு போன்ற பிற முகவரமைப்புகளுக்கு இரண்டாம் நிலைத் தகுதியை அளிப்பது, மாநில பதவித்தரங்களை முற்றிலுமாக விலக்குவது ஆகியவை எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துவதாகவும் செயற்பாட்டுத்திறன்களைப் பெரிதும் குறைப்பதாகவும் அமையும். பயங்கரவாத எதிர்ப்புத் தொகுப்பில், சாதி, பாகுபாடு அமைப்பு முறையில், படிநிலை அமைப்பில், மத்திய உளவுப்பிரிவுப் பணியாளர்களை, மேல்நிலையில் அமர்த்துவது, பயங்கரவாதிகளின் கரங்களை வலுப்படுத்துவதற்குப் பேருதவியாக அமையும்.

பன்முகவரமைப்பு மையம், 2001–ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. ஆனால், அதன் அதிகாரங்களும், அலுவல்களும் 2008 டிசம்பரில்தான் வரையறுக்கப்பட்டன. இது, மத்திய, மாநில முகவரமைப்புகளுக்கிடையே தகவல் ஏற்பாட்டு முறையை ஒருங்கிணைப்பதற்கான நிறுவன ரீதியிலான அமைப்பாகும். பன்முக வரமைப்பு மையத்தின் அதிகாரங்களும், அலுவல்களும் 2008 டிசம்பரில் வரையறுக்கப்பட்டபோதே, நிருவாகச் சீர்த்திருத்த அறிக்கை கிடைக்கப்பெற்று, அது ஏற்கெனவே கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது. அமைச்சர்கள் குழுவாகவோ அல்லது அமைச்சரவைக் குழுவின் மூலமாகவோ எந்தவொரு புதிய ஆய்வோ அல்லது மறு ஆய்வோ அதன்பின் நடத்தப்படவில்லை. பன்முக முகவரமைப்பு மையத்தின் செயல்பாடுகளில் காணப்படக்கூடிய குறைபாடுகளைச் சரிசெய்வது தொடர்பான பரிந்துரை ஏதும்இல்லை. இத்தகைய யாதொரு ஆய்வு அல்லது பரிந்துரை கூட எங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. இத்தகைய சூழ்நிலைகளில் வெளிப்படும் வினாவுக்கான விடை எங்களுக்கு அளிக்கப்பட வேண்டும். தேசிய பயங்கரவாதத் தடுப்பு மையம் என்ற வகையிலான ஒரு பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பை வடிவமைப்பதற்குக் காரணமாக பன்முக முகவரமைப்பு மையத்தில் காணப்பட்ட குறைபாடுகள் என்ன ?



தேசிய பயங்கரவாத தடுப்பு மையம் அமைப்பதற்கான அறிவிக்கை வெளியிடும் முன் இதுகுறித்து மாநில அரசுகளிடம் கலந்தாலோசிக்கப் படவில்லை. சொல்லப்போனால் எனது அரசு, ஆணையின் ஒரு நகலைக் கூடப் பெறவில்லை. ஒடிசா மாநிலத்தின் மாண்புமிகு முதலமைச்சர் திரு.நவீன் பட்நாயக் அதன் ஒரு நகலை என்னுடன் பகிர்ந்து கொண்டார். மத்திய உள்துறை அமைச்சகம் இவ்வகையில் மேம்போக்கான போக்கையே கடைபிடிக்கிறது. இவ்வாறு தமிழ்நாடு அரசு முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டு வருவது போன்றுள்ளது. மத்திய உள்துறை அமைச்சகம் ஆணையின் ஒரு நகலையாவது மாநில அரசுக்கு அனுப்பிவைப்பது தேவையில்லை என நினைத்திருப்பது தமிழ்நாடு அரசு மீது மத்திய அரசு கொண்டுள்ள வெறுப்பைக் காட்டுகிறது. பயங்கரவாத எதிர்ப்பு என்பது ஒரு கடுமையான பிரச்சினை. எனவே, அதற்கெதிராக உருவாக்கப்படும் எந்தவொரு உத்தியும் பல்வேறு மத்தியப் புலனாய்வு முகவரமைப்புகள் மற்றும் மாநில அரசுகள் போன்ற அனைத்துப் பொறுப்பாளர்களின் கருத்துகளையும் கருதிப் பார்க்க வேண்டும். யாதொரு பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை எடுப்பதற்கு அதன் தலையசைவு தேவையென்றவாறான ஒரு ஒருங்கிணைப்பு மையம் மத்திய உள்துறை அமைச்சகத்தில் அமைவுற்றிருக்கக் கூடாது. துரதிருஷ்டவசமாக, "தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையமானது ஒரு தனித்த திறனான கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்ட அனைத்து பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின்

**❝ மாநில அரசுகளுக்கு நிருவாகக் கொள்கை குறித்து ஆலோசனை வழங்குவதில் நேரத்தைச் செலவிடுவதை விட்டு விட்டு, மத்திய அரசு அதன் அமைப்புகளை ஒழுங்குபடுத்துவதில் ஆர்வம் காட்ட வேண்டியத் தருணம் வந்துவிட்டது. மாநில முதலமைச்சர்கள் மிகவும் உறுதிப்பாட்டுடன் நடந்து கொள்கின்றனர். ஒவ்வொரு பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் பத்திரிகையாளர் கூட்டம் நடத்தி தாக்குதல் நிகழ்ந்ததில் தங்கள் தவறுகள் என்ன என்பதை விளக்குவதில்லை. நாங்கள் முன்கூட்டியே செயல்படுகிறோம், தாக்குதல் நடக்க விடாமல் தடுக்கிறோம். ❞**

ஒருங்கிணைக்கும் ஆற்றல் கொண்டதாய் திகழ்வதை நிலைக்குழு, உறுதிசெய்துகொள்ள வேண்டும்" என்று கூறப்படுவது பயங்கரவாத எதிர்ப்பு முயற்சிகளில் பிற முகவரமைப்புகள் அனைத்துப் பொறுப்புகளையும் கையுதறிவிட்டு அந்த மையத் திலுள்ள பணியாளர் களுக்கு ஒத்து ஊதவேண்டும் என்பதுபோல் தோன்றுகிறது. இதைவிட பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்திற்குத் தீங்கு விளைவிப்பது வேறெதுவும் இருக்காது. பல்வேறு புலனாய்வு சேகரிப்பு முகவரமைப்புகளின் இடையே ஒருங்கிணைப்பை உருவாக்குவதில் தோல்விகள் ஏற்பட்டுள்ளதை எங்களின் பயங்கரவாத எதிர்ப்பு ஆவணம் சுட்டிக்காட்டுகிறது. பயங்கரவாத எதிர்ப்பு உத்திகள் இந்த அடிப்படைக் கருத்தை எடுத்துக் காட்ட வேண்டும். எல்லைப்புறப் பகுதிகளில் புலனாய்வுத் தகவல்களைச் சேகரிப்பதில் ஏற்பட்ட ஓட்டைகளை கார்கில் யுத்தம் வெளிக்காட்டியது. ஊடுருவல் நிகழ்வுகள் குறித்துப் பொதுமக்களிடம் தகவல் சேகரிப்பதில் நமது ஆற்றல் குறையை 2008–ஆம் ஆண்டின் மும்பை–குண்டுவெடிப்புச் சம்பவம் காட்டியது, வஞ்சப்புகழ்ச்சியாகக் கூறின் இந்த பயங்கரவாத எதிர்ப்பு மையம் தானாகவே அதிக அதிகாரங்களைப் பெருக்கிக் கொண்டுப் பிற பொறுப்பாளர்களைத் தள்ளிவைக்கிறது. இது எதிரிகளுக்குத்தான் வலுவூட்டும். பொருள் நிறைந்த மற்றும் மதிப்புவாய்ந்த தகவல்கள் சேகரிக்கப்பட வேண்டுமாயின் எல்லைப்புறப் பகுதிகள் மற்றும் கடலோரப் பகுதிகளில் வாழும் மக்களுடன் தொடர்பினை ஊக்குவிக்கும் முறை கொள்ளப்பட வேண்டும்.

இதற்காகக் கடலோரப் பகுதிகள் மற்றும் எல்லைப்பகுதிகளில் மேம்பாட்டுத் திட்டங்கள் விரிவாக்கப்படவேண்டும். தகவல் அளிப்பவர்க்குத் தாராளமாக ஊக்கத்தொகைகள் அளிக்கப்பட வேண்டும். மாநிலப் புலனாய்வு முகவரமைப்புகள் மூலமாக மத்திய அரசு இதற்கான நிதியை அளிக்கலாம். இதனால் இதற்காக எடுக்கப்படும் முயற்சிகள் இருமடங்காகும். நடவடிக்கை எடுக்கப்படும் அளவிலான தகவல்கள் மாநிலங்களால் சிறிதளவே அளிக்கப்படுகின்றன என்று மத்திய உள்துறை அமைச்சகத்தில் ஆழமான கருத்து நிலவி வருகிறது. 16.4.2012–ஆம் நாளில் நடத்தப்பட்ட மாநாட்டில் சுற்றனுப்பப்பட்ட நிரல் குறிப்புகளில் இது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மாநில காவல்துறையினரே பெருமளவு புலனாய்வுத் தகவல்களைச் சேகரித்து உடனடி நடவடிக்கையும் எடுத்துள்ளனர் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். பின்னர் பதிவு செய்வதன் பொருட்டு அதுகுறித்து மத்திய முகவரமைப்புகளுக்குத் தெரிவிக்கப் படுகின்றன. பயங்கரவாதச் செயல்களைத் தடுப்பதற்காக ஒரு சட்டத்துக்குப் புறம்பான முகவரமைப்பு மீது நடவடிக்கை எடுப்பதற்கு மாநில காவல்துறை ஒரு மத்திய முகவரமைப்பிடமிருந்து கட்டளை பெறக் காத்திருப்பது தேவையில்லை. பயங்கரவாதச் செயல்களைத் தடுக்க ஏதேனும் நடவடிக்கை அவர்களிடமிருந்து கட்டளைப் பெற்ற பின்னர்தான் எடுக்கப்பட வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சகம் விரும்புமாயின் அவர்களுக்கு நடைமுறை நிருவாகம் பற்றித் தெரியுமா என்ற அச்சம் எழுகிறது.

நிதிப்பற்றாக்குறை நிலவரம் மற்றும் சரிந்து கொண்டிருக்கும் வணிகம் குறித்து மாண்புமிகு பிரதமர் கவலையுறுவதை நான் உறுதியாக அறிவேன். கடன் வீத வகைப்படுத்தும் முகவரமைப்பின், தரமான மற்றும் மோசமான என்ற கீழ்நோக்கிய கணிப்பினால் இந்தியப் பொருளாதாரம் உலகப் பார்வையில் எதிர்மறைக் கருத்தைப் பெற்றுள்ளது.

மாநில அரசுகளுக்கு நிருவாகக் கொள்கை குறித்து ஆலோசனை வழங்குவதில் நேரத்தைச் செலவிடுவதை விட்டு விட்டு, மத்திய அரசு அதன் அமைப்புகளை ஒழுங்குபடுத்துவதில் ஆர்வம் காட்ட வேண்டியத் தருணம் வந்துவிட்டது.

மாநில முதலமைச்சர்கள் மிகவும் உறுதிப்பாட்டுடன் நடந்து கொள்கின்றனர். ஒவ்வொரு பயங்கரவாதத் தாக்குதலுக்குப்

பின்னர் பத்திரிகையாளர் கூட்டம் நடத்தி தாக்குதல் நிகழ்ந்ததில் தங்கள் தவறுகள் என்ன என்பதை விளக்குவதில்லை. நாங்கள் முன்கூட்டியே செயல்படுகிறோம், தாக்குதல் நடக்க விடாமல் தடுக்கிறோம். எங்களை ஊக்குவித்து தாராள நிதியுதவி அளிப்பதற்குப் பதிலாக மத்திய உள்துறை அமைச்சகம் எங்களை சிறுமைப்படுத்தி, சதுரங்கக் காய்களை நகர்த்துவது போல் தன்னிஷ்டத்திற்கு ஆட்டிப்படைக்கிறது. இது ஒரு எதிர்தாக்குதல் உருவாக்கும் கருத்து மட்டுமல்ல, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை, கடுமையாக மீறுவதாகும். நான் இந்த அடிப்படை உரிமை குறித்த வினாவை எழுப்ப விரும்புகிறேன். புலனாய்வுப் பிரிவின் கட்டளைப்படி, நடவடிக்கை எடுக்கப்படுகின்றபோது, அப்பாவி உயிர்கள் பலியாவதற்கு யார் பொறுப்பாவர்? உள்ளூர் மக்களுக்கு யார் பதிலளிப்பது, அவர்களுடைய பயங்களை யார் போக்குவது, அவர்களின் உணர்வுகளுக்கு யார் ஆறுதல்படுத்துவது? எனவே, மாநிலக் காவல்துறையைச் சார்ந்திராமல் கைது செய்வதற்கும் பறிமுதல் செய்வதற்கும் அதிகாரங்கள் கொண்ட புலனாய்வுப் பிரிவின் கீழ் நடவடிக்கை கோட்டம் செயல்படும் என்பதைக் கற்பனை செய்து பார்ப்பது கூட அதிர்ச்சியூட்டுவதாக இருக்கிறது. உண்மை நிலையின் பின்னணிகள் முற்றிலும் அறியப்படாததையே இது காட்டுகிறது.

குஜராத் முதலமைச்சர் மாண்புமிகு திரு.நரேந்திர மோடி அவர்கள் ஏப்ரல் 16–ஆம் நாளன்று, நடந்த கருத்தரங்கில் பேசியப் போது, மத்திய அரசிற்கும் மாநிலங்களுக்கும் இடையில் வளர்ந்து வருகின்ற அவநம்பிக்கையை மறைமுகமாகத் தெரிவித்து, சில அமைச்சர்களின் குறிப்பிட்ட சில நடவடிக்கைகள் எவ்வாறு பிரிவினை மேலும் அதிகப்படுத்துகிறது என்பதை சுட்டிக்காட்டினார். அத்தகைய முயற்சியில், தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையம் ஒன்றாகும். தகவல் கிடைத்த உடன் பயங்கரவாதிகளைக் கைது செய்வதில் மாநில அரசுகளின் திறமையில் நம்பிக்கை இல்லாததால், மத்திய உளவுப் பிரிவில் விரைவாக நடவடிக்கை எடுப்பதற்கான பிரிவை உருவாக்க நோக்கம் கொண்டிருக்கிறது. உள்துறை விவகாரங்கள் அமைச்சகம் மாநிலங்களிலுள்ள காவல்துறைப் பணியாளரைக் காட்டிலும், அவர்களுடைய அதிகாரிகள் மிகவும் திறமையும் நேர்மையுமிக்கவர்கள் எனக் கருதுகிறதா? ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு அல்லது இராணுவ உளவுத் தகவலின் தலைமை இயக்ககத்தைக் காட்டிலும் மத்திய உளவுப் பிரிவு மிகவும் நம்பிக்கைக்குரியது எனக் கருதுகிறதா? குறிப்பிட்ட சில ரகசியத் தகவல் தொடர்பாக மாநில அரசுகளை நம்ப இயலாது எனக் கருதுகிறதா? இத்தகைய அவநம்பிக்கை தூக்கியெறியப்படவேண்டும்.

பறிமுதல் செய்கின்ற மற்றும் கைது செய்கின்ற அதிகாரங்களுடன் மத்திய உளவுப் பிரிவில் நடவடிக்கை



எடுக்கின்ற கோட்டத்தை அமைப்பதன் வாயிலாக நடைமுறையில் எதையும் சாதிக்க இயலாது. காவல் துறை நடைமுறைகளின்படி, கைது நடவடிக்கையும் பறிமுதல் நடவடிக்கையும் புலனாய்வின் ஒரு அங்கமாகும். இதுபற்றிய அடிப்படை அறிவு கொண்ட எவரும், புலனாய்விலிருந்து கைது மற்றும் பறிமுதல் நடவடிக்கையைப் பிரிப்பதற்கு முயற்சி செய்யமாட்டார்கள்.

மேற்சொன்னவற்றிலிருந்து, முன்மொழியப்பட்ட வகையில் தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தை ஏற்படுத்த முடியாது என்பது தெளிவாகிறது. அலுவலகக் குறிப்பாணையின் பின்னணியை நியாயப்படுத்துவதற்காக, நிலையான

**“ மாநில அரசுகளின் சார்பில், நாங்களனைவரும் நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையைக் காப்பதில் உயர்ந்த கடப்பாடு கொண்டுள்ளோம் என நான் நம்பிக்கையுடன் தெரிவிக்கிறேன்...**

**இந்தியா என் தாய்நாடு, இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தோர், அவர்களுடைய வளம் மற்றும் நலனில் மட்டுமே எனது மகிழ்ச்சி உள்ளது. ”**

செயல்பாட்டு நடைமுறைகள் சாக்குப் போக்குச் சொல்வது, சிந்தனையாளர்கள் அனைவராலும் அடியோடு நிராகரிக்கப்படக் கூடியதாகும். அவை, பயங்கரவாதத்தை சரியாக எதிர்த்து முனைப்புடன் போராட வேண்டுமாயின், மாநிலங்களிலுள்ள ஒருங்கிணைப்பு அமைப்பு ஒன்று, பயங்கரவாத எதிர்ப்பு குறித்த விவகாரங்களில், ஒருங்கிணைப்பு மத்திய முகவரமைப்புடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். ஒவ்வொரு மாநிலத்திலும் விரைவு நடவடிக்கை பயங்கரவாத எதிர்ப்புப் படை உருவாக்கப்பட வேண்டியிருக்கிறது. இது, ஒருங்கிணைப்பு மாநில முகவரமைப்பின் கீழ் செயல்படும். தகவல் பெறப்பட்டதும் ஒருங்கிணைப்பு மாநில முகவரமைப்பு, தகுந்த முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய படையை செயலில் ஈடுபடுத்த வேண்டும். நவீன ஆயுதங்கள் மற்றும் பயிற்சியுடன் பயங்கரவாத எதிர்ப்புப் படையை உருவாக்குவதற்கு, மாநில அரசுகளுக்கு மத்திய அரசால் தாராளமாக நிதியுதவி அளிக்கப்பட வேண்டும்.

என்னுடைய கருத்துப்படி, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்கான உரிய உத்தியாக இது இருக்கும். மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையில் பெருத்த அவநம்பிக்கை உருவாக்குகின்ற மத்திய உள்துறை விவகாரங்கள் அமைச்சகத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக மற்றொரு சமீபத்திய முயற்சியான எல்லைப் பாதுகாப்புப் படைச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வருவது பற்றிய முயற்சியைக் குறிப்பிட விரும்புகிறேன். எல்லைப் பாதுகாப்புப் படையானது இந்தியாவின் எல்லைப் பகுதிகளைப் பாதுகாக்கின்றது. பொதுச் சட்டம் ஒழுங்கினைப் பராமரிப்பதில் மாநிலங்களுக்கு உதவுவதற்காக தற்போது அதன் எல்லை வரம்பினை உள்நாட்டுப் பகுதிகளிலும் விரிவுபடுத்தப்படுவதற்கு கோரப்படுகிறது. ஒருமுறை திருத்தங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டவுடன், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட யாதொரு மத்திய சட்டங்களின் கீழ் நாட்டின் எந்தப் பகுதியிலும் கைது நடவடிக்கைகள் மேற்கொள்வதில் எல்லைப் பாதுகாப்புப் படையினரை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. கைது நடவடிக்கை மற்றும் பறிமுதல் செய்கின்ற அதிகாரங்களுடன் புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கை கோட்டம் அமைக்கப் படுவதைத் தடுப்பதற்கு, எல்லா முதலமைச்சர்களும் கடுமையாக உழைத்து கொண்டிருக்கையில், எல்லைப் பாதுகாப்புப் படைச் சட்டத்தில் செய்யப்படுகின்ற தீங்கற்றதாகத் தோன்றும் இத்திருத்தத்தால், பின்வாசல் வழியாக இதே போன்ற நோக்கத்தை எய்துவதாகக் கருதப்படுகிறது. மத்திய உள்துறை விவகாரங்கள் அமைச்சகம், அதன் அணுகுமுறையை மாற்றி, சிறப்பான ஒளிவுமறைவற்ற முறையில் அதன் செயற்குறிப்புகளை முன்வைக்க வேண்டும். சம்பந்தப்பட்ட மாநில அரசின் கோரிக்கை அடிப்படையிலும் பொது சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்காகவும், உள்நாட்டுப் பகுதிகளில் எல்லைப் பாதுகாப்புப் படையை ஈடுபடுத்துவதற்கும் மட்டுமே திருத்தங்கள் வகை செய்வதைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசுக்கு ஆதரவளிப்பதை மாநில அரசுகள் பரிசீலிக்க வேண்டும். திருத்தங்கள் செய்வதன் வாயிலாக மறைமுகமாக, செய்யப்படுவதற்குக் கருதப்படும், உள்நாட்டுப் பகுதிகளில் எந்தவொரு மத்தியச் சட்டங்களையும் செயல்படுத்த அவர்களுக்கு அனுமதியளிக்கப்படக்கூடாது. ஆனால், இதில் இன்னமும் சில பிரச்சினைகள் உள்ளன. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் உதவிட ஏற்கெனவே மத்திய சேமக் காவல் படை உள்ளது. இவ்வாறு இருக்கையில், மத்திய சேமக் காவல் படையைக் கூடுதல் எண்ணிக்கையுடன் ஏன் வலுப்படுத்தப்படவில்லை. மத்திய சேமக் காவல் படையின் திறமைகளில் அரசு நம்பிக்கை கொள்ளவில்லையா? ஏற்கெனவே எல்லைப் பகுதிகளில் பணிச்சுமையுடனுள்ள எல்லைப் பாதுகாப்புப் படையை உள்நாட்டிற்குள் கொண்டு வரப்படுவதற்கு ஏன் கோரப்படுகிறது? இந்த கேள்விகளுக்கெல்லாம் பதிலில்லை.

மாநில அரசுகளின் சார்பில், நாங்களனைவரும் நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையைக் காப்பதில் உயர்ந்த கடப்பாடு கொண்டுள்ளோம் என நான் நம்பிக்கையுடன் தெரிவிக்கிறேன். ஆனால், நல்ல நோக்கங்களின் அடிப்படையில் அளிக்கப்பட்டுள்ள யாதொரு ஒப்புதலும் குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்காகத் தவறாகப் பயன்படுத்தப்படும் என்பதையும், மாநில அரசின் அதிகாரங்களைப் பறித்துக் கொண்டு, அவற்றின் வலிமையைக் குன்றச் செய்யும் வகையில் மத்திய அரசுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதையும் அறிந்து நாங்கள் அச்சம் கொள்கின்றோம்.

அத்தகைய ஒரு நேர்வுதான் தேசியப் புலனாய்வு முகவரமைப்பு. இம்முகவரமைப்பு மும்பை குண்டு வெடிப்பு நடந்த 2008 டிசம்பரில் ஏற்படுத்தப்பட்டது. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள யாதொரு சட்டத்தின் கீழும் மத்திய அரசின் சார்பாக முகவரமைப்பு நேரடியாகப் புலனாய்வு செய்து, குற்ற வழக்கு தொடர்வதற்கு தேசியப் புலனாய்வு முகவரமைப்புச் சட்டம் வகை செய்கிறது. மேலும், இது சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தையும் உள்ளடக்கியுள்ளது.

2008–ஆம் ஆண்டு தேசியப் புலனாய்வு முகவரமைப்புச் சட்டம், மாநிலங்களின் அதிகாரங்களை அபகரிப்பதற்கான ஒரு உறுதியான முயற்சியாக இந்நிகழ்வு உள்ளது.

இச்சட்டத்தின் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளக் குற்றங்களைப் புலனாய்வு செய்து, வழக்குத் தொடர்வதற்காக தேசியப் புலனாய்வு முகவரமைப்பு என்றழைக்கப்படும் ஒரு சிறப்பு முகவரமைப்பை மத்திய அரசு ஏற்படுத்துவதற்கு, இச்சட்டம் அதிகாரமளிக்கிறது.

ஒரு குற்றத்தைப் புலனாய்வு செய்வதற்காக, தேசியப் புலனாய்வு முகவரமைப்புக்கு மத்திய அரசு தன்னிச்சை யாகவும் உத்தரவு பிறப்பிக்கலாம்.

ஒரு குற்றத்தைப் புலனாய்வு செய்வதற்காக, தேசியப் புலனாய்வு முகவரமைப்புக்கு யாதொரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், மாநில அரசும், காவல்துறையும், அப்புலனாய்வில் இணைந்து விசாரணை செய்ய இயலாததுடன், சம்பந்தப்பட்ட ஆவணங்களையும், பதிவுருக்களையும் உடனடியாக முகவரமைப்புக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

மாநில அரசின் அதிகாரவரம்பிற்குள் உள்ள வழக்குகளை மத்திய அரசு புலனாய்வு செய்வதற்கு வகை செய்வது ஒரு அசாதாரண நடவடிக்கை ஆகும். மத்தியப் புலனாய்வுப் பிரிவுடன் (CBI) தேசியப் புலனாய்வு முகவரமைப்பை ஒப்பிடும்போது இது மிகத் தெளிவாகிறது. மத்தியப் புலனாய்வுப் பிரிவு, டில்லி காவல்படைப் பணியாளரமைப்புச் சட்டத்தின் கீழ் அதன் அதிகாரங்களைப் பெற்றுள்ளது.

டெல்லி சிறப்புக் காவல்படைப் பணியாளரமைப்பு, மத்திய சட்டத்தின் கீழ், வழக்குகளை எடுத்துக் கொண்டு, அவற்றை மத்திய அரசு நடைமுறைப்படுத்துவதற்காக, 1989–ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு அளித்த ஒப்புதலை, 1992–இல் மாநில அரசு திரும்பப் பெற்றுக் கொண்டது.

இச்சூழ்நிலையில், ஏனைய யாதொரு வழக்கினைப் புலனாய்வு செய்வதற்கு மத்தியப் புலனாய்வுப் பிரிவு எடுத்துக் கொள்ளுமாயின், மாநில அரசின் திட்டவட்டமான ஒப்புதலை அல்லது வேண்டுகோளைப் பெறுவது அவசியமாகும்.

மத்திய–மாநில அரசுகளின் அதிகாரப் பகிர்வுகள் தொடர்பான இத்தகைய ஆரோக்கியமான பழக்க வழக்கங்களும், செயற்பாங்கும் நசுக்கப்பட்டு வருகின்றன. மாநில அரசின் ஒப்புதலின்றி அல்லது தன்னிச்சையாகவே கூட வழக்குகளை எடுத்துக் கொள்வதற்கு தேசியப் புலனாய்வு முகவரமைப்புக்கு தற்போது அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இது, மாநில அரசின் அதிகாரங்களை வலுக்கட்டாயமாகப் பறித்துக் கொள்வதைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள தேசியப் புலனாய்வு முகவரமைப்பு, ஏற்கெனவே மத்தியப் புலனாய்வுப் பிரிவு என்ற வடிவில் அமைந்துள்ள சிறப்பு முகவரமைப்பிற்கான டில்லி சிறப்புக் காவல் அமைப்புச் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள வரையறைகளை மத்திய அரசு வேண்டுமென்றே தவிர்ப்பதையே இது காட்டுகிறது.

தேசியப் புலனாய்வு முகவரமைப்பு, தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையம் உருவாக்கம், விரைவு பாதுகாப்புப் படைப்பிரிவுச் (RPF) சட்டம், எல்லைப் பாதுகாப்புப் படைச்சட்டத்தில் செய்யக் கருதப்பட்டுள்ளத் திருத்தங்கள் ஆகியவற்றைக் காணும் போது, ''மத்திய அரசு, மத்திய அரசால், மத்திய அரசுக்காக'' என்பதை உள்ளடக்கிய ஏகாதிபத்தியத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம் என நாம் கருத வேண்டியுள்ளது.

**"நம் நாடு ஒரு சிறந்தநாடு ஆகும். உலகின் தலைமையிடத்திற்கு வர நாம் முயற்சிக்க வேண்டும். நம் மக்களை பயங்கரவாத அச்சுறுத்தலில் இருந்து பாதுகாப்பதன் மூலமாக மட்டுமே திட்டமிட்ட, நிலையான பொருளாதார மேம்பாட்டினை அடைய இயலும். எனவே, தேசிய உறுதி மொழியில் தெரிவிக்கப்பட்டுள்ளதை எதிரொலிக்கும் விதமாக, இந்நாட்டிற்காக நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்"**

தேசியப் புலனாய்வு முகவரமைப்பு ஏற்படுத்தப்பட்ட பின்னர், அதன் முடிவு எதனைக் காட்டுகிறது. பயங்கரவாதத்தின் சில குறிப்பிட்ட சிறப்பான சட்டங்களின் மூலம் விசாரணைகளை ஏன் தீர்மானிக்க இயலவில்லை என்றும், குற்றவாளிகளின் குற்றங்களை ஏன் வெற்றிகரமாக நிரூபிக்க இயலவில்லை என்றும் அறிந்துகொள்ள நாடு விரும்புகிறது. அதே வழியைப் பின்பற்றி, மத்திய உள்துறை அமைச்சகம், தற்போது கருதப்பட்டவாறான, தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையம் என்ற தோல்வி தரக்கூடிய ஒன்றை ஏன் உருவாக்க விரும்புகிறது. எந்தவொரு பயனையும் அளிக்க இயலவில்லை எனில், தேசியப் புலனாய்வு முகவரமைப்பும் கூட முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டிய ஒன்றாகும் என்பதே எனது கருத்தாகும். உத்தேசிக்கப்பட்டுள்ள தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையம் குறித்து முழுமையாக ஆராய வேண்டியது அவசியமாகும். இதற்காக முதலமைச்சர்களைக் கொண்ட சிறிய அளவிலான துணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பது எனது கருத்தாகும்.

முதலமைச்சர்களின் துணைக் குழு அதன் அறிக்கையை அளிக்கும் வகையில், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தை நிறுத்திவைக்கும்படி, மாண்புமிகு பிரதமருக்கு, நான் முன்னர் எழுதிய கடிதத்தில் ஏற்கெனவே தெரிவித்திருந்தேன். உண்மையில், தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மைய அறிவிக்கை செயல்பாட்டிற்கு வரும் வரையில், தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையம் குறித்த எந்தவொரு கலந்தாய்வும் பயனற்றதாகும்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போரினை முழுமையான ஒத்துழைப்புடன் மட்டுமே நடத்த இயலும். தற்போது கருதப்பட்டுள்ள தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையம், பல்வேறு மாநிலங்களிலிருந்து அதிகளவில் எதிர்ப்பையே பெற்றுள்ளது. மத்திய உள்துறைச் செயலாளரால் நடத்தப்பட்ட கூட்டத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சி புரியும் மாநிலங்கள் கூட, அவநம்பிக்கையை வெளிப்படுத்தின.

எனவே, நான் முன்னர் தெரிவித்தவாறு, தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையம் ஏற்படுத்துவது குறித்த அலுவலகக் குறிப்பாணை நிறுத்திவைக்கப்பட வேண்டும் என்பதுடன், பயங்கரவாத உத்திகளைத் திறம்பட எதிர்ப்பதற்கு, முதலமைச்சர்களின் துணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். மத்திய உள்துறை அமைச்சகத்தின் மாண்புமிகு இராஜாங்க அமைச்சர் இக்குழுவில் பங்கு கொள்ளலாம். முதலமைச்சர்களின் துணைக்குழுப் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்ற உடனே, அதனடிப்படையில் நடவடிக்கையெடுப்பது சிறந்ததாகும். நான் தெரிவித்த கருத்துகளை மத்திய அரசு உணர்ந்து பாராட்டுவதுடன் அரசியல் தலைமைப் பண்பை வெளிப்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.

வலுவான பயங்கரவாத எதிர்ப்பு உத்தியை உருவாக்குவதற்கு பயனுள்ள ஆலோசனைக் கூட்டமாக இருக்கும் என்று உண்மையில் நம்பி இன்று காலை நான் இங்கு வந்துள்ளேன். சரியான சிந்தனையுள்ள அனைத்து இந்தியர்களைப் போல இந்த தேசிய முயற்சிக்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமென்றும் நான் நம்புகிறேன். நம் நாடு ஒரு சிறந்தநாடு ஆகும். உலகின் தலைமையிடத்திற்கு வர நாம் முயற்சிக்க வேண்டும். நம் மக்களை பயங்கரவாத அச்சுறுத்தலில் இருந்து பாதுகாப்பதன் மூலமாக மட்டுமே திட்டமிட்ட, நிலையான பொருளாதார மேம்பாட்டினை அடைய இயலும். எனவே, தேசிய உறுதி மொழியில் தெரிவிக்கப்பட்டுள்ளதை எதிரொலிக்கும் விதமாக, இந்நாட்டிற்காக நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். இந்தியா என் தாய்நாடு, இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தோர், அவர்களுடைய வளம் மற்றும் நலனில் மட்டுமே எனது மகிழ்ச்சி உள்ளது.

நன்றி, வணக்கம்.

❖ ❖ ❖

# அதிகளவு நிதியுதவி அளித்து

## தமிழக அரசின் புதுமையான திட்டங்களுக்கு

# மத்திய அரசு ஆதரவளிக்க வேண்டும்




டெல்லியில் 4.6.2012 அன்று நடைபெற்ற மத்தியத் திட்டக்குழுக் கூட்டத்தில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்

மாநிலத் திட்டக்குழு ஆணையத்தின் துணைத் தலைவர் டாக்டர் மாண்டேக் சிங் அலுவாலியா அவர்களே,

தமிழக நிதியமைச்சர் அவர்களே,

திட்டக்குழு ஆணைய உறுப்பினர்களே,

தமிழக அரசின் தலைமைச் செயலர் அவர்களே,

மத்திய மற்றும் தமிழக அரசின் மூத்த அதிகாரிகளே,

தமிழ்நாட்டின் பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டான 2012 – 2013 ஆண்டுத் திட்டம் பற்றி இன்று விவாதிக்க வந்திருப்பதைப் பற்றி மகிழ்ச்சியடைகின்றேன்.

### வறுமை நிலையைப் போக்க மிகப்பெரிய வாய்ப்பு

உலகளாவிய பொருளாதார நெருக்கடி மற்றும் தேசிய அளவில் நிலவும் தொழில் துறை மந்த நிலைச் சூழலில் இந்திய நாட்டிற்கு குறிப்பாகத் தமிழ்நாட்டின் ஒருமித்த வளர்ச்சிக்கும் வறுமை நிலையைப் போக்குவதற்கும் ஒரு மிகப்பெரிய வாய்ப்பாகக் பனிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தினை நான் காண்கிறேன். இப்பொழுது நம் தேவையெல்லாம் நிலைத்த பயனுள்ள அணுகுமுறையும், அரசு செலவினத்தில் போதுமான அதிகரிப்பும் ஆகும். எனவே, 2011–12ஆம் ஆண்டிற்கான திட்ட நிதியொதுக்கீடான ரூ. 23,535 கோடியைக் காட்டிலும் 19 சதவீத உயர்வுடன், 2012–13ஆம் ஆண்டுக்கான திட்ட நிதியொதுக்கீடாக ரூ.28,000 கோடி நிதி வழங்குமாறு கோரியுள்ளேன். தமிழ்நாட்டின் ஆண்டுத் திட்டம் பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தினைக் கருத்திற்கொண்டு இரண்டு இலட்சம் கோடியை எய்துவதற்கு வரையறுக்கப்பட்டுள்ளது. இது, ஏற்கெனவே பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கிய ரூ.85,344 கோடியைக் காட்டிலும் இரு மடங்காகும்.

### தேசிய வளர்ச்சியில் உயர்வான நிலையில் தமிழகம்

சென்ற முறை நடைபெற்ற ஆண்டுத் திட்டக் கூட்டத்தில், தமிழ்நாட்டின் மிகத் தொய்வான நிதிநிலைமைகளை நான் சுட்டிக்காட்டியதை நினைவு கூர விரும்புகிறேன். தமிழ்நாடு, 2009–2010ஆம் ஆண்டில் ரூ.3,531 கோடி அளவுக்கு மிகப்பெரிய வருவாய் பற்றாக்குறையையும், 2010–2011ஆம் ஆண்டில் ரூ.2,729 கோடி வருவாய் பற்றாக்குறையையும் பெற்றிருந்தது. 2010–2011ஆம் ஆண்டில் நிதிப்பாற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 3.2% நிலையில் இருந்தது. பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், நிதித் தொகுப்பு இருந்தும், சராசரி வளர்ச்சி விகிதம் முதல் நான்காண்டில் 8.05% இருந்தது. இது, தேசிய சராசரி விகிதத்தைவிட மிகவும் குறைவாகும். எனது தலைமையிலான அரசு, விவேகமான நிதி மேலாண்மை உத்திகளால் இந்த மோசமான நிலையை மாற்றியுள்ளது. வருவாய்ப் பெருக்கத்திற்கு வித்திட்டு, 2011–2012ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டின் நிதிப்பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.85 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மைய அரசு புள்ளியியல் நிறுவனத்தின் அண்மை வெளியீட்டின் தகவல் அடிப்படையில், தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 2011–2012ஆம் நிதியாண்டிற்கு 9.39% நிலையையெய்தி, தேசிய சராசரி விகிதமான 6.50% விட உயர்வான நிலையில் தமிழகம் உள்ளது என்பதாகும்.

### மாநில அரசின் நிதியாதாரங்களுக்குக் குறைந்த அளவில் நிதி ஒதுக்கீடு

தமிழ்நாட்டின் நிதிநிலையை சீர்ப்படுத்தும் விதமாக மைய அரசு மூலம் மிகப் பெருமளவில் நிதி உதவி பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அதிகரித்துள்ள முதலீட்டுத் தேவைகளுக்காக தேவைப்படுகிறது. பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஏமாற்றம் தருகின்ற போக்குகளைக் கொண்டிருக்கிறது. மத்திய அரசின் வழக்கமான கட்டுப்பாடற்ற நிதித் தொகுப்பு உதவிகளும் தேவைக்கேற்ப அதிகரிக்கப்படாமல் உள்ளது. மாநில அரசுகளின் திட்ட நிதியாதாரங்களுக்கு மிகக் குறைந்த அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கமான நிதித் தொகுப்பு உதவிகள் நலிந்து கரைந்து போவதற்குக் காரணமாக இருப்பது மத்திய அரசு செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள் மூலம் பெருமளவிலான நிதி ஆதாரங்கள் மாற்றப்படுவதேயாகும் என்றும் நான் வலியுறுத்திக் கூறியுள்ளேன். மத்தியத் திட்டங்கள் பெருமளவு பல்கியதை ஆய்வு செய்ய வேண்டுமென்றும் மத்தியத் திட்டங்களின் செயலாக்கம் குறிப்பிட்ட வரையறைகள் வகுக்காமல், மாநிலங்களின் எவ்விதத் தேவைகளுக்கும் பொருண்மைகளுக்கும் பொருந்தாமலும் ஒவ்வொரு மாநிலத்தின் வளரும் மக்கள் பெருக்கத்தின் அடிப்படையாக இல்லாமலும் மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் வழக்கமான தொகைக்குக் குறைவாக அமைந்து விடுகிறது. ஒரே வடிவமாக அனைவரும் உடுத்த வேண்டும் என்கிற இறுக்க நிலைக்



கோட்பாடு வளர்ச்சிப் பாதையில் பீடுநடைபோடும் தமிழ்நாட்டிற்கு உகந்ததாக இல்லை. இராஜீவ்காந்தி கிராம மின்சக்தி, உள்கட்டமைப்பு வசதி மற்றும் வீடுகளுக்கு மின்சக்தி வழங்கும் திட்டம், விரைவுடுத்தப்பட்ட பாசனப் பயன்பாட்டுத் திட்டம், பிரதமர் கிராமச் சாலை வசதித் திட்டம் போன்ற திட்டங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட தகுதி அளவுகோல்கள், தமிழ்நாட்டிற்கு இந்த நிதிகள் வழங்கப்படுவதை மறுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. அதேபோல மத்தியத் திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதித் தொகுப்பு நேரடியாக செயல்படுத்தும் அமைப்புகளுக்கு மாநில அரசுகளைக் கலக்காமல் நேரடியாகச் செல்வதால், அரசின் நிதிக்கொள்கைக்குப் புறம்பாக அமைகிறது. மாநிலத் திட்டக்குழு ஆணையம் இம்மாதிரி நடைமுறைகளை எதிர்த்துத் தடுக்கும் என நம்புகிறேன். வழக்கமான மத்திய நிதித் தொகுப்பு முறையை அளித்து, நிதித்தொகுப்பினை உயர்த்தி மத்தியத் திட்டங்களின் செயலாக்கம் மாநில அரசுகளின் வாயிலாக வழங்கப்பட வேண்டும் என நான் மீண்டும் ஒருமுறை வலியுறுத்திக் கூறுகிறேன்.

மாநிலத்தின் முன்னுரிமைத் திட்டங்களுக்கு மத்தியத் திட்டக்குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒருமுறை வழங்கப்படும் கூடுதல் மத்திய நிதியுதவிக்கான செயற்குறிப்புகள், மத்தியஅரசு செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்களைப் போன்றே முனைப்பான கூர்ந்தாய்விற்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் மாநிலங்களுக்கு நிதிகளை வழங்குவதில் நீண்ட காலதாமதம் ஏற்படுகிறது.

## இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு ஆயத்தம்

பதினோராவது திட்டக் காலத்தில் முதன்மைத் துறையில் வளர்ச்சி ஏமாற்றமளிப்பதாக இருந்தது. முதல் நான்காண்டுகளிலும் வளர்ச்சி 0.51% விகிதத்தில் இருந்தது. எனது தலைமையிலான அரசு பதவியேற்றவுடன் நிலைமை சீராக்குவதற்குச் சிறப்பு முயற்சியைச் செய்து உணவு தானிய சாகுபடிப்பரப்பை 2010–2011ஆம் ஆண்டைக் காட்டிலும் 24% சதவிகித அளவுக்கு அதிகரிக்கச் செய்துள்ளது. உணவு தானிய உற்பத்தி 40% உயர்ந்துள்ளது. வேளாண்மைப் பெருக்கத்திற்கு வலுவூட்டியும்

உழவர்களின் வருமான வரம்பினைப் பெருக்கியும் இரண்டாம் பசுமைப்புரட்சிக்கு ஆயத்தமாகியுள்ளோம். இதற்கு முதன்மைத் துறையில் பெருமதிப்பிலான முதலீடுகள் தேவைப்படும். இதனை உணர்ந்து தமிழ்நாடு அரசு, 2012–2013ஆம் ஆண்டில் முதன்மைத் துறைக்கு ரூ. 9,942 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது. இது 2011–2012ஆம் ஆண்டில் ரூ.8,428 கோடியாகவும், 2010–2011ஆம் ஆண்டில் ரூ. 5,674 கோடியாகவும் இருந்தது. திட்ட ஒதுக்கீடுகளும் இந்த ஆண்டில் 20 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க்கடன்**

வேளாண்மையில் உற்பத்தியினை அதிகரிக்க பயிர் சாகுபடி உத்திகளான திருந்திய நெல் சாகுபடி முறை, பயறு வகை கொள்முதல் கொள்கை, நீடித்த நவீன கரும்பு உற்பத்தித் திட்டங்களை முழு ஈடுபாட்டுடன் செயற்படுத்துகிறோம். தமிழ்நாட்டில் வேளாண் செயல்பாடுகளுக்குத் தேவைப்படும் முக்கிய ஆதாரமான நீர் பற்றாக்குறையாக உள்ளதால் எனது தலைமையிலான அரசு உழவர்களை சமூக, சுற்றுப்புறச் சூழலுக்கேற்ப நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தினைக் கடைப்பிடிக்க வலியுறுத்துகிறது. நுண்ணீர்ப் பாசனத் திட்ட செயல் முறைகளை நிறுவுகிற சிறு/குறு நில உழவர்களுக்கு 100% மானியமும் ஏனைய உழவர்களுக்கு 75%தொகுப்பு மானியமும் வழங்கப்படுகிறது. உழவர்கள் தங்களின் கடன்களை முறையாகவும் உரிய காலத்திலும் திருப்பிச் செலுத்தும் வகையில், வட்டியில்லாத பயிர்க்கடன்களை எனது தலைமையிலான அரசு வழங்கி வருகிறது. அறுவடைக்குப்பின் பயிர்களை சேமிக்க போதிய சேமிக்கும் வசதிகள் இல்லாத உழவர்களுக்கு, 2011–2012ஆம் நிதியாண்டில் மகத்தான திட்டமாக நவீன சேமிப்புக் கிடங்குகளை ரூ.274.97 கோடி மதிப்பில் கட்டித்தரத் தொடங்கியுள்ளது. இத்திட்டம் இவ்வாண்டும் ரூ.300 கோடி மதிப்பில் விரிவாக்கப்படுகிறது.


**மத்திய அரசின் மாற்றாந்தாய் போக்கு**

தமிழ்நாடு மேற்பரப்பு நீர் ஆதாரங்களை சிறிதளவே பெற்றுள்ளது என்பதை துணைத் தலைவரும், மத்தியத் திட்டக்குழு உறுப்பினர்களும் அறிவர். தமிழ்நாடு, அதனுடைய குறைந்த அளவு நீர் ஆதாரங்களை உரிய அளவு பயன்படுத்துவதற்காக, மாநில அரசு, ரூ.5,619.44 கோடி செலவில் காவிரி மற்றும் குண்டாறு ஆகியவற்றை இணைக்கவும், ரூ. 453.44 கோடி செலவில் தாமிரபரணி ஆற்றை, கருமேனியாறு மற்றும் நம்பியாறு ஆகியவற்றுடன் இணைக்கவும் கருதியுள்ளது. இவ்விரு பெருந் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்குமாறு, நான், மத்திய அரசிடம் திட்டவட்டமாகக் கேட்டுக்கொண்டேன். இருப்பினும், விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதிக்கு மாற்று அணுகுமுறையும், தமிழ்நாட்டிற்கு மறுக்கப்பட்டுள்ளதால், கோரிக்கைக்கு, போதிய பதில் நடவடிக்கை எடுக்கப்படாதது குறித்து நான் அதிருப்தி அடைந்துள்ளேன். வெள்ள நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு நிதியுதவி அளிக்குமாறு மத்தியத் திட்டக்குழு பரிந்துரைத்த போதிலும், 2011–2012ஆம் ஆண்டில் நிதி எதுவும் வழங்கப்படவில்லை. எனவே, இந்த மாற்றாந்தாய் போக்கினைக் கைவிடுமாறு மத்திய அரசிடம் வலியுறுத்துமாறும் ஆறுகளை இணைப்பதற்கும் வெள்ள நீரை மேலாண்மை செய்வதற்கும் விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன்பாடுத் திட்டத்தின்கீழ் ரூ.9,090 கோடி நிதியுதவி பெறுவதற்கு மத்திய அரசிற்கு ஏற்கெனவே செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளதற்கு இணங்க நிதியுதவி பெற்றுத் தருமாறும் மத்திய திட்டக் குழுவை நான் கேட்டுக் கொள்கிறேன். பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் தமிழ்நாட்டிலுள்ள 39 ஆயிரத்திற்கு மேற்பட்ட நீர்நிலைகளின் உண்மையான கொள்ளளவுத் திறனை மீட்பதற்காக எங்களுடைய தரப்பில் திட்டம் ஒன்றை நாங்கள் தயாரித்துள்ளோம்.

இதுவரையில் புறக்கணிக்கப்பட்டு வந்த கால்நடைப் பராமரிப்புத்துறைக்கும் என்னுடைய அரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்துள்ளது. என்னுடைய தேர்தல்

வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் கறவை மாடுகள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளை ஊரகப் பகுதிகளில் உள்ள ஏழைக் குடும்பங்களுக்கு விலையில்லாமல் வழங்குகிற திட்டம் ஒன்றை மாநில அரசு வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளது. இத்திட்டம் ஊரக வருமானத்திற்கு குறிப்பாக ஏழை மக்களின் வருமானத்திற்கு துணை செய்வதாக உள்ளது. வேளாண்மை மற்றும் கால்நடைப் பராமரிப்பிற்கு ஒருங்கிணைந்த அணுகுமுறையை மேம்படுத்தும் வகையில் இத்திட்டம் அமைந்துள்ளது.

மாநில அரசின் வேளாண்மை மற்றும் அது சார்ந்த துறைகளில் முன் எப்போதும் இருந்திராத அளவுக்கு செய்யப்படுகிற முதலீட்டிற்கும், முன்னேற்றத்திற்கும் மத்திய அரசு போதிய அளவு உதவியும், ஆதரவும் அளிக்கவேண்டியது அவசியமாகும். தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 2012–2013ஆம் ஆண்டில் 650 கோடி ரூபாய்க்கும் குறையாமல் நிதியுதவி அதிகரிக்கப்பட வேண்டுமென்று மாநில அரசு கோருகிறது. தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மாநிலத் திட்டத்திற்கு இந்த அளவிலான நிதியுதவியைப் பரிந்துரைக்க வேண்டுமென்று நான், மத்தியத் திட்டக் குழுவை வலியுறுத்துகிறேன். முதன்மைத் துறைக்கான அதிகரிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டுடன் தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நிதியுதவியை இணைக்கிற தற்போதைய நிதியுதவி முறையானது, பெரிய பாசனத் திட்டங்களுக்கு மிகக் குறைந்த அளவிலான பாசன வளங்களைக் கொண்டுள்ள தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு நியாயமற்றது என்பதை நான் வலியுறுத்த விழைகிறேன். இது, பயனில்லாத கொள்கைத் திட்டத்திற்கு மற்றொரு எடுத்துக்காட்டாகும். இது, வேளாண்மையை மேம்படுத்துவது பணவீக்கத்தை குறைப்பது என்ற நாட்டின் குறிக்கோள்களை எய்துவதற்கு உதவாது.



**"உழவர்கள் தங்களின் கடன்களை முறையாகவும் உரிய காலத்திலும் திருப்பிச் செலுத்தும் வகையில், வட்டியில்லாத பயிர்க்கடன்களை எனது தலைமையிலான அரசு வழங்கி வருகிறது அறுவடைக்குப்பின் பயிர்களை சேமிக்க போதிய சேமிக்கும் வசதிகள் இல்லாத உழவர்களுக்கு, 2011–2012ஆம் நிதியாண்டில் மகத்தான திட்டமாக நவீன சேமிப்புக் கிடங்குகளை ரூ.274.97 கோடி மதிப்பில் கட்டித்தரத் தொடங்கியுள்ளது. இத்திட்டம் இவ்வாண்டும் ரூ.300 கோடி மதிப்பில் விரிவாக்கப்படுகிறது".**

### வறுமையை ஒழிப்பதில் தமிழகம் திட்டவட்டம்

நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கு, தெளிவான தொலைநோக்கும் விரிவான உத்தி மற்றும் முக்கியமான துறைகளில் பெருமளவிலான முதலீடு தேவைப்படுகிறது. இந்த நோக்கத்தை எய்துவதற்காக, நான் தமிழ்நாட்டிற்காக "தொலை நோக்குத்திட்டம் 2023" என்ற வெளிப்படையான தொலைநோக்கு ஆவணம் ஒன்றைத் தயாரித்து அளித்துள்ளேன். இத்திட்டம் இரட்டை இலக்கு வளர்ச்சி விகிதத்தை தேசிய சராசரி வளர்ச்சிக்கு மேல் குறைந்த அளவு 1 விழுக்காட்டிற்கும்மேல் வளர்ச்சியை எய்த விழைகிறது. இந்த பதினொரு ஆண்டுகளில், மாநிலம், உயர் நடுத்தர வருமான நாடுகளின் தற்போதைய நபர் வீத வருமானத்தைக் கருத்தில் கொண்டு எமது மாநில நபர் வீத வருமானத்தில் 6 மடங்கு வளர்ச்சியை எய்த விழையும். இந்த உயர் பொருளாதார வளர்ச்சி உள்ளடங்கிய வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பில் பிரதிபலிக்க வேண்டும் என்பதில் நான் மிகவும் திட்டவட்டமாக இருக்கிறேன். அதற்கிணங்க இந்த நோக்கத்தை எய்துவதற்கான எமது உத்தி பலதரப்பட்டதாக இருக்கும். மாநிலத்தின் பொருளாதாரத்தில் உற்பத்தித் துறையின் பங்கை அதிகரித்தல் வேளாண் உற்பத்தித் திறனை மேம்படுத்தல் திறன் மேம்பாடு மற்றும் மனித வள ஆற்றல் ஆகியவற்றின்மீது கவனம் செலுத்துதல் ஆகியவற்றை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். பொருளாதார வளர்ச்சியைத் தூண்டி முனைப்பு மிக்கதாகச் செய்கிற முக்கியமான உள் கட்டமைப்பு வசதித் திட்டங்களில் மொத்தம் ரூபாய் 15 இலட்சம் கோடியை முதலீடு செய்ய நாங்கள் திட்டமிட்டுள்ளோம். பெரிய உள் கட்டமைப்பு வசதித் திட்டங்களுக்கு விரைவில் மதிப்பீடு செய்யவும் ஒப்புதல் அளிக்கவும் நிறுவன ரீதியான அமைப்பை வகை செய்யுமாறு தமிழ்நாடு உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு வாரியத்தை சட்டபூர்வமாக ஏற்படுத்தியுள்ளோம். இந்த வாரியம், மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு–தனியார் பங்கேற்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு முகவர் அமைப்பாக இருப்பதுடன் இந்த நடவடிக்கைகள் தொடர்புடைய அனைத்துத் திட்டங்களையும் தொடக்கம் முதல் நிறைவேற்றி முடியும் வரையில் கண்காணிக்கும். மத்திய அரசு, பற்றாக்குறையை நிறைவு செய்யும் நிதியுதவிமூலம் இந்த திட்டங்களுக்குத் தாராளமாக நிதியாதாரம் அளிக்குமென்று நான் எதிர்பார்க்கிறேன். இருப்பினும் இந்தத் திட்டங்களை வாரியம் கூர்ந்தாய்வு செய்வதைக் கருத்திற்கொண்டு, பற்றாக்குறையை நிறைவு செய்தும் நிதியுதவி அளிப்பதற்காக, மத்திய அரசு இவற்றை இணை மதிப்பீடு செய்யவேண்டிய அவசியம் ஏதும் இருக்காது.

பொருளாதார மற்றும் சமூகக் குறியீட்டை பொறுத்தவரையில் மாநிலத்திற்குள், மாவட்டங்களுக் கிடையேயும் வட்டாரங்களுக்கிடையேயும் வளர்ச்சி விகிதங்களில் வேறுபாடுகள் இருத்தல் குறித்து நான் மிகவும்

வருந்துகிறேன். சுகாதாரம், கல்வி, வறுமை மற்றும் வேலையின்மை போன்ற துறைகளில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட திட்டங்கள் மூலம் இந்த வட்டார வேறுபாடுகளை சரிசெய்வதற்காக, தமிழ்நாடு அரசு, இந்த ஆண்டில் தொடக்க நிலையில் ரூபாய் 100 கோடியுடன் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியை உருவாக்கியுள்ளது. இது வருகிற ஆண்டுகளில் அதிகரிக்கப்படும்.

**தேசிய நகர்ப்பகுதி புதுப்பித்தல் திட்டம் தொடங்காதது அதிர்ச்சி அளிக்கிறது**

தமிழ்நாட்டில் 48.45 சதவீதம் மக்கள் நகர்ப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். நாட்டிலேயே தமிழ்நாடு, மிகவும் நகர்மயமாக்கப்பட்ட மாநிலமாக இருந்து வருகிறது. இம்மாநிலம், திடக்கழிவு மேலாண்மை, திரவக்கழிவு மேலாண்மை, போக்குவரத்து நெரிசல், நகர்ப்பகுதி வீட்டுவசதி போன்ற நகர்மயமாக்கலுடன் தொடர்புடைய பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கிறது. இந்தப் பிரச்சினைகளில் பெரும்பாலானவை ஜவகர்லால் தேசிய நகர்ப்பகுதிப் புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் கையாளப் பட்டன. இத்திட்டம், முதலீட்டுத் தேவைகளின் ஒரு பகுதிக்கு நிதியளித்தது. எனினும், மத்திய அரசு இத்திட்டத்தின் கீழ் தொடர்ச்சியான ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்பகுதிப் புதுப்பித்தல் திட்டம் நிலை IIனை இதுவரையில் தொடங்காததை அறிந்து நான் அதிர்ச்சியடைகிறேன். இதனால், நகர்ப்பகுதி மூலதன முதலீட்டுத் திட்டங்களுக்கு நிதியளிக்கப்படாமல் இருக்கிறது. மேலும், குடிசைப் பகுதிகளற்ற மாநகரங்களை உருவாக்குவதற்கு ராஜீவ் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் அனுமதிகள் விரைந்து பெறப்பட வேண்டியிருக்கிறது. இந்த திட்டங்களின் செயல்பாட்டில், பணி முன்னேற்றத்தினை ஆய்வு செய்யுமாறு மாநிலத் திட்டக் குழுவினை நான் வலியுறுத்துகிறேன். அதே நேரத்தில், தமிழ்நாடு, நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கணிசமான அளவில் நிதியுதவி அளித்து வருவதை நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 1,250 கோடி ரூபாய் ஆண்டு நிதியொதுக்கீட்டுடன் சென்னை மாநகருக்கான சென்னைப் பெருநகரத் திட்டம் மற்றும் ஏனைய மாநகரங்கள் மற்றும் நகரங்களுக்கான ஒருங்கிணைந்த நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் என நான் இரண்டு செயல்முறைத் திட்டப் பணிகளைத் தொடங்கியுள்ளேன். முதலாம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள், முடியும் தருவாயில் உள்ளன.

**மாநகரங்களில் பொது பயணச்சீட்டு முறை**

எனது அரசு, மாநகரங்களின் உள்ளே உள்ள போக்குவரத்திற்கு உதவிடவும், தனியார் முதலீட்டை ஈர்க்கவும், நகர்ப்பகுதிப் போக்குவரத்திற்கு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகளை விரைவுபடுத்தி வருவதுடன், 8,500 கோடி ரூபாய் செலவில் சென்னை மோனோ இரயில் திட்டத்தின் நிலை – Iக்கு உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஏலங்களுக்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளன. பயணிகள் இடர்பாடின்றி பயணம் செய்வதற்காக, பொதுவான பயணச்சீட்டு ஏற்பாட்டு முறை வாயிலாக சென்னை மாநகரில், பொதுப் போக்கு வரத்தின் அனைத்து முறைகளையும் ஒருங்கிணைக்க நான் வகை செய்து ள்ளேன். இந்தத் தொலைநோக்கினை எய்துவதற்காக நாங்கள், சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து ஆணையத்தை செயலுக்குக் கொண்டு வந்துள்ளோம். இம்மாநிலம், விரைவுப் போக்குவரத்துப் பெருவழிப் பாதைகளை மேம்படுத்தவும் கருதுகிறது.

மத்திய அரசு, சுதந்திரப் பொன்விழா நகர்ப் பகுதி வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு சொற்ப ஆதரவு அளித்து வருவதால், நகர்ப்பகுதி வறுமை குறைவாக மதிப்பிடப்படுகிறது. மாநிலத்திலுள்ள நகர்ப்பகுதி ஏழைக்கு உற்ற துணையாக இருப்பதால், எனது அரசு, 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் தமிழ்நாடு நகர்ப்பகுதி வாழ்வாதாரத் திட்டத்தினை தொடங்கியுள்ளது. நகர்ப்பகுதி ஏழைக்கு வாழ்வாதாரப் பாதுகாப்பிற்கு வகை செய்வதன் வாயிலாக, நகர்ப்பகுதி வறுமையினை எதிர்கொள்ளும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்படுகிறது. செயல் திட்டப் பணி முறையில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு மத்திய அரசை

**"எனது அரசு, மாநகரங்களுக்கிடையிலான போக்குவரத்திற்கு உதவிடவும், தனியார் முதலீட்டை ஈர்க்கவும், நகர்ப்பகுதிப் போக்குவரத்திற்கு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகளை விரைவுபடுத்தி வருவதுடன், 8,500 கோடி ரூபாய் செலவில் சென்னை மோனோ இரயில் திட்டத்தின் நிலை–Iக்கு உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஏலங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளன. பயணிகள் இடர்பாடின்றி பயணம் செய்வதற்காக, பொதுவான பயணச்சீட்டு ஏற்பாட்டு முறை வாயிலாக சென்னை மாநகரில், பொதுப் போக்குவரத்தின் அனைத்து முறைகளையும் ஒருங்கிணைக்க வகை செய்துள்ளேன்".**

அறிவுறுத்துமாறு மத்தியத் திட்டக் குழுவிடம் நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்ப்பகுதிகளுக்கிணையாக ஊரகப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கும் தரமான பொது உள்கட்டமைப்பு வசதிக்கு வகை செய்யப்பட வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். இந்தக் குறிக்கோளுடன் எனது அரசு, தமிழ்நாடு கிராம குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் (THAI) என்று அழைக்கப்படுகின்ற ஒருங்கிணைந்த ஊரகக் உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக, மாநில அரசு, குடியிருப்பு அடிப்படையிலான அணுகுமுறை என்ற புதுமையான திட்டத்தினை மேற்கொண்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் அனைத்து ஊரகக் குடியிருப்புகளிலும் இது செயல்படுத்தப்படும். ஊரக உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியின் கீழ் நபார்டு வங்கியிடமிருந்து பெற்ற கடனுதவியைப் பயன்படுத்தி பாசனம், ஊரகச் சாலைகள் மற்றும் குடிநீர் வழங்கல் போன்ற துறைகளில் பெரும் எண்ணிக்கையில் ஊரக உள்கட்டமைப்பு வசதி திட்டப் பணிகளையும் தமிழ்நாடு மேற்கொண்டுள்ளது. எனினும், ஊரக உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதி கடனுக்கான வட்டி வீதம் 6.5 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதை அறிந்து நான் வருந்துகிறேன். இது, மாநிலங்களுக்கு நிதியுதவி கிடைப்பதைத் தடுக்கிறது. இந்த வட்டி விகித உயர்வின் பின்னணியானது முன்னுரிமைத் துறைக்கு கடன் வழங்கும் கடப்பாடுகளை நிறைவேற்றாத வணிக வங்கிகளிடமிருந்து பெற்ற பங்களிப்புத் தொகை மூலம் ஊரக உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதிக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது என்ற எண்ணத்தை எனக்கு ஏற்படுத்துகிறது. இந்திய ரிசர்வ் வங்கி, இந்த வணிக வங்கிகளுக்கு ஏற்றவாறு முன்னுரிமைத் துறை கடன் வழங்கும் வாய்ப்பை அதிகரித்ததோடு மட்டுமின்றி, ஊரக உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியின் கடன் வழங்கும் விகிதங்களில் ஏற்பட்டுள்ள இந்த உயர்வு அவற்றின் கவனத்தை ஊரக ஏழை மக்கள் மற்றும் உழவர்களிடமிருந்து திசை திருப்பியதுடன், தொகையைத் திரும்ப செலுத்துவதற்கான உத்தரவாதத்துடன் மாநில அரசுகளுக்குக் கடன் வழங்குவது குறித்து அதனுடைய கவனத்தைத் திசை மாற்றியுள்ளது. நான் ஏற்கெனவே இது குறித்து பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளேன். ஊரக உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதி கடன்களுக்கான வட்டி விகிதத்தைக் குறைப்பதற்குப் பரிந்துரைக்குமாறு மத்தியத் திட்டக் குழுவிடம் நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

2001ஆம் ஆண்டில் இரண்டாம் முறையாக முதலமைச்சராக நான் பதவியேற்றுக்கொண்ட பின்னர், நிதிக் கட்டுப்பாட்டினை உறுதி செய்வதன் பேரில் போக்குவரத்து மற்றும் மின்சார

சேவைகளை நான் மீட்டெடுத்தேன். ஏனைய அனைத்தைக் காட்டிலும் இதன் நலனில் அக்கறைகொண்டு இந்த விருப்பமில்லாத மற்றும் மிகுந்த கவலை தருகின்ற பணியினை மீண்டும் ஒரு முறை நான் மேற்கொள்கிறேன். அண்டை மாநிலங்களைக் காட்டிலும் குறைந்த செலவில் முனைப்பான மற்றும் நம்பகம் வாய்ந்த பொதுச் சேவைகளை வழங்குவதற்கு அத்தியாவசிய சேவைகளின் திறனை இது உயர்த்தியுள்ளது. எனினும், வீட்டுப் பயன்பாட்டிற்கு மானியமளிக்கப்பட்ட கட்டண விகிதமும் வேளாண் பம்பு செட்டுகளுக்கு இலவச மின்சாரமும் வழங்கப்படுவதாலும் மின் கட்டணம் திருத்தியமைக்கப்பட்ட போது, மாநிலத்திற்குப் பெரும் சுமை ஏற்பட்டுள்ளது. மாநிலத்தின் மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு மட்டுமே, இந்த நிதியாண்டில், இந்த மானியத்தொகை 4,000 கோடி ரூபாயை விஞ்சிவிடும்.

**கூடங்குளம் அணு மின்நிலையத்திலிருந்து 1,000 மெகாவாட் மின்சாரம் தேவை**

முந்தைய திமுக அரசு மின்சாரத் துறையை ஒட்டுமொத்தமாகத் தவறாக நிருவகித்ததன் காரணமாக, எனது அரசு கடுமையான மின்சாரப் பற்றாக்குறையை எதிர்கொண்டு வருகிறது. மின்சாரத் தேவைக்கும் மின் வழங்கலுக்கு மிடையிலான 3,000 முதல் 4,000 மெகாவாட் இடைவெளி, மின் தேவையின் சுமார் மூன்றில் ஒரு பங்கினைக் குறிக்கிறது. 12ஆவது திட்டக்காலத்தின் இறுதியில், எதிர்பார்க்கப்படும் மின்சாரத் தேவையானது 18,311 மெகாவாட் என்று மதிப்பிடப்பட்டிருக்கையில், தற்போதைய இருப்பு சுமார் 8,500 மெகாவாட் மட்டுமே ஆகும். இத்தகைய மின் தட்டுப்பாடு, தயாரிப்புத் துறை மற்றும் நாட்டின் வளர்ச்சியில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கூடங்குளம் அணுமின் தளவாடத்தின் முதலாவது பிரிவிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு, மத்தியத் தொகுப்பிலுள்ள 1,000 மெகாவாட் மின்சாரம் முழுவதையும் ஒதுக்கீடு செய்யுமாறு கேட்பதற்கு இதுவே வழி வகுத்தது. இந்த இடைவெளியை இட்டு நிரப்ப, மின்துறையில் கணிசமான முதலீடு தேவைப்படுகிறது. இதற்காக, நான் மத்திய அரசின் உதவியைக் கோரியுள்ளேன். மாநில மின் சேவைகளால் ஏற்படுத்தப்படவிருக்கின்ற பெரிய அளவிலான மின்உற்பத்தி தளவாடங்களுக்கு சலுகை ரீதியில் நிதியுதவி சாளரம் உருவாக்குவதற்கு இது மிகவும் உகந்த நேரமாகும். குந்தா நீர்மின் திட்டம் மற்றும் ஏனைய புதிய திட்டச் செயற்குறிப்புகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் விரைந்து திட்ட அனுமதிகளைப் பெறுவது மிகவும் அவசியமானதாகும். மின் தளவாடங்களின் உயரளவு திறனை எய்தச் செய்யும் வகையில், எரிபொருள் வழங்கல் ஒப்பந்தங்கள் மற்றும் நிலக்கரி பெறுதல் நிலை குறித்து முடிவு செய்வதற்கும் முன்னுரிமை அடிப்படையில் கவனம் அளிக்கப்பட வேண்டியிருக்கிறது. வங்கிக் கடன்களை மறு அட்டவணைச் செய்து, மின் அனுப்புகைக் கழகத்திற்கும், தேசிய அனல் மின் கழகத்திற்கும் தொகைகள் வழங்கும் வகையில் மின் சேவைகளுக்கான பயனுடைய புதுப்பித்தல் திட்டம் ஒன்றை B.K. சதுர்வேதி குழு வகுக்கும் என நான் நம்புகிறேன். மின்சாரம் உபரியாக உள்ள மாநிலங்களிலிருந்து மின் பற்றாக்குறை மாநிலங்களுக்கு மின்சாரம் எடுத்துச் செல்வதிலுள்ள இடர்பாடுகளை அகற்றுவதற்கு, உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் மத்திய அரசிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இத்தருணத்தில், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகவரமைப்பின் நிதியுதவியுடன் 3,573 கோடி ரூபாய் செலவில், மாநிலம், மின் அனுப்புகைக் கட்டமைப்பினை வலுப்படுத்தி வருவதை நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். காற்றாலை மின்சக்தியினை அதிகரிப்பதற்கும், வேளாண்மைக்கான தனி மின்சக்திக்கும் நிதியுதவி குறித்து மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள செயற்குறிப்புகள் தொடர்பான ஆணை பெறப்படுவதற்கு மத்திய திட்டக்குழு உதவுமாறு நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

காற்றாலை மற்றும் சூரிய சக்தியை மேம்படுத்துவதற்கும், குண்டு பல்புகளுக்குப் பதிலாக பாதரச ஆவி விளக்குகளைப் பயன்படுத்துவதன்

**"தமிழ்நாடு, சுகாதாரத்துறையில், அதன் சாதனைகளுக்காகப் பின்பற்றத்தக்க மாநிலமாக விளங்கி வருகிறது. இம்மாநிலம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டமானது, ஏழை மக்களுக்கு, 4 ஆண்டுகளுக்கு 4 இலட்சம் ரூபாய் அளவிற்கு இலவச மருத்துவக் காப்பீட்டிற்கு வகை செய்கிறது. அரசு மருத்துவமனைகளும் இத்தகைய காப்பீட்டு சேவைகளை வழங்கி மருத்துவமனைகளின் மேம்பாட்டிற்கு வருவாயை இருத்தி வைக்கும் என்பது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்".**

வாயிலாக மின் தேவையை நிறைவு செய்வதற்கும் எனது அரசு முயற்சிகளை எடுத்துள்ளது. எனது அரசு, சூரிய சக்தியுடன் கூடிய, பசுமை வீடுகள் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்கீழ், ஊரகப் பகுதிகளில் ஆண்டுதோறும் 1,080 கோடி ரூபாய் செலவில் ஏழைக் குடும்பங்களுக்கு, சூரிய சக்தி விளக்குகளுடன் கூடிய 60,000 பசுமை வீடுகள் கட்டித் தரப்படும். வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள திட்டங்களுக்கான மாநில ஒதுக்கீடு செய்யப்படுவதற்கும், மாநிலங்களைச் சமமாக நடத்துவதற்கும் ஏற்ற வகையில் தேசிய சூரிய சக்தித் திட்டத்தின் வழிகாட்டிக் குறிப்புகளை ஆய்வு செய்யுமாறு திட்டக் குழுவிடம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

**சுகாதாரத்துறையில் பின்பற்றத்தக்க மாநிலம் தமிழகம்**

தமிழ்நாடு, சுகாதாரத்துறையில், அதன் சாதனைகளுக்காகப் பின்பற்றத்தக்க மாநிலமாக விளங்கி வருகிறது. இம்மாநிலம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டமானது, ஏழை மக்களுக்கு, 4 ஆண்டுகளுக்கு 4 இலட்சம் ரூபாய் அளவிற்கு இலவச மருத்துவக் காப்பீட்டிற்கு வகை செய்கிறது. அரசு மருத்துவ மனைகளும் இத்தகைய காப்பீட்டு சேவைகளை வழங்கி மருத்துவ மனைகளின் மேம்பாட்டிற்கு வருவாயை ஈட்டித்தரும் என்பது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும். நாட்டிலேயே தமிழ்நாட்டில் ஒவ்வொரு மகப்பேறுக்கும் 12,000 ரூபாய் என்ற வகையில் இலவச மகப்பேறு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் அரசு மருத்துவ நிலையங்களில் மகப்பேறு நிகழ்வதற்கும், குழந்தைக்குத் தடுப்பூசி போடுவதற்கும் அரசுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இம்மாநிலம், 10–19 வயது தொகுதியிலுள்ள ஊரக வளரிளம் பெண்களுக்கு 41 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், இலவசமாக சானிடரி நாப்கின்கள் வழங்கும் மாதவிடாய் சுகாதாரத் திட்டம் ஒன்றையும் தொடங்கி யுள்ளது. இம்மாநிலம், மத்திய அரசின் தேசிய ஊரக சுகாதாரத் திட்டம் வாயிலாக சுகாதாரத் துறையில் உறுதியான மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது. எனவே, இதன் அடிப்படையில், தேசிய நகர்ப்பகுதி சுகாதாரத் திட்டம் ஒன்றைத் தொடங்குவதென்ற மத்திய அரசின் முடிவினை நான் வரவேற்கிறேன்.

**மடிக்கணினி வழங்கும் திட்டம் தேசிய முன்மாதிரித் திட்டமாக அமையும்**

இம்மாநிலம், கல்விக்கு உயர் முன்னுரிமை அளித்துள்ளது. குழந்தைகளுக்கு அவர்கள் பள்ளிப் படிப்பை முடிப்பதற்கு ஊக்கத்தொகை அளிக்கப்பட்டு வருகிறது. இதன்படி, உயர் வகுப்பு மாணவர்களுக்கு ரொக்க ஊக்கத்தொகைகள் வழங்கப்படுவதுடன்,

நான்கு இணை சீருடைகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், அட்லஸ் மற்றும் ஜாமெண்ட்ரி பெட்டிகள் (Geomentry box) உள்ளிட்ட கற்றல் சாதனங்களுடன், குறிப்பாக காலணி ஆகியவை விலையில்லாமல் வழங்கப்படுகின்றன. கல்லூரி மாணவர்களுக்கும், 11 மற்றும் 12 ஆம் வகுப்புப் பயிலும் மாணவர்களுக்கும் இலவசமாக மடிக்கணினிகள் வழங்கும் திட்டமானது எனது அரசின் முதன்மைத் திட்டங்களில் ஒன்றாகும். மாணவர்களின் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இத்திட்டமானது, நாடு முழுவதும் முன் மாதிரியாக எடுத்துக் கொள்ளப்படும் என நான் நம்புகிறேன். இத்திட்டங்கள் தேசிய அளவில் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றன. இத்தகைய முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்து வதற்கு தமிழ்நாட்டிற்கு நிதி வகையில் உதவி அளிக்கப்பட வேண்டும். இடைநிலைக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறைக்கு மத்திய அரசு வழங்கும் நிதி எனக்கு மனநிறைவளிக்கவில்லை. அனைவருக்கும் இடைநிலைக் கல்வி என்ற நோக்கத்தை எய்துவதற்கு, தேசிய இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் செய்யப்படும் ஒதுக்கீடு கணிசமான அளவிற்கு அதிகரிக்கப்பட வேண்டியிருக்கிறது.

சிறப்பாகச் செயல்படுபவர்களுக்கு போதுமான வகையில், அதிகளவில் நிதியுதவியளிக்கப்பட்டு, பல்வேறு திட்டங்கள் மற்றும் திட்டப் பணிகளை நெகிழ்வான தன்மையுடன் செயல்படுத்தும் நிலையில் மட்டுமே, 12 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிக்கோள்கள் எய்த இயலும். எனது அரசு, எண்ணற்ற நலத் திட்டங்களை வெற்றிகரமாய் செயல்படுத்தி வருகிறது. இவற்றில் சிலவற்றை நான் ஏற்கெனவே எடுத்துரைத்துள்ளேன். இத்திட்டங்களில் சில, மத்திய அரசுத் திட்டங்களின் நோக்கங்களை ஒத்திருக்கின்றன. மாநிலங்களுக்கு அதிகளவில் மத்திய நிதி கிடைக்கப் பெறுமாயின், அத்தகைய பிரபலமான மாநிலத் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துவதற்கு உதவிடும்.

இக்கூட்டத்தை நடத்திய மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவருக்கும், உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு எனது கருத்துகளையும், தமிழ்நாடு அரசின் தேவைகளையும் என்னால் தெரிவிக்கமுடிந்தது. எனது அரசால் எடுக்கப்பட்ட கடும் முயற்சிகளையும், வெற்றிகளையும் மத்தியத் திட்டக்குழு கருதிப்பார்த்து, மாநிலத் திட்டங்களுக்கு அதிகளவு நிதியுதவி அளிப்பதன் வாயிலாக எங்களுடைய புதுமையான திட்டங்களுக்கு ஆதரவளிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

2011–2012 ஆம் ஆண்டில் மத்தியத் திட்ட ஆணையத்தின் துணைத் தலைவர், ஒரு முறை அளிக்கப்படும் கூடுதல் மத்திய நிதியுதவியின் 30 சதவீதமான ரூ.160 கோடியை, ஒதுக்கீடு செய்தார். வரையறைகளின்படி, 70 சதவீத மாநில நிதி இதற்கு இணையாக அமைந்துள்ளது.

இந்த ஆண்டு பின்வரும் திட்டங்களுக்காக 30 சதவீத பங்களிப்புத் தொகையாக ரூ.250 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்று நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

சென்னை மாநகரில் கழிவுநீர் மேலாண்மை மற்றும் நீர் நிலைகளின் பாதுகாப்பிற்கு ரூ.150 கோடி.

புதிய நீர்த் தேக்கங்களை அமைப்பதன் வாயிலாகவும், தற்போதுள்ள குடிநீர் ஆதாரங்களை மீட்பதன் வாயிலாகவும் குடிநீர் வழங்கலை அதிகரித்தல் திட்டத்திற்கு ரூ.100 கோடி ஆக மொத்தம் ரூ.250 கோடியை எதிர்பார்க்கிறோம்.

இந்தத் திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதற்கு மாநில அரசு 70 சதவீத நிதியாதாரங்களை வழங்கும்.

கூடங்குளம் அணுமின் நிலையத்தைச் சுற்றி வசிக்கின்ற உள்ளூர் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக நிதியுதவி அளிக்குமாறு நான் தனிப்பட்ட முறையில் மாண்புமிகு பாரதப் பிரதமரிடம் கோரிக்கை வைத்துள்ளேன். உள்ளூர் மக்களின் இந்த இன்றியமையாத் தேவைகளை நிறைவு செய்வதற்காக சிறப்புத் தொகுப்பு நிதியுதவியாக ரூ.500 கோடியை மத்திய அரசு வழங்கலாம் என்றும் நான் குறிப்பிட்டிருந்தேன். மத்திய அரசு இந்தத்

# பதக்கம் வென்ற பளுதூக்கும் வீராங்கனைக்கு ரொக்கப்பரிசு!



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் 10.5.2012 அன்று தலைமைச் செயலகத்தில், 2011–ஆம் ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற ஆசிய பளுதூக்கும் சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற செல்வி கே. மாலா அவர்களுக்கு சிறப்புப் பரிசாக மூன்று இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசினை வழங்கினார்கள்.

தேவைகளைக் கவனத்தில் கொள்ளும் என தெரிவித்ததன் மூலம் மாண்புமிகு பாரதப் பிரதமர் அதற்கு ஒப்புக் கொண்டுள்ளார். அதற்கிணங்க பாரதப் பிரதமர் அலுவலகத்துடன் முறையான கடிதப் போக்குவரத்துகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்சொன்ன ரூ.500 கோடியில், ரூ.300 கோடி, அணுமின் நிலையத்தைச் சுற்றி வசிக்கின்ற பத்தாயிரம் மக்களுக்கு வீட்டுவசதி அளிப்பதற்குத் தேவைப்படும். இத்தொகையினை அடுத்து வருகின்ற மூன்றாண்டுகளில் அதாவது 2012–2013ஆம் ஆண்டுகளில் ரூ.150கோடி, 2013–2014ஆம் ஆண்டுகளில் ரூ. 90 கோடி மற்றும் 2014–2015ஆம் ஆண்டுகளில் ரூ. 60 கோடி என செலவிடுவதற்கு கருதப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள ரூ.200 கோடியானது மீன்களைக் கரை இறக்கும் மையம், குளிர்பதன வசதிகள், மோட்டார் படகு பழுதுபார்ப்பு பணிப்பட்டறை முதலியன போன்ற ஏனைய அடிப்படைத் தேவைகளை எதிர்கொள்வதற்கு அணுமின் கழகத்தின் கூட்டாண்மை சமூக பொறுப்புறுதித் திட்டங்களின்கீழ் செலவிடப்படும். மாநில அரசு, அணுமின் எதிர்ப்புப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பெரு முயற்சிகளை எடுத்து வந்துள்ளது. மாநில அரசின் இந்த முயற்சியானது மத்திய அரசின் அணுமின்சக்தி குறித்த நீண்ட காலக் கொள்கைக்குப் பயன் அளிக்கும். எனவே, மத்திய அரசால் சிறப்பாக நடத்தப்பட இம்மாநில அரசு தகுதியுடையதாகிறது. மாநிலத்தின் ஏற்கெனவே உரிமையுடைய ஆதாரங்களில் சரிகட்டுவதன் வாயிலாக, அவர்களின் ரூ.300 கோடி பொறுப்பினை ஈடுசெய்வது மத்திய அரசுக்கு முறையாக இருக்காது. எனவே, மத்திய அரசு, திட்ட நடவடிக்கைக்கு வெளியே ரூ.300 கோடி வகை செய்வதன் வாயிலாக அதன் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்,
18.6.2012 அன்று திருவேற்காடு
அருள்மிகு தேவி கருமாரியம்மன்
திருக்கோயில் அருகில்
இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில்
நடைபெற்ற 1006 ஜோடி மணமக்கள்
திருமண விழா நிகழ்ச்சியில் கலந்து
கொண்டு, திருமணங்களை நடத்தி வைத்து
ஆற்றிய உரை.

# மணமக்கள் ஒற்றுமையுடன் துன்பத்தைத் தகர்த்தெறிந்தால் வாழ்க்கை சுவைக்கும்!

இந்த இனிய திருமண விழாவில் தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. டி. ஜெயக்குமார் அவர்களே!

வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. எம்.எஸ்.எம்.ஆனந்தன் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

வரவேற்புரை நல்கிய தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. தேபேந்திரநாத் சாரங்கி அவர்களே!



நன்றியுரை ஆற்ற உள்ள தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு. மூ.இராசாராம் அவர்களே!

இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு. ஜெ. சந்திரகுமார் அவர்களே!

மணமக்களே! மணமக்களின் பெற்றோர்களே! உற்றார், உறவினர்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே!

என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமான, என் உயிரினும் மேலான, எனதருமை உடன்பிறப்புகளே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது கனிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எப்பிறவியிலும் ஓடோடி வந்து உதவி புரியும் தாயாக, அருள் மழை பொழியும் அகில உலக அன்னையாக விளங்கும் திருவேற்காடு கருமாரியம்மனின் திருவருளால் திக்கெட்டும் வியக்கும் வண்ணம் 1006 இணைகளுக்கான திருமணங்கள் இன்று நடந்தேறியுள்ளன.

இந்த 1006 திருமணங்களையும் ஒரு சேர நடத்தி வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் திருவேற்காட்டிற்கு வந்து, திருமணம் புரிந்து கொண்டு, இல்லற வாழ்வில் இன்று அடியெடுத்து வைத்திருக்கும் மணமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் அன்புச் சகோதரியின் அரசு இன்று 1006 குடும்பங்களில் விளக்கேற்றி வைத்திருக்கிறது. இந்த விளக்குகள் என்றென்றும் ஒளிவீசித் திகழ வேண்டும் என்று மனதார வாழ்த்துகிறேன்.

கல்யாணம் பண்ணுவது என்பது அவ்வளவு எளிதல்ல என்பதை உணர்த்தவே "கல்யாணம் பண்ணிப்பார்; வீட்டைக் கட்டிப்பார்" என்ற பழமொழியை நம் முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள். இதனை உணர்ந்த நமது இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1982 ஆம் ஆண்டு இலவசத் திருமணத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

1991 முதல் 1996 வரை நான் முதலமைச்சராக இருந்த போது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சிதம்பரத்தில் 2,500 திருமணங்களையும், திருச்சியில் 5,004 திருமணங்களையும் நடத்திக் காட்டினோம்.

இரண்டாவது முறையாக நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, இந்துசமய அறநிலையத் துறையின் சார்பில் 2002 ஆம் ஆண்டு 1,008 திருமணங்களையும்; 2003-ஆம் ஆண்டு 1,053 திருமணங்களையும் இதே திருவேற்காட்டில் நான் நடத்தி வைத்தேன்.

மூன்றாவது முறையாக முதலமைச்சராக நான் பொறுப்பேற்றவுடன், திருமண வயதைத் தாண்டியும் திருமணம் செய்ய முடியாமல் ஏழை, எளிய பெண்கள் வாடிக் கொண்டிருப்பதைக் கருத்தில் கொண்டு, ஏழைப் பெண்களுக்கு வழங்கப்பட்டு வரும் திருமண நிதி உதவித் தொகையான 25,000 ரூபாயுடன் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கம் வழங்க உத்தரவிட்டேன். பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், பட்டம் அல்லது பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்குத் திருமண உதவித் தொகையை 50,000 ரூபாயாக உயர்த்தி வழங்கியதோடு, 4 கிராம் தங்கம் வழங்கவும், ஆணையிட்டேன். இது மட்டுமல்லாமல், மகப்பேறு காலத்தில் வழங்கப்படும் நிதி உதவியை 12,000 ரூபாய் என இரட்டிப்பாக்கி வழங்கியுள்ளேன்.

இன்று நடைபெற்ற திருமணங்கள் சாதி பேதமின்றி ஒரே இடத்தில் நடைபெற்ற சமத்துவத் திருமணங்கள். இன்று, 11 மாற்றுத் திறனாளிகள் உட்பட ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த 611 ஜோடிகளுக்கும்; பழங்குடியினத்தைச் சார்ந்த 34 ஜோடிகளுக்கும்; மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 183 ஜோடிகளுக்கும்; பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 132 ஜோடிகளுக்கும்; இதர வகுப்பைச் சேர்ந்த 46 ஜோடிகளுக்கும் திருமணம் இனிதே நடந்தேறியுள்ளது.

இன்று திருமணம் நடந்தேறியுள்ள புதுமணத் தம்பதிகளுக்கு 4 கிராம் தங்கத் திருமாங்கல்யம்; 6 கிராம் எடையுள்ள 4 வெள்ளி மெட்டிகள்; முகூர்த்தப் புடவை; ரவிக்கை; ஜரிகை வேட்டி; ஜரிகைத் துண்டு; சட்டை; உள்ளிட்ட 28 வகையான சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

திருமணத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்துள்ளதோடு மட்டுமல்லாமல், வெளி மாவட்டங்களைச் சார்ந்த மணமக்கள் மற்றும் அவர்தம் உறவினர்களுக்கான போக்குவரத்து வசதி,

மணமக்கள் மற்றும் உறவினர்களுக்கான தங்கும் வசதி; அவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர் மற்றும் கழிவறை வசதிகள் ஆகியவையும் செய்து தரப்பட்டுள்ளன. கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய தொலைதூர மாவட்டங்களைச் சேர்ந்த மணமக்கள் மற்றும் அவர்தம் உறவினர்கள் இரவுப் பயணத்தைத் தவிர்த்திடும் வகையில் திருச்சியில் 16ஆம் தேதி இரவு தங்க வைக்கப்பட்டு, பின்னர் இங்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

19 திருமண மண்டபங்களில் மணமக்கள் மற்றும் அவர்தம் உறவினர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இது மட்டுமல்லாமல், மணப்பந்தலில் அமர்ந்திருப்பவர்களும், பந்தலுக்கு வெளியே இருப்பவாகளும் நிகழ்ச்சியைக் கண்டுகளிக்கும் வகையில் தொலைக்காட்சி பெட்டிகள் பொருத்தப்பட்டு உள்ளன.

இந்தத் திருமண விழா முடிந்தவுடன், அவர்களுக்கு சிறப்பான திருமண விருந்து வழங்கிடவும், மணமக்கள் சீர்வரிசைப் பொருட்களுடன் அவர்கள் பயணித்து வந்த பேருந்துகள் மூலம் சொந்த ஊர்களுக்குச் செல்லவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மொத்தத்தில், உங்கள் வீட்டுத் திருமணம் போல் அனைத்து வசதிகளையும் எனது தலைமையிலான அரசு செய்துள்ளது.

இல்லறம் என்பது அன்பு செலுத்துவதற்காகவே. அதனால் தான், இல்வாழ்க்கை பண்புடையதாகவும், பயனுடையதாகவும் இருப்பதற்கு அன்பும், அறமும் தேவை என்று வான்புகழ் வள்ளுவர் கூறியிருக்கிறார். அன்பைப் பண்பாகவும், அறத்தைப் பயனாகவும் கொண்ட இல்லற வாழ்க்கையில் இன்று 1006 இணைகள் இணைந்திருக்கின்றன.

இல்லற வாழ்வு என்பது இரு ஆன்மாக்களின், மனங்களின், உணர்வுகளின் முழுமையான இணைப்பு. இந்த இல்லற வாழ்வு இனிமையாக இருக்க வேண்டுமென்றால், சலனமில்லாத, விசாலமான மனம் வேண்டும். பொறுமை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வேண்டும். இன்றைக்குப் பல குடும்பங்களில் அர்த்தமில்லாத சண்டைகள் தான் அதிகம். அவ்வாறு சண்டை போடுபவர்கள்

### சீர்வரிசைப் பொருட்கள்

| | |
|---|---|
| 1. பித்தளை காமாட்சி அம்மன் விளக்கு | 1 |
| 2. எவர்சில்வர் குங்குமச் சிமிழ் | 1 |
| 3. எவர்சில்வர் குடம் | 1 |
| 4. எவர்சில்வர் டிபன் கேரியர் | 1 |
| 5. எவர்சில்வர் அன்னக் கரண்டி | 1 |
| 6. எவர்சில்வர் கரண்டி பெரியது | 1 |
| 7. எவர்சில்வர் கரண்டி சிறியது | 1 |
| 8. எவர்சில்வர் பால் பாத்திரம் | 1 |
| 9. எவர்சில்வர் டம்ளர் | 2 |
| 10. எவர்சில்வர் தட்டு | 2 |
| 11. எவர்சில்வர் வாளி | 1 |
| 12. எவர்சில்வர் சாப்பாட்டுத் தட்டு | 2 |
| 13. எவர்சில்வர் கடாய் | 1 |
| 14. எவர்சில்வர் அடுக்கு பெரியது | 1 |
| 15. எவர்சில்வர் அடுக்கு சிறியது | 1 |
| 16. எவர்சில்வர் அண்டி | 1 |
| 17.எவர்சில்வர் ஜல்லி கரண்டி | 1 |
| 18. எவர்சில்வர் தூக்குப் பாத்திரம் | 1 |
| 19. பாய் | 1 |
| 20. தலையணை | 2 |
| 21. போர்வை | 1 |



அடுத்தவரின் எண்ணத்திலிருந்து சிந்தித்துப் பார்த்தால், சச்சரவுக்கே இடமில்லாது போய்விடும்.

ஓர் ஊரில் வேலைவெட்டி இல்லாமல் ஒருவன் இருந்தான். அவனுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். மனைவியும் வந்து சேர்ந்தாள்.

ஒரு நாள் மனைவி, தனது கணவனைப் பார்த்து, "சும்மாவே உட்கார்ந்து கொண்டு இருக்கிறீர்களே? சம்பாதிக்கிற வழியைப் பாருங்கள்" என்றாள்.

உடனே கணவன், "அது பற்றித் தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். ஒரு அருமையான திட்டம் எனது மனதில் உதித்துவிட்டது" என்று கூறினான்.

"என்ன திட்டம் ?'' என்று ஆவலோடு வினவினாள், அவனது மனைவி.

"ஓர் ஆட்டுக்குட்டி வாங்கப் போகிறேன்" என்றான் கணவன். "சரி" என்றாள் மனைவி.

"அதற்கான பணத்தை நீ தான் உன் அப்பாவிடம் கடனாக வாங்கித் தர வேண்டும். நான் மானஸ்தன். எனக்கு ஒன்றும் இனாமாக வேண்டாம். கடன் கொடுத்தால் போதும்" என்றான்.

இந்தக் கதை நடந்த காலத்தில் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு இல்லை. இருந்திருந்தால், அவர்களுக்கு விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 4 ஆடுகள் கிடைத்திருக்கும்.

"ஆட்டுக்குட்டியை வாங்கி என்ன செய்யப் போகிறீர்கள் ?" என்றாள் மனைவி.

அதற்குக் கணவன், "அந்தக் குட்டி வளரும். பிறகு நிறைய குட்டிகள் போடும்" என்றான்.

"பிறகு என்ன செய்யப் போகிறீர்கள் ?'' என்று கேட்டாள் மனைவி.

"அதையெல்லாம் சந்தையிலே கொண்டு போய் விற்றுவிட்டு, அந்தக் காசுக்கு ஒரு பசு மாடு வாங்குவேன்" என்றான் கணவன்.

''அது எதற்கு ?'' என்று கேட்டாள் மனைவி.

"பசு மாடு நிறைய பால் கொடுக்கும். அதைக் கொண்டு போய் பால் பண்ணையிலே கொடுத்தால் நிறைய காசு கிடைக்கும். பாலையும் விற்கலாம், நாமும் காபி சாப்பிடலாம்; உடல் நலம் இல்லாத எனது தந்தைக்குக் குடிக்கப் பால் கொடுக்கலாம்'' என்றான் கணவன்.

உடனே மனைவி, "அடுத்த தெருவில் இருக்கும் எங்க அம்மா வீட்டிற்கும் கொஞ்சம் பால் கொடுத்தனுப்பலாம்" என்றாள்.

உடனே, கணவனுக்குக் கோபம் வந்துவிட்டது. "அது எப்படி? உங்க அம்மா வீட்டுக்கு எதற்காகக் கொடுக்கணும்? அதெல்லாம் முடியாது.'' என்றான்.

இந்த இடத்தில் சண்டை ஆரம்பமாகிவிட்டது. இரண்டு பேரும் சத்தம் போட ஆரம்பித்து விட்டார்கள்.

கடுமையாகச் சண்டை நடப்பதை அறிந்து, பக்கத்து வீட்டுக்காரன் ஓடி வந்தான். இவர்கள் இருவரும் வாங்காத மாட்டிற்காக சண்டை போட்டுக் கொள்கிறார்கள் என்பது அவனுக்குத் தெரியும்.

இருப்பினும், சண்டை போட்டுக் கொண்டிருக்கும் கணவன் – மனைவியைப் பார்த்து, "உன் மாடு என் தோட்டத்தில் மேய்ந்து பயிரை எல்லாம் நாசப்படுத்திவிட்டது. பத்தாயிரம் ரூபாய் அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. நீ நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும்." என்று கூறினான்.

இதைக் கேட்டு அரண்டு போன கணவன், பக்கத்து வீட்டுக்காரனைப் பார்த்து, "நான் இன்னும் மாடே வாங்கவில்லை. உனக்குத் தோட்டமே இல்லை. மாடு எப்படி உன் தோட்டத்தில் மேயும் ? என்ன உளர்றே ?'' என்று கேட்டான்.

உடனே பக்கத்து வீட்டுக்காரன், "நீ தான் உளறுகிறாய். மாடே வாங்காமல் எப்படி உன் மனைவி அவங்க அம்மா வீட்டுக்குப் பால் கொடுத்தனுப்ப முடியுமோ; அதே போலத்தான் அந்த மாடு இல்லாத என் தோட்டத்திலும் மேய்ந்தது" என்றான்.

அப்போதுதான் கணவனுக்குப் புத்தி வந்தது. அர்த்தமே இல்லாமல் சண்டை போட்டுக் கொண்டு இருக்கிறோமே, என்பதை உணர்ந்தான்.

இல்லாத விஷயத்திற்கு சண்டை போட்டுக் கொண்டு, இல்லறத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிற மனிதர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள் என்பதைத் தான் இக்கதை நமக்கு உணர்த்துகிறது. இந்தக் கதையிலிருந்து உணர்ந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், கணவனும், மனைவியும் அன்பாக இருக்க வேண்டும்; ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும்; விட்டுக் கொடுக்கிற மனப்பான்மை வேண்டும் என்பது தான். இது தான் நல்ல குடும்பத்திற்கு அழகு.

"திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர்"; "திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகிறது", என்ற பழமொழிகள் திருமணத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. திருமணம் என்பது இரு மனம் இணைவது மட்டுமல்ல; இரு வேறு குடும்பங்களின் சங்கமம்.

அமைதியான கடல் நல்ல மாலுமியை உருவாக்காது. ஆர்ப்பரிக்கும் அலைகள், மிரட்டிப் பார்க்கும் இடி, மின்னல், மழை, சூறாவளிக் காற்று ஆகியவற்றினைக் கொண்ட கடல் தான் ஒரு மாலுமிக்கு சவால். இந்தச் சவாலை மாலுமி வெற்றிகரமாகக் கடந்து விட்டால், அவர் சிறந்த, திறமை மிக்க மாலுமியாகி விடுவார்.

மண வாழ்க்கையும் இப்படித்தான். இன்பமும், துன்பமும் நிறைந்தது தான் இல்வாழ்க்கை. மணமக்கள் ஒற்றுமையுடன் துன்பத்தை எல்லாம் தகர்த்தெறிந்து விட்டால் வாழ்க்கை சுவையாக அமையும்.

வாழ்க்கையே ஒரு சவால்தான். அதுவும் திருமண வாழ்க்கை என்பது சவால்கள் நிறைந்ததுதான். இந்தச் சவால்களை எதிர்கொள்ளும் துணிவையும், தெளிவையும் நீங்கள் பெற வேண்டும். சவால்களை எதிர்கொள்வதிலிருந்து விலகி ஓடும் மனிதர்களை விட எதிர்த்து நின்று போராடும் மனிதர்கள் தான் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார்கள். சவால்களைக் கண்டு அஞ்சுபவர்களைச் சமூகம் கண்டு கொள்வதில்லை. சவால்களைத் துணிச்சலுடன் சந்திக்கும் நபரைத் தான் சமூகம் வரவேற்கும்.

ஆனால், காலையிலே மேடையில் சவால் விட்டுப் பேசி, மாலையிலே "ஜகா" வாங்குபவர்களை சவடால் பேர்வழிகள் என்று தான் உலகம் சொல்லும்.

சந்திக்க வேண்டிய சவால்களை அடையாளம் கண்டு, அவற்றைத் துணிவுடன் எதிர்கொள்ள நீங்கள் முடிவெடுத்துவிட்டால், அதற்கான வழிமுறைகள் தானாக தோன்றும். துன்பங்களைக் கண்டு துவண்டுவிடும் கோழைத்தனத்தை விட எதிர்த்துப் போராடும் துணிவே நம்மை வாழ வைக்கிறது. இதைப் புரிந்து கொண்டால் உங்கள் வாழ்வில் வெற்றி நிச்சயம் என்பதைத் தெரிவித்து;

இன்று இல்லற வாழ்வில் இணைந்துள்ள அனைவரும் கண்ணும் இமையும் போல், நகமும் சதையும் போல், நிலவும் வானும் போல், கடலும் அலையும் போல், எண்ணும் எழுத்தும் போல், மொழியும் கருத்தும் போல் ஒற்றுமையுடன் வாழ்ந்து, பதினாறு செல்வங்களையும் பெற்று, தேனின் இனிமை போலவும், தமிழின் சுவை போலவும், வீணையின் நாதம் போலவும், நாடும் வீடும் சிறக்கப் பல்லாண்டு வாழ்க! வாழ்க! என நெஞ்சார வாழ்த்தி;

**"வாழ்க்கையே ஒரு சவால்தான். அதுவும் திருமண வாழ்க்கை என்பது சவால்கள் நிறைந்ததுதான். இந்தச் சவால்களை எதிர்கொள்ளும் துணிவையும், தெளிவையும் நீங்கள் பெற வேண்டும். சவால்களை எதிர்கொள்வதிலிருந்து விலகி ஓடும் மனிதர்களை விட எதிர்த்து நின்று போராடும் மனிதர்கள் தான் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார்கள். சவால்களைக் கண்டு அஞ்சுபவர்களைச் சமூகம் கண்டு கொள்வதில்லை. சவால்களைத் துணிச்சலுடன் சந்திக்கும் நபரைத் தான் சமூகம் வரவேற்கும்".**

இந்த 1,006 திருமணங்கள் சீரோடும், சிறப்போடும் நடந்தேற அனைத்து ஏற்பாடுகளையும் செய்த இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களையும், செயலாளர் அவர்களையும், ஆணையர் அவர்களையும், துறை அலுவலர்களையும், அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கிய இதர துறை அலுவலர்களையும், காவல் துறையினரையும் மனதாரப் பாராட்டி,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

எனக் கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம். ★

# ஓராண்டுச் சாதனைகள் இன்னும் பல சாதனைகளை எட்டுவதற்கான அடித்தளமாக அமையும்



'ஓராண்டில் நூறாண்டு பேசும் சாதனைகளை' படைத்திட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு 16.5.2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அனைத்துக் கட்சித் தலைவர்களால் அளிக்கப்பட்ட வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு **முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை.

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நல்லாசியுடனும், தமிழக மக்களின் ஒருமித்த ஆதரவுடனும் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தனது முதலாவது ஆண்டிலேயே மக்கள் மன நிறைவு அடையும் வகையில், மன நிம்மதி அடையும் வகையில், மகிழ்ச்சி அடையும் வகையில், மகத்தான சாதனைகளைப் புரிந்து, இரண்டாம் ஆண்டில் இன்று அடியெடுத்து வைக்கிறது. ஒற்றை வரியிலே சொல்ல வேண்டுமென்றால், "கொடுங்கோன்மை" அகன்று "செங்கோன்மை" நிலை நாட்டப்பட்டு இருக்கிறது. இதனையொட்டி, சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் இங்கே என்னை வாழ்த்தியும், பாராட்டியும் பேசினார்கள்.




இந்த மாமன்றத்திலே, இந்த அரசின் சாதனைகளைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கியவர்களுக்கும், அதைக் கேட்டு ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சி என்றால் அரசின் செயல்பாடுகளைப் பாராட்டுவது மட்டுமல்லாமல், குறைகள் என தாங்கள் கருதுவதை எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற அடிப்படையில் பேசியவர்களுக்கும், எதிர்க்கட்சி என்றால் அரசைப் பாராட்டவே கூடாது என்ற கொள்கை கொண்டவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு தனது 100ஆவது நாளை நிறைவு செய்தபோது, இங்கே பேசிய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் முழு மனதோடு அரசின் செயல்பாடுகளைப் பாராட்டி இந்த மன்றத்திலே பேசினார்கள். அப்பொழுதே நான் என் உள்ளம் திறந்து சில கருத்துகளை எடுத்துக் கூறினேன். இந்த அரசின் செயல்பாடுகள் தொடர்ந்து அனைவரும் பாராட்டும்படி அமைய வேண்டுமே என்ற எனது உணர்வினை வெளிப்படுத்தினேன். அவ்வாறு எல்லோரும் பாராட்டும்படியான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுப்பது மிகப் பெரிய சவால் என்ற என் கருத்தையும் அப்போது தெரிவித்தேன். அந்தச் சவாலை இன்று வரை செம்மையாக சமாளித்து வந்துள்ளேன் என்பதையும், அதற்கேற்றாற்போல், இந்த அரசின் செயல்பாடுகள் அமைந்துள்ளன என்பதையும் உங்களின் பேச்சுக்களில் இருந்து நான் தெரிந்து கொண்டேன்.

ஜனநாயகம் என்பது ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற இரண்டும் சேர்ந்ததுதான். எதிர்க்கட்சி இல்லாமல் ஜனநாயகத்தை நிலை நிறுத்த முடியாது என்பதுதான் எனது திடமான எண்ணமாகும். எந்த ஒரு பிரச்சினையிலும் பல்வேறு வகையான கருத்துகள் வெளிப்பட்டால் தான், அந்தக் கருத்துகளை சீர்தூக்கிப் பார்த்து பெரும்பான்மையோருக்கு பயனளிக்கக்கூடிய

நடவடிக்கைகளை எடுக்க இயலும். இதைத் தான், John Stuart Mill, "The only way in which a human being can make some approach to knowing the whole of a subject, is by hearing what can be said about it by persons of every variety of opinion, and studying all modes in which it can be looked at by every character of mind" என்று கூறியிருக்கிறார்.

இவ்வாறு மாறுபட்ட சிந்தனைகளை செவிமடுத்து, ஒரே பொருள் பற்றிய வேறு வேறு கருத்துகளையும் சீர்தூக்கிப் பார்த்தால் தான் பெரும்பான்மையான மக்களுக்கு நன்மை செய்ய இயலும். அப்பொழுதுதான், "It is the greatest good to the greatest number of people which is the measure of right and wrong" என்று Jeremy Bentham அவர்கள் கூறியது போல், மிக அதிகமானவர்களுக்கு, மிக அதிகமான நன்மையை செய்யக்கூடிய ஜனநாயகம் தழைத்தோங்க இயலும்.

எதிர்க்கட்சி என்றால் அரசின் கொள்கைகளை, திட்டங்களை எதிர்க்கின்ற கட்சி என்ற பொருள் இல்லை. அரசுத் திட்டங்களின் நிறை குறைகளை எடுத்துச் சொல்லி, குறைகளைக் களைவதற்கான ஆலோசனைகளை வழங்குவது தான் எதிர்க்கட்சிக்கு இலக்கணமாக அமைய வேண்டும்.

"ஆளுங்கட்சி கொதிக்கிற சோறு என்றால், எதிர்க்கட்சி பதம் பார்க்கிற அகப்பை'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறுவார்கள். அகப்பை இல்லாமல், சோற்றை கையை வைத்துப் பதம் பார்க்க முடியாது என்பது உண்மை தான். சோற்றைப் பதம் பார்க்க அகப்பை பயன்படுத்தப்பட வேண்டும். இந்த அடிப் படையில், ஆக்கப்பூர்வமான கருத்துகளை, ஆலோசனைகளை, அறிவுரைகளை எதிர்க்கட்சியினர் தெரிவிக்கும்போது, அதனை இந்த அரசு கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இதற்கு ஒன்றிரண்டு உதாரணங்களை மட்டும் இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

உள்துறை மானியக் கோரிக்கையின்போது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் காவல் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள Canteen வசதியை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கும் நீட்டித்துத் தர வேண்டும் என்று விடுத்த கோரிக்கையை ஏற்று, அதற்கான அறிவிப்பை அன்றே நான் வெளியிட்டேன்.

மேலும், காவலர்கள் ஓய்வு பெற்ற பின் அவர்களுக்கு சொந்த வீடு கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று காவல் துறை மானியக் கோரிக்கையின் போது சில உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்ததை ஏற்று, அரசு அதற்கான ஒரு திட்டம் தீட்டி செயல்படுத்தும் என்று அன்றே அறிவித்தேன். அதன்படி, காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் சீருடைப் பணியாளர்களுக்கு 'உங்கள் சொந்த இல்லம்' திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பினை சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் நான் வெளியிட்டேன்.

அதற்கு நன்றி தெரிவிக்கும் போது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு. ஆறுமுகம், மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு சவுந்தரராசன், இந்தத் திட்டம் சிறைத் துறைக் காவலர்களுக்கும் நீட்டிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததின் பேரில், அந்தக் கோரிக்கையும் உடனடியாக என்னால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதே போன்று, மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கையினை ஏற்று, சிறைத் துறையில் பணிபுரிபவர்களுக்கும் Canteen வசதியை விரிவுபடுத்தி அறிவித்தேன்.

உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது, அரசு மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்தினை ஏற்று, அரசுக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் 100 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்ற அறிவிப்பினை இந்தப் பேரவையில் நான் வெளியிட்டேன்.

போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின் போது, ஓய்வு பெற்ற போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு ஓய்வுகாலப் பயன்கள் காலத்தே வழங்கப்படுவதில்லை என்றும், அதை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்

திரு. எம். ஆறுமுகம் மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் ஆகியோர் கோரிக்கை விடுத்தார்கள்.

இதே போன்று, போக்குவரத்துக் கழகங்களில் உள்ள காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் ஆகியோர் சுட்டிக்காட்டினார்கள்.

இவற்றை ஆராய்ந்து, 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் ஓய்வு பெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை வழங்குவதற்கும், காலிப் பணியிடங்களை நிரப்புவதற்குமான அறிவிப்பினை இந்தப் பேரவையில் நான் அறிவித்தேன்.

இவ்வாறு, எதிர்க்கட்சியினர் எடுத்துக்கூறும் ஆக்கப்பூர்வமான கருத்துகளுக்கு உரிய மதிப்பளித்து அவற்றை செயல்படுத்தும் அரசாக எனது தலைமையிலான அரசு விளங்கி வருகிறது.

இவ்வாறு எதிர்க்கட்சிகள் சோற்றை பதம் பார்க்கிற அகப்பையாக விளங்க வேண்டும். ஆனால், சோற்றை பதம் பார்க்கிறேன் என்று கூறி பானையை உடைக்கும் பணியில் அகப்பை ஈடுபடுமானால், அகப்பையைப் பதம் பார்க்க வேண்டிய நிலைமை தான் ஏற்படும் என்பதை பணிவன்புடன் இங்கே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எவரெஸ்ட் சிகரத்தின் மீது முதன் முதலாக ஏறி சாதனை படைத்தவர்கள் நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த எட்மண்ட் ஹிலாரி (Edmund Hillary) மற்றும் நேபாள நாட்டைச் சேர்ந்த டென்சிங் நார்கே (Tenzing Norgay) ஆகியோர் ஆவர்.

இதே நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த மற்றொரு மலை ஏறும் வீரர் மார்க் இங்லிஸ் (Mark Inglis) நியூசிலாந்தில் உள்ள குக் (Cook) என்ற சிகரம் மீது ஏறிக் கொண்டு இருந்தார். அப்போது, தட்பவெட்ப நிலை மாறுதல் காரணமாக, மார்க் இங்லிஸ் ஏறிக்கொண்டிருந்த பகுதி பனியால் உறைந்துவிட்டது. இதன் காரணமாக அவர் மலையில் இருந்த ஒரு குகையில் தங்கும் நிலை ஏற்பட்டது. பின்னர் அவர் மீட்கப்பட்டாலும், இங்லிஸின் இரண்டு கால்களும் முழங்காலுக்குக் கீழே துண்டாகிவிட்டன. மலையேறும் வீரருக்குக் கால்கள் தான் முக்கியமானது. இருந்தாலும், இங்லிஸ் மனம் தளரவில்லை. செயற்கைக் கால்களை பொருத்திக் கொண்டு மீண்டும் பயிற்சியில் ஈடுபட்டார். உலகின் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட் சிகரத்தை அடைய வேண்டும் என்று திட்டமிட்டார். அதன்படி, தீவிரப் பயிற்சிக்குப் பிறகு எவரெஸ்ட் சிகரத்தின்மீது ஏறிக்கொண்டிருந்த போது, 6,400 மீட்டர் உயரத்தில் இங்லிஸ்க்கு ஒரு சோதனை ஏற்பட்டது. அவர் அணிந்திருந்த இரண்டு செயற்கை கால்களில் ஒன்று சேதமடைந்தது. இருப்பினும், கைவசம் தயாராக வைத்திருந்த செயற்கைக் காலைப் பொருத்திக் கொண்டு தொடர்ந்து சிகரம் ஏறி, தான் நினைத்த சாதனையை எய்தினார் இங்லிஸ். இரண்டு கால்களையும் இழந்த ஒருவர் நடக்க நினைப்பதே அரிதான ஒன்று. ஆனால், தன் விடா முயற்சியாலும், பயிற்சியாலும் இந்த சாதனையை இங்லிஸ் படைத்தார்.

இங்லிஸ் எப்படி பல்வேறு தடைகளைத் தகர்த்தெறிந்து சாதனைப் படைத்தாரோ, அது போல் தான் இந்த அரசு, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசால் விட்டுச் செல்லப்பட்ட கடன்கள், நிருவாகச் சீர்கேடு, நிதிச் சீர்கேடு, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பரிதாபகரமான நிலைமை, அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் அவல நிலைமை, ஆவின் நிறுவனத்தின்

**"எதிர்க்கட்சியினர் எடுத்துக்கூறும் ஆக்கப்பூர்வமான கருத்துகளுக்கு உரிய மதிப்பளித்து அவற்றை செயல்படுத்தும் அரசாக எனது தலைமையிலான அரசு விளங்கி வருகிறது".**

அலங்கோல நிலைமை, மத்திய அரசின் பாராமுகம் என பல்வேறு சவால்களையும், சோதனைகளையும் எதிர்கொண்டு, தடைக் கற்களைப் படிக்கற்களாக்கி, முள் பாதையை மலர்ப் பாதையாக்கி மிகக் குறுகிய காலத்தில், அதாவது இந்த ஓராண்டிலேயே மகத்தான சாதனைகளைப் படைத்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓடுகின்ற நதியில், பாய்கின்ற ஆற்றில் ஒரு ஈர்ப்பு சக்தி இருக்கும். அதற்குப் பெயர் தான் கரண்ட். அந்த ஆற்றில், நதியில் நீந்த வேண்டும் என்று நினைப்பவர் அந்த நீர் ஓடுகின்ற பாதையிலேயே, அந்த ஈர்ப்பு சக்தி, கரண்ட் பாய்கின்ற திசையிலேயே நீந்திச் சென்றால் நீந்துவது என்பது மிகவும் எளிதான காரியம். அவர் எந்த சிரமும்பட வேண்டிய அவசியம் இல்லை. அந்த கரண்டே அவரை ஈர்த்துச் சென்று அக்கரையில் சேர்த்துவிடும். ஆனால், அதற்கு மாறாக ஒருவர் சந்தர்ப்ப சூழ்நிலையால் அந்தக் கரண்டை எதிர்த்து எதிர் நீச்சல் போட வேண்டுமென்றால் அதைப் போன்ற ஒரு கடினமான காரியம் இந்த உலகத்திலேயே இருக்க முடியாது. அந்த ஈர்ப்பு சக்தி ஒரு திசையில் கொண்டு செல்லும், நீரைக் கொண்டு செல்லும். அந்த நீரில் எவ்வளவு பெரிய கனமான பொருள் விழுந்தாலும், அதையும் ஈர்த்துச் செல்லும். மிகப் பெரிய மரம் விழுந்தால் கூட அதையும் அந்தக் கரண்ட் இழுத்துச் செல்லும். அத்தகைய சக்தி வாய்ந்த கரண்டிற்கு எதிராக எதிர்நீச்சல் போட்டு வெற்றிகரமாக அக்கரைக்குப் போய்ச் சேர வேண்டுமென்றால் அது எவ்வளவு பெரிய சாதனை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அத்தகைய சாதனையைத்தான் எனது தலைமையிலான அரசு இந்தக் கடந்த ஓராண்டு காலத்தில் செய்து காட்டியிருக்கிறது, வெற்றி படைத்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கே இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்ற எனது எண்ணத்தின் அடிப்படையில் தான், வாழ்வாதாரம் ஏதுமில்லாத ஏழை, எளிய, அடித்தளத்து மக்களுக்கு 1,000 ரூபாய் ஓய்வூதியம்; உணவுப் பாதுகாப்பை அனைவரும் பெற வேண்டும் என்ற அடிப்படையில் தான் விலையில்லா அரிசி; தாய்மார்களின் வேலைப் பளுவை குறைக்கும் வகையில், விலை ஏதுமின்றி மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்குதல்; ஏழை, எளிய மக்களுக்கு விலை ஏதுமில்லாமல் பசுமை வீடுகள் வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மனித வள மேம்பாட்டிற்கென பல திட்டங்களை எனது அரசு அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. பள்ளி, கல்லூரி மாணவ – மாணவியருக்கு விலையில்லா மடிக் கணினி; இடை நிற்றலைத் தடுக்கும் வகையில், பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவ–மாணவியருக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்குதல்; விலையில்லா சீருடைகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், காலணிகள், புத்தகப் பைகள், Geometry Box போன்ற உபகரணங்கள் வழங்குதல்; மேல் கல்விக்கான உதவித் தொகை வழங்குதல்; விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ–மாணவியருக்கு உணவுப் படி அதிகரிப்பு; விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்; வளரிளம் பெண்களுக்கு விலையில்லா சானிடரி நாப்கின் வழங்குதல்; பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், உயர்த்தப்பட்ட திருமண நிதி உதவியுடன் தாலிக்கு 4 கிராம் தங்கம் வழங்குதல்; மகப்பேறு நிதி உதவியை உயர்த்தி வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சுகாதாரக் குறியீடுகளை மேம்படுத்தும் வகையில், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

விவசாயிகள், மீனவர்கள், கால்நடை பராமரிப்போர், என முதன்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயரும் வகையில் பல்வேறு திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. ஏழை, எளிய மக்கள் தங்கள் சொந்தக் கால்களிலேயே நிற்க வழிவகை செய்யும் வண்ணம், அவர்களுக்கு விலையில்லா கறவைப் பசுக்கள், ஆடுகள் வழங்கும் முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதே போன்று, பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான பல்வேறு திட்டங்களையும் எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

நாட்டில் உள்ளோர், வாழ்வில் வளம் பெற வேண்டுமெனில் நாட்டின் பொருளாதாரம் மகத்தான வளர்ச்சி பெற வேண்டும். அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திட வேண்டும்.

சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் இருந்தால்தான் தொழில் முனைவோர் இங்கே தொழில் தொடங்க முன்வருவர். இதனைக் கருத்தில் கொண்டு, பலப்பல உட்கட்டமைப்பு வசதிகளை எனது அரசு ஏற்படுத்தி வருகிறது. அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்வதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்ட தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 தயாரிக்கப்பட்டுள்ளது.

அளப்பறிய சாதனைகளை இந்த ஓர் ஆண்டில் எனது அரசு நிகழ்த்தியிருந்தாலும், மின் பற்றாக்குறை இன்னமும் நீக்கப்படவில்லை என்பதை நான் நன்கு உணர்ந்துள்ளேன். மின் பற்றாக்குறையை நீக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு முனைப்புடன் எடுத்து வருகிறது. விரைவில் தமிழகத்தில் உள்ள மின் பற்றாக்குறை நீக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஓராண்டில் எனது தலைமையிலான அரசு செய்துள்ள சாதனைகள் எண்ணற்றவை என்றாலும், மேன்மேலும் சாதனைகள் பல தொடர வேண்டும் என்பதே எனது விருப்பம். இந்த ஓராண்டு சாதனைகள் இன்னும் பல சாதனைகளை எட்டுவதற்கான அடித்தளமாக அமையும். மக்களின் கனவுகள் திட்டங்களாக உருப்பெறுகின்றன. இந்தத் திட்டங்கள் உடனடியாகச் செயல்வடிவம் பெற்று அதன் பயன்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதே எனது குறிக்கோள் ஆகும். அதற்கேற்ற நடவடிக்கைகளை நாள்தோறும், நாள்தோறும் எனது அரசு எடுத்து வருகிறது.

வீணையின் நரம்புகள் தனித்தனியாக இருந்தாலும், அதை விரலாலே மீட்டுகின்ற போது, ஒரே இசையை எழுப்புவதைப் போல, அனைத்துக் கட்சியினருக்கும் பொதுவான நோக்கமாக விளங்கும் தமிழகத்தின் வளர்ச்சி மற்றும் தமிழக மக்களின் வளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்தும் எனது நடவடிக்கைகளுக்கும், தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டும் எனது முயற்சிக்கும், அரசியலுக்கு அப்பாற்பட்டு அனைத்துக் கட்சியினரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு இந்த மாமன்றத்திலே அளிக்கப்பட்ட பாராட்டுரைகளை என்னை முதலமைச்சராக்கிய தமிழக மக்களுக்கு அர்ப்பணித்து அமைகிறேன். ✶

# இலகுரக வாகனங்கள் தொழிற்சாலை அமைக்க ஒப்பந்தம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் முன்னிலையில், தலைமைச் செயலகத்தில், ஒசூர், பிள்ளைப்பாக்கம், எண்ணூர், வெள்ளிவாயல்சாவடி மற்றும் ஒரகடம் ஆகிய பகுதிகளில், **4,150** கோடி ரூபாய் முதலீட்டில் புதிய இலகுரக வாகனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையினை அமைப்பதற்காக அசோக் லேலண்ட் – நிசான் மோட்டார் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கும், தமிழக அரசிற்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. **(14.5.2012)**



# தமிழ்நாட்டைப் போல வரலாறு மற்றும் பாரம்பரியப் பெருமை உள்ள மாநிலம் ஒடிசா

சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 11.5.2012 அன்று நடைபெற்ற ஒடிசா மாநிலத்தின் 76ஆவது உத்கல் டிபாஸ் ஆண்டு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

இந்த நேரத்தில் ஒடிசா மாநில மக்களுக்கும், ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக் அவர்களுக்கும், எனது உளம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மொழிவாரி மாநிலமாக ஒடிசா முதன் முதலாக உருவானதைக் கொண்டாடும் வகையில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

நீண்ட காலமாக எனக்கு ஒடிசா மாநிலத்துடன் தொடர்பு உள்ளது. திரு.பிஜு பட்நாயக் அவர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்ததை நான் மகிழ்ச்சியுடன் நினைவுகூற விரும்புகின்றேன். நான் முதலமைச்சராக இருந்தபோது, ஒடிசா மாநில முதலமைச்சராக இருந்த பிஜு பட்நாயக்கை மூன்று முறை வரவேற்கும் பெருமையைப் பெற்றிருக்கிறேன். மிகச் சிறந்த தலைவராக சாதனை புரிந்தவராக பட்நாயக் திகழ்ந்தார். தலைசிறந்த தலைவராகத் திகழ்ந்த பிஜு பட்நாயக் அவர்களின் மகன் நவீன் பட்நாயக்கை வரவேற்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். பிஜு பட்நாயக் அவர்கள் எனக்கு தந்தை போன்றவர். ஒத்துழைப்பு, பரஸ்பர அன்பு, மாண்பு மிகுந்த ஒரு பாரம்பரியத்தை அவர் விட்டுச்சென்றிருக்கிறார். அந்த உணர்வுகளை எனது சகோதரரைப் போன்ற நவீன் பட்நாயக் அவர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

ஒடிசா மாநிலத்தின் பண்பாடு, கலை ஆகியவற்றை வெளிப்படுத்தும் விதமாக பிரம்மாண்டமாக இந்த விழா அமைந்துள்ளது. 1936–ஆம் ஆண்டு ஏப்ரல் 1–ஆம் தேதி ஒடிசாவை தனி மாநிலமாக உருவாக்குவதற்கு அம்மாநில மக்களின் கனவுகளை நனவாக்குவதற்கு ஒடிசா மாநிலத்தின் தலைவர்களான கவுரப் மதுசூதன் தாஸ், மகாராஜா கிருஷ்ண சந்திர கஜபதி, பண்டிட் நீலகண்ட தாஸ் மற்றும் பூபாநந்ததாஸ் போன்றவர்கள் அரும்பாடுபட்டார்கள். அவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக இந்த விழா அமைந்துள்ளது.

பண்டையக் காலத்தில் மிகப்பெரிய ராணுவக் கட்டமைப்பையும் சிறந்த பூகோள அடையாளமும் கொண்டதாக கலிங்க நாடு திகழ்ந்தது. தமிழ்நாட்டுக்கும் ஒடிசா மாநிலத்திற்கும் இடையேயான கலாச்சார மற்றும் கலைத் தொடர்புகள் சோழப் பேரரசு காலத்திலே இருந்தது. தமிழ்நாட்டிலும் ஒடிசா மாநிலத்திலும் சோழ மன்னர்கள் பெரும் பாரம்பரியப் பெருமையை உருவாக்கினார்கள். கங்க வம்சத்திலும், சோடகங்க வம்சத்திலும் திருமணம் செய்ததன் மூலம் உறவுகள் இருந்ததால் இரண்டு மாநிலத்தின் இடையிலும் பாரம்பரியத் தொடர்பு இருந்தது. கம்போடியா மற்றும் இந்தோனேஷியா நாடுகள் வரையிலும் கலை, கட்டடக் கலை, இலக்கியம் அவர்கள் ஆதரவில் பரவியிருந்தன. தொடர்ந்து ஆட்சி செய்த பல்வேறு அரசுப் பரம்பரை வழியாக இந்திய நாகரிகத்தில் சிறப்பான ஒரு இடத்தை ஒடிசா பெற்றுள்ளது.

தமிழ்நாட்டுக்கும் ஒடிசா மாநிலத்திற்கும் இடையே இருந்த வரலாற்றுத் தொடர்புகள் இரண்டு மாநிலங்களிடையே பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. தமிழ்நாட்டைப் போல வரலாறு மற்றும் பாரம்பரியப் பெருமை உள்ள மாநிலமாக ஒடிசா திகழ்வதால் ஒடிசா மாநிலத்துடன் தொடர்பு வைத்திருப்பது மிகப் பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

5 ஆயிரம் ஆண்டுகளின் நாகரிகம் தலைமுறை தலைமுறையாக செம்மை பெற்று வந்தவையே நம் வாழ்வின் நெறிமுறைகள்.

முன்னர், நம் பண்பாடு பாதிக்கப்பட்டு அழிக்கப்படும் என்னும் வருத்தம் தெரியப்படும்போது அது பற்றிய வருத்தம் எனக்கு தலைதூக்குவது உண்டு. ஆனால், இப்போது நாம் யார் என்பதைப் பொருள் புரிந்து நாம் அனைவரும் உள்ளத்தாலும், ஆன்மாவிலும் இந்தியர்கள் என்பதை எண்ணும்போது நான் ஆறுதல் அடைகிறேன்.

நம்முடைய தமிழ்நாடு அரசு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றும்போது அதற்கு ஆதரவாக நின்ற நவீன் பட்நாயக் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக தமிழ்நாட்டில் நீரைச் சேமிப்பதற்காக கொண்டுவரப்பட்ட மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை நவீன் பட்நாயக் அவர்கள் பாராட்டியிருக்கிறார். ஒடிசா மாநிலத்தில் தாய்மை அடைந்துள்ள பெண்களுக்கான மமதா திட்டம் பற்றி அவர் எடுத்துரைத்துள்ளார். அதைப் போன்றே தமிழ்நாட்டிலும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி திட்டம் என்று நடைமுறையில் இருக்கிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 12 ஆயிரம் வழங்கப்படுகிறது. இது மூன்று தவணைகளில், பிரசவத்திற்கு முன்பு ரூ.4 ஆயிரமும், பிரசவம் நிகழும் நேரத்தில் ரூ.4 ஆயிரமும், குழந்தை



பிறந்த பின்பு ரூ.4 ஆயிரமும் பராமரிப்பிற்காக வழங்கப்படுகிறது. நம்முடைய இந்த இரண்டு அரசுகளும் ஒரே நேர்கோட்டில் சிந்தித்து இந்தத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம் என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றுள்ள பல அடுக்கு ஆட்சி முறையில் இந்தியா போன்ற ஒருங்கிணைந்த அமைப்பில் பிற மாநிலங்களுக்கு இடையேயான ஒத்திசைவான தொடர்புகள் விலக்க இயலாதவை ஆகும். இந்த உலகம் புனைவியலாக சிறியதாகின்றது என்று கருதுமிடத்து மாநிலங்கள் தன்னந்தனியாக நிலைப்பதோ, தொடர்வதோ கற்பனை செய்திடவும்

இயலாததாகும். நமக்கு மொத்த பயனை அளிக்கும் வகையில் நாம் இணைந்து செயலாற்றுவதும் வளர்ச்சி பெறுவதும், நன்கு புரிந்து கொள்ளப்பட்ட பரஸ்பர தொடர்புகள் பெறுவதுமான இச்சூழ்நிலை மிக உயர்ந்த அளவிலான பரஸ்பரம் சார்ந்திருக்கின்ற நிலைமை உருவாகின்றதை சுட்டுகின்றது. இந்தச் சொற்றொடர் எளிதாக சொல்லப்படுகிறது. ஆயின் இதனை செயல்படுத்திட அதிக அளவில் முயற்சி தேவைப்படுகிறது.

முக்கியமான துறைகளான நீர், சுற்றுப்புறச் சூழல், போக்குவரத்து, சுற்றுலா, விவசாயம் மற்றும் சட்டம்–ஒழுங்கு ஆகியவை அதிகமான கவனத்தில் உள்ளன. முக்கியமாக போதைப் பொருள் கடத்துதல், தீவிரவாத நடவடிக்கைகள் மற்றும் பொது ஒழுங்குப் பராமரிப்பு ஆகியவை முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளன. மாநிலங்களுக்குள் நிலவி வரும் ஒற்றுமை இந்த நேரத்தில் வளர்ச்சியின் முக்கியப் பங்காக அமைந்திருக்கிறது. இது இந்தியாவில் எந்த ஒரு மாநிலமும் மற்ற மாநிலங்களின் வளர்ச்சியிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இல்லை என்பதையே காட்டுகிறது.



நம் நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும் சாதனையில் ஒடிசா மாநிலம் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது. ஒடிசா மாநிலத்தின் தந்தையாக பிஜு பட்நாயக் அவர்கள் போற்றப்படுகிறார். அவர் இருந்தவரை ஒடிசா மாநிலத்தின் ஒவ்வொருவரும் தம் மேல் அக்கறை உள்ளவர் ஒருவர் இருக்கிறார் என்ற உணர்வில் இருந்தார்கள். அதேபோன்ற நிலையில் தற்போது முதலமைச்சராக இருக்கும் நவீன் பட்நாயக் அவர்களும் மக்களுக்கு நம்பிக்கையைத் தரும் தலைவராக, மக்களுக்கு ஆதரவாக அக்கறையுடன் செயல்படுபவராக இருக்கிறார் என்பதால் அவரை நான் பாராட்டுகிறேன். தமிழ்நாட்டைப் பொருளாதார முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல தொலைநோக்குத் திட்டம் 2023–யை சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும் என்பதில் எனது அரசு உறுதியாக இருக்கிறது. விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும், தமிழ்நாடும், ஒடிசா மாநிலமும் வளர்ச்சியில் ஒரே மாதிரியான அளவுகோல்களைக் கொண்டிருக்கின்றன. இரு மாநிலத்திற்கான தொடர்புகள் வளர்ச்சியை நோக்கி அழைத்துச் செல்லும் நிலையில் உள்ளன. தமிழ்நாடும் ஒடிசா மாநிலமும் மிகப்பெரிய வளர்ச்சியை உருவாக்குவதில் பங்கு கொள்வோம் என்று நம்புகிறேன்.

தொகுத்துக் கூறுமிடத்து இந்த புனிதமான நிகழ்ச்சி ஒரு மைல் கல்லாக பிற்காலத்தில் பெருமையுடன் நோக்கப்படும். இரு மாநில உறவுகளில் நல்ல ஒரு ஆரம்பத்தை இந்த நிகழ்ச்சி வழிவகுக்கிறது. இதில் உறுதியாக நாம் நின்று செயல்படுவோம் என்று கூற விரும்புகிறேன். அமெரிக்க எழுத்தாளர் ஸ்டீபன் கவே "வாழ்க்கையின் முக்கிய செயல்பாடே ஒன்றிணைந்த உந்து சக்திதான். இதுவே மக்களுக்கிடையே உள்ள உணர்ச்சிப் பூர்வமான, உளவியல் ரீதியான வேறுபாடுகளை முறைப்படுத்தி மதிப்பீடு செய்கிறது. இந்த ஒன்றிணைந்த உந்து சக்தி இதுவரை பயன்படுத்தப்படாத மாற்று வழிகளை உருவாக்குகிறது" என்று கூறியிருக்கிறார்.

சென்னையில் ஒடிசா பவன் கட்டடத் திற்கான அடிக்கல் நாட்ட எனக்கு வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன். வேளச்சேரி பகுதியில் இந்தத் திட்டத் திற்காக 5 கிரவுண்ட் மனைகள் அளித்துள்ளோம். இந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கு நான் ஒடிசா மாநில முதல்வருக்கு உறுதி அளிக்கிறேன். விரைவில் அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு அதைத் துவக்கி வைப்பதற்கு நவீன் பட்நாயக் அவர்கள் வருவார்கள், அப்போதும் அவரை வரவேற்கும் வாய்ப்பு கிடைக்கும், நானும் அந்தத் திறப்பு விழா நிகழ்ச்சிக்கு அழைக்கப்படுவேன் என்று நம்புகிறேன்.

சகோதர, சகோதரிகளே பிரிவினை சக்திகளைத் தவிர்த்து, நமது நாட்டின் ஒற்றுமைக்கும் கட்டுக்கோப்புக்கும் அரும்பாடுபடுபவர்களால் நம் மாநிலங்களை ஒற்றுமை உணர்வோடு சிறந்த முறையில் செயல்படுத்த நாம் வழிகாட்டிகளாகக் கொண்டிடுவோம்.

நன்றி, வணக்கம்.

❖



# மேட்டூர் அனல் மின்நிலையம் மிகக் குறுகிய காலத்தில் சீரமைப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – **28.5.2012**

10.5.2012 அன்று அதிகாலை 00.30 அதாவது நள்ளிரவு **12.30** மணியளவில் மேட்டூர் அனல் மின் நிலையத்தின் நிலக்கரி கையாளும் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டது. அவ்வாறு ஏற்பட்ட தீ விபத்து விரைந்து அணைக்கப்பட்டதன் காரணமாக அனல் மின் நிலையத்திற்கு ஏற்படவிருந்த பெரும் பாதிப்பு தவிர்க்கப்பட்டது. இந்தத் தீ விபத்தில் சந்திப்பு கோபுரங்கள், நிலக்கரியை சுமந்து செல்லும் Conveyor Belt மற்றும் அது தொடர்பான உபகரணங்கள் 180 மீட்டருக்கு முழுவதும் சேதமடைந்து விட்டதால் மேட்டூர் அனல் மின் நிலையத்தில் 840 மெகாவாட் அளவிற்கு மின் உற்பத்தி செய்த நான்கு அலகுகளும் மின் உற்பத்தியை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தத் தீ விபத்து குறித்த விவரங்களை நான் 10.5.2012 அன்று சட்டமன்றப் பேரவையில் தெரிவித்தேன். மேலும், சீரமைக்கும் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்றும், அவ்வாறு அதனை சீர் செய்ய சுமார் ஒரு மாத காலம் ஆகும் என்றும், எனினும் அந்தப் பணிகள் விரைந்து முடித்திட நான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதையும் சட்டமன்றப் பேரவையில் தெரிவித்திருந்தேன். அப்போது ஒரு சில பத்திரிகைகள் இந்த சீர் செய்யும் பணிகளை முடிப்பதற்கு குறைந்தபட்சம் இரண்டு மாதங்களாகும் என்ற தங்களது கருத்தை வெளியிட்டிருந்தன. **840** மெகாவாட் மின்சாரம் தமிழகத்திற்குக் கிடைக்கும் வகையில் சீரமைக்கும் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மின்வாரிய அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டிருந்தேன்.

இந்தத் தீ விபத்தில் இரண்டு சந்திப்பு கோபுரங்களுக்கு இடையே இருந்த நிலக்கரி கையாளும் கட்டமைப்பு முற்றிலும் சேதமடைந்திருந்தது. நிலக்கரியை எடுத்துச் செல்லும் கேலரிகளைத் தாங்கி நிற்கும் அமைப்புகள் மின்சார மற்றும் கட்டுப்பாடு புதைவடங்கள் முழுவதுமாகச் சேதம் அடைந்திருந்தன. இதனருகில் அமைந்திருந்த தீப்பிழம்பு எண்ணெய்க் (Furnace Oil) குழாய் மற்றும் நீராவி எடுத்துச் செல்லும் குழாய்களும் பாதிக்கப்பட்டிருந்தன. 350 டன் அளவிலான இரும்புக் கழிவுகளையும் நீக்க வேண்டியிருந்தது. Conveyor gallery-யை 46 மீட்டர் உயர அளவுக்குத் தூக்கி வைக்க வேண்டியிருந்தது.

இந்த அளவிலான சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள சாதாரணமாகச் சுமார் இரண்டு மாத காலம் ஆகும் என்றாலும், எனது அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளின் பேரில் இந்தப் பணி விரைந்து முடிக்கப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரும்புக் கழிவுகள் அகற்றப்பட்டு சீரமைப்புப் பணிகள் 14.5.2012 அன்று துவங்கப்பட்டன. மூன்று ஷிப்ட்டுகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சீரமைப்புப் பணிகள் விரைவுப்படுத்தப்பட்டன. இதன் காரணமாக 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்றாம் அலகு 28.5.2012 அன்று அதிகாலை முதல் செயல்படத் துவங்கியுள்ளது. எஞ்சிய மூன்று அலகுகளும் படிப்படியாகப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு 31.5.2012 முதல் தனது முழுத் திறன் அளவான 840 மெகாவாட் மின்சாரத்தையும் மேட்டூர் அனல் மின் நிலையம் உற்பத்திச் செய்யத் துவங்கும்.

மிகக் கடினமான சீரமைக்கும் பணியில் இரவு பகல் பாராது முழு ஈடுபாட்டுடன் பணியாற்றிய தமிழ்நாடு மின் வாரியத் தலைவர், அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் ஒப்பந்தப் பணியாளர்களுக்கு எனது மனமுவந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேட்டூர் அனல் மின் நிலையம் மிகக் குறுகிய காலத்தில் சீரமைக்கப் பட்டுள்ளதால் தீ விபத்தினால் 10.5.2012 முதல் ஏற்பட்ட 840 மெகாவாட் மின் இழப்பு நீக்கப்பட்டு 31.5.2012 முதல் 840 மெகா வாட் மின்சாரம் தொடர்ந்து கிடைக்கும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖




# தமிழக அரசின் ஓராண்டுச் சாதனைகளை விளக்கும் செய்தித்துறையின் நூல்கள்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக மூன்றாம் முறையாகப் பொறுப்பேற்று, ஓராண்டு நிறைவடைந்ததையொட்டி, 16.5.2012 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உரைத்தொகுப்பு உள்ளிட்ட சிறப்பு வெளியீடுகள், ஓராண்டுச் சாதனைகளை விளக்கும் குறுந்தகடுகள் ஆகியவற்றை வெளியிட்டார்கள்.

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சிறப்புமிகு உரை – 2 தொகுப்புகள் (தமிழ்), ஒரு தொகுப்பு (ஆங்கிலம்), ‘புரட்சித்தலைவி அம்மாவின் அமுதமொழிகள்’, தமிழக அரசின் சாதனைகளை விளக்கும் ‘நூறாண்டு பேசும் ஓராண்டுச் சாதனை’ என்ற குறும்படம் மற்றும் குறும்பாடல் அடங்கிய குறுந்தகடுகள், ‘முத்திரை பதிக்கும் சித்திரை’ என்ற தமிழ்ப்புத்தாண்டு சிறப்பு மலர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முக்கிய நிகழ்வுகள் அடங்கிய ஆங்கில எழிலேடு (Coffee Table Book) மற்றும் ஓராண்டுச் சாதனைகளை விளக்கும் ஒட்டு வில்லைகள் (Stickers) ஆகியவற்றை 16.5.2012 அன்று, தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டார்கள். இதன் முதல் பிரதிகளை மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் திரு. தேபேந்திரநாத் சாரங்கி, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ❖



# காவிரி நதிநீர் ஆணையக் கூட்டத்தை உடனடியாகக் கூட்ட வேண்டும்!

மாண்புமிகு பாரதப் பிரதமர்
டாக்டர் **மன்மோகன் சிங்** அவர்களுக்கு
மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் (18.05.2012)

காவிரி நதிநீர் ஆணையக் கூட்டம் கடைசியாக கடந்த 2003ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10ஆம் தேதி நடைபெற்றது. அதன்பிறகு இந்தக் கூட்டம் நீண்டகாலமாக நடைபெறாமல் இருக்கிறது. காவிரி நடுவர் மன்றம் கடந்த 2007ஆம் ஆண்டு பிப்ரவரி 5ஆம் தேதி வழங்கிய இறுதி உத்தரவை இந்திய அரசிதழில் வெளியிடுமாறு மத்திய நீர்வள அமைச்சகத்திற்கு உத்தரவிட வேண்டும். இதன் மூலம் இந்த இறுதி உத்தரவை காவிரி நதிநீர் நிருவாக வாரியம் சிறப்பாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கோரி, கடந்த ஆண்டு அக்டோபர் 17ஆம் தேதி தங்களுக்கு நான் கடிதம் எழுதியிருந்ததை நினைவு கூர்கிறேன். இருப்பினும், இது தொடர்பான வழக்கை உச்சநீதிமன்றம் முடித்து வைத்த பிறகு பரிசீலனை செய்வதே பொருத்தமானதாக இருக்கும் என மத்திய நீர்வளத்துறை அமைச்சர் எனக்குத் தகவல் தெரிவித்திருந்தார்கள்.

தற்போது, நடைமுறையில் உள்ள காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவின்படியோ அல்லது இறுதி உத்தரவில் தெரிவித்துள்ளபடியோ, நெருக்கடியான மாதங்களான ஜூன் முதல் செப்டம்பர் வரை காவிரி நதியில் போதுமான நீர்வரத்துக்கு கர்நாடக மாநில அரசு வழி செய்யவில்லை என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மேலும், கர்நாடக மாநில அரசு, அம்மாநிலத்தின் 4 பெரிய நீர்த்தேக்கங்களில் தேக்கி வைத்துள்ள நீரை, பிப்ரவரி முதல் மே மாதம் வரையிலான கோடைக்கால சாகுபடிக்கு நியாயமற்ற முறையில் பயன்படுத்தி வருகிறது. கர்நாடகாவின் 4 பெரிய நீர்த்தேக்கங்களிலும் இந்த ஆண்டு பிப்ரவரி ஒன்றாம் தேதி நிலவரப்படி, 58.50 டி.எம்.சி. தண்ணீர் மொத்த இருப்பாக இருந்தது. ஆனால், இம்மாதம் 14ஆம் தேதி அந்த இருப்பு 28.176 டி.எம்.சி. ஆகக் குறைந்துவிட்டது. இடைப்பட்ட காலத்தில் நீர்த்தேக்கங்களில் இருந்து 30.33 டி.எம்.சி. நீரை வெளியேற்றியும், மேலும் காவிரியில் வந்த 11 டி.எம்.சி.யும் சேர்த்து மொத்தம் 41 டி.எம்.சி., நீரை கர்நாடகம் பயன்படுத்தியுள்ளது.

இவ்விதம் சேமிப்பு நீரை கோடைக்கால மாதங்களில் பயன்படுத்திவிட்டபடியால், கர்நாடக மாநில அரசு, பருவ மழைக்காலத் தொடக்கத்தில் வரும் நீர்வரத்தை அதன் நீர்த் தேக்கங்களில் தேக்கி வைத்து, உபரிநீர் ஏற்படும்போது தான் அதனை வெளியேற்றுகிறது.

இது மேட்டூர் அணைக்கு வரும் நீர்வரத்தைப் பாதிக்கிறது. இதன் விளைவாகத் தமிழகத்தில் குறுவை சாகுபடி கடுமையாகப் பாதிக்கப்படுவதுடன், சம்பா பயிர் சாகுபடியும் தாமதமாகிறது.

மத்திய நதிநீர் ஆணையத்தால் இறுதி செய்யப்பட்ட வறட்சிகால நதிநீர் பங்கீட்டு வழிமுறை, ஒரு தீர்வு கிடைக்காமல் பாதிக்கப்படுகிறது. இதன் காரணமாக காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படியோ அல்லது வறட்சிகால நதிநீர் பங்கீட்டு வழி முறையின்படியோ, உரிய நீரை கர்நாடகா திறந்து விடாததால், தமிழகம் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளது. வருங்காலத்தில் கடுமையான வறட்சி ஏற்படும் சூழ்நிலை உருவாகலாம் என்பதால், வறட்சிகால நதிநீர் பங்கீட்டு வழிமுறையை காவிரி நதிநீர் ஆணையம் பரிசீலிக்க வேண்டும் என்று கோர, காவிரி கண்காணிப்புக் குழுவின் 24ஆவது கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. இதுபோன்ற வறட்சி நிலைமை எப்போது வேண்டுமானாலும் உருவாகலாம்.

அத்துடன், காவிரி நதிநீர் ஆணையம் உடனடியாக கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு பிரச்சினையும் உள்ளது. சாகுபடிப் பரப்பை 11 இலட்சத்து 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல் கர்நாடக அரசு அதிகரிக்கக்கூடாது என காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவு தெரிவித்துள்ள போதிலும், கர்நாடக அரசு சாகுபடி நிலப்பரப்பு தொடர்பான ஆண்டு விவரங்களை சரியாக வைத்திருக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில், காவிரி நதிநீர் ஆணையத்தை விரைவாகக் கூட்டி, இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ❖

# பெண்ணையாற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டும் கர்நாடக அரசின் திட்டத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும்

பெண்ணையாற்றின் குறுக்கே, தடுப்பணைகள் கட்டவும், தண்ணீரைத் திருப்பி விடுவதற்கான கட்டமைப்புகளை நிறுவவும், கர்நாடக அரசு முயற்சிகள் மேற்கொண்டிருப்பதைத் தங்களின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு வர விரும்புகிறேன்.

கர்நாடக மாநிலத்தில், பெண்ணையாறு உற்பத்தியானாலும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு, பெண்ணையாற்றின் தண்ணீர் பாய்கிறது. கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம்,

**மாண்புமிகு பாரதப் பிரதமர்**
**டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்கு**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்**
**19.5.2012 அன்று எழுதிய கடிதத்தின் தமிழாக்கம்**

கடலூர் ஆகிய மாவட்டங்களின் வழியாகச் செல்லும் பெண்ணையாறு, இந்த மாவட்டங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்வாதாரமாகத் திகழ்கிறது.

பெண்ணையாற்றின் மூலம் சுமார் 4 இலட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. பெண்ணையாற்றின் குறுக்கே தடுப்பணைகளையும், தண்ணீரைத் திருப்பி விடுவதற்கான கட்டமைப்புகளை நிறுவவும், கர்நாடக அரசு திட்டமிட்டிருப்பது, தமிழகத்திற்குப் பெரும் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

பெண்ணையாற்றின் தண்ணீரைத் தடுத்து நிறுத்தும் வகையில் ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் மற்றும் தண்ணீரைத் திருப்பி விடுவதற்கான அமைப்புகளை ஏற்படுத்தும் எந்தவொரு முயற்சியும், நதிநீர் தொடர்பான மாநிலங்களுக்கிடையேயான ஒப்பந்தத்தைக் கடுமையாக மீறும் செயலாக அமைந்துவிடும். கர்நாடக அரசின் இந்த நடவடிக்கை தமிழக விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதோடு, அடிப்படை குடிநீர் விநியோகமும் பாதிக்கப்படும்.


பெண்ணையாறு, மாநிலங்களுக்கிடையே பாயும் ஒரு ஆறு என்பதும், 1892–ஆம் ஆண்டின் மெட்ராஸ்–மைசூர் ஒப்பந்தத்தின் பின் இணைப்பில் குறிப்பிடப் பட்டுள்ள ஆறுகளில், பெண்ணையாறும் ஒன்று என்பதும் தங்களுக்குத் தெரிந்ததுதான். இந்த ஒப்பந்தத்தின்படி, கர்நாடக மாநிலத்தில் பெண்ணையாறு உற்பத்தியானாலும், அதிக பயனடையும் மாநிலமான தமிழகத்தின் முன் அனுமதியில்லாமல், ஆற்றின் குறுக்கே, புதிய அணைகளைக் கட்டுவது, தண்ணீரைத் தடுத்து நிறுத்தும் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வது, தண்ணீரைத் திருப்பிவிடுவது, தண்ணீரைத் தேக்கி வைப்பது போன்ற செயல்களில் கர்நாடக அரசு ஈடுபடக்கூடாது.

பெண்ணையாற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவது தொடர்பாக, கர்நாடக அரசு, தமிழக அரசிடம் எந்த அனுமதியையும் பெறவில்லை. இதுகுறித்த விவரங்களைத் தமிழக அரசுக்கு, கர்நாடக அரசு தெரிவிக்கவில்லை. இந்த விவகாரம் தொடர்பான முழு விவரங்களையும் கர்நாடக அரசு தமிழக அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். தமிழக அரசின் அனுமதி இல்லாமல் எந்தவித பணிகளையும் கர்நாடக அரசு மேற்கொள்ளக் கூடாது.

இந்த விவகாரத்தில் பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, பெண்ணையாற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவது, தண்ணீரைத் திருப்பி விடுவதற்கான கட்டமைப்புகளை ஏற்படுத்துவது போன்ற செயல்களில் கர்நாடக அரசு ஈடுபடக்கூடாது என அறிவுரை வழங்க வேண்டும்.

★ ★ ★

# முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் தமிழகக் காவலர் படையை நிறுத்துவதைத் தவிர வேறு வழி இல்லை!



மாண்புமிகு பாரதப்பிரதமர் **டாக்டர் மன்மோகன்சிங்** அவர்களுக்கு,
மாண்புமிகு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
27.05.2012 அன்று எழுதிய கடிதத்தின் தமிழாக்கம்

முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து ஆய்வு நடத்த, நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த் தலைமையில் உயரதிகாரக் குழு ஒன்றை உச்ச நீதிமன்றம் அமைத்திருந்தது. இந்த உயரதிகாரக் குழு, முல்லைப் பெரியாறு அணையின் கட்டுமான உறுதித்தன்மை குறித்து மதிப்பீடு செய்வதற்காக, அணையின் முக்கியப் பகுதி பரிசோதனை உட்பட பல்வேறு பரிசோதனைகளை நடத்த உத்தரவிட்டது.

இதனையடுத்து, அணையில் செங்குத்துத் துளைகள் இடப்பட்டு, பரிசோதனைகள் நடத்தி முடிக்கப்பட்டன. பருவ மழை நெருங்கி வரும் நிலையில், தற்போது இந்தத் துளைகள் மூடப்பட வேண்டும்.

இது தொடர்பாக, உச்ச நீதிமன்ற உயரதிகாரக் குழு தெளிவான உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தும், துளைகளை அடைக்க நடவடிக்கை மேற்கொள்ளும் தமிழ்நாடு அரசு அதிகாரிகளைக் கேரள அரசு தடுத்து வருகிறது. இந்தப் பிரச்சினையை கேரள அரசிடம், தமிழ்நாடு அரசு கொண்டு சென்றும் எந்தப் பயனும் இல்லை.

முல்லைப் பெரியாறு அணையில் சேதம் எதுவும் ஏற்படாமல் இருக்க, பருவமழை தொடங்குவதற்கு முன்னரே இந்தத் துளைகள் அடைக்கப்படுவது அவசியமாகும். இந்தத் துளைகளை அடைக்க நடவடிக்கை எடுக்கும் தமிழக அதிகாரிகளைத் தடுக்கும் கேரள அரசின் செயல், அணையின் கட்டுமானத் தன்மை பலவீனமாக இருப்பதுபோல் காட்டுவதற்காக, கேரள அரசு மேற்கொள்ளும் சதித் திட்டமாகத் தோன்றுகிறது. கட்டுமான அமைப்பு ரீதியாகவும், நில அதிர்வு மற்றும் நீரியல் ரீதியாகவும் முல்லைப் பெரியாறு அணை மிகவும் பாதுகாப்பாக உள்ளது. அணையில் 142 அடி வரை தண்ணீரைத் தேக்கி வைத்துக் கொள்ளலாம் என்றும்

உச்சநீதிமன்ற உயரதிகாரக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், கேரள அரசின் போக்கு இவ்வாறு உள்ளது.

முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில், அணையின் பாதுகாப்புக்காக மட்டுமே கேரளக் காவல் துறையினர் வைக்கப்பட்டுள்ளனர். முல்லைப் பெரியாறு அணைக்குத் தேவையான பாதுகாப்பு வழங்குவதாக, உச்ச நீதிமன்றத்தில் கேரள அரசு உறுதி அளித்துள்ளது. எனினும் நடைமுறையில், தமிழகப் பொறியாளர்கள் முல்லைப் பெரியாறு அணையில் வழக்கமான பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதைத் தடுப்பதற்கு கேரள அரசு தனது காவலர்களைப் பயன்படுத்தி வருகிறது. கேரள அரசின் இந்த நடவடிக்கை கண்டனத்திற்குரியது. இத்தகைய நிலைமை சரி செய்யப்படவேண்டும்.

முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்புக்கு, மத்தியத் தொழிலகப் பாதுகாப்புப் படைகளை நிறுத்த, தாங்கள் உத்தரவிட வேண்டும் என்று தங்களுக்கு நான் எழுதிய முந்தைய கடிதங்கள் வாயிலாகவும், கடந்த டிசம்பர் மாதம் 25ஆம் தேதி தங்களிடம் நான் அளித்த கோரிக்கை மனு வாயிலாகவும் கேட்டுக் கொண்டேன். ஆனால் இந்த வேண்டுகோள் இன்னும் ஏற்கப் படவில்லை.

எனவே, முல்லைப் பெரியாறு அணையில், பரிசோதனைக்காகப் போடப்பட்ட துளைகளை அடைக்கும் தமிழ்நாடு அரசு அதிகாரிகளின் அத்தியாவசியப் பணிகளைத் தடுக்கக் கூடாது என கேரள அரசை, தாங்கள் அறிவுறுத்த வேண்டும். கேரள அரசு தனது பிடிவாதப்போக்கைத் தொடரும் பட்சத்தில், முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் பாதுகாப்புக்காக, மத்தியத் தொழிலகப் பாதுகாப்புப் படையினரை நிறுத்த வேண்டும் என்ற எனது வேண்டுகோளுக்கு செவி சாய்க்க மத்திய அரசு மறுக்கும் பட்சத்தில், தமிழ்நாட்டிற்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ள முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் அணையின் பாதுகாப்புக்காக, தமிழகக் காவலர் படையை நிறுத்துவதைத் தவிர, தமிழக அரசுக்கு வேறு வழியில்லை. இது தொடர்பாக தங்களின் உடனடி நடவடிக்கையை எதிர்பார்க்கிறேன்.

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எச்சரிக்கை எதிரொலி:

### முல்லைப் பெரியாறு அணையில் துளைகளை அடைக்க விதித்த தடையை கேரளா நீக்கியது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் தமிழகக் குத்தகைப் பகுதியில் தமிழக காவலர்களை நிறுத்துவோம் என்று குறிப்பிட்டு இருந்தார்கள். இதனையடுத்து தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் முல்லைப் பெரியாறு அணைக்குச் சென்றனர். அப்போதும், அவர்களை கேரள அரசு அதிகாரிகளும், போலீசாரும் தடுத்தனர். அவர்களிடம் தமிழக அதிகாரிகள் இந்தப் பணியை நிறுத்துவதற்கான உத்தரவைத் தரும்படி கேட்டனர். இது பற்றி கேரள அதிகாரிகள் அரசு உயர் அதிகாரிகளை தொடர்பு கொண்டு கேட்டனர். கேரள நீர்ப்பாசனத் துறையின் தலைமைப் பொறியாளர் திருமதி. பி. லத்திகா, ஆழ்துளைகளை அடைக்கும் பணிக்கு தடை ஏதும் இல்லை, தமிழக அரசு பணியை மேற்கொள்ளலாம். பணிகள் குறித்து, கேரள அரசுக்கு முழுமையான தகவல்களை தமிழக அரசு தொடர்ந்து வழங்க வேண்டும் என்றார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதம் குறித்து ஆலோசனை நடத்திய கேரள உயர் அதிகாரிகள், தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் அணையில் உள்ள துளைகளை அடைக்க அனுமதி அளித்தனர். அதன்பிறகு அங்கு தமிழக பொதுப் பணித்துறை அதிகாரிகள், அணைக்கு துளைகளை அடைக்கப் பயன்படுத்தும் கருவிகளைக் கொண்டு சென்றனர். அந்தக் கருவிகளைப் பொருத்தினர். அதனைத் தொடர்ந்து அணையில் ஆய்வுக்காக போடப்பட்ட துளைகளை மூடும் பணியைத் தொடங்கினர்.

★ ★ ★



# உலக செஸ் சாம்பியனுக்கு ரூ.2 கோடி ஊக்கத் தொகை

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 6.6.2012 அன்று தலைமைச் செயலகத்தில், 5ஆவது முறையாக உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் 2 கோடி ரூபாய் ஊக்கத் தொகைக்கான காசோலையை வழங்கி பாராட்டினார்கள்.

இளைஞர்கள் இடையே விளையாட்டு ஆர்வத்தினை வளர்க்கும் நோக்கத்துடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1992ஆம் ஆண்டு இளைஞர் மற்றும் விளையாட்டு பயிற்சித்துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து "தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்" என்ற ஆணையத்தை உருவாக்கினார்கள். மேலும், தலை சிறந்த விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதுடன் அவர்கள் உயர்ந்த சாதனைகள் புரிந்திடும் வகையில், பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்கப்படுத்தும் வகையில் 6.9.2011 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளுக்கு ஊக்கத் தொகையினை இருமடங்காக உயர்த்தி அறிவித்தார்கள்.

ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவில் மே மாதம் நடைபெற்ற உலக செஸ் சாம்பியன் போட்டியில் வெற்றி பெற்று, உலக செஸ் சாம்பியன் பட்டத்தை 5ஆவது முறையாக வென்று தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்த திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்களின் சாதனையைப் பாராட்டியும், உலக செஸ் சாம்பியன் பட்டத்தை மேலும் பல ஆண்டுகள் தக்க வைத்துக் கொள்ளவும் வாழ்த்தி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடிதம் ஒன்றை அனுப்பினார்கள். மேலும், அவரை கவுரவிக்கும் வகையில் தமிழக அரசின் சார்பில் 2 கோடி ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.6.2012 அன்று அறிவித்தார்கள்.

அதன்படி, உலக செஸ் சாம்பியன் பட்டத்தை 5ஆவது முறையாக வென்று சாதனை படைத்த திரு.விஸ்வநாதன் ஆனந்த் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 6.6.2012 அன்று தலைமைச் செயலகத்தில், 2 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கி பாராட்டினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து ஊக்கத் தொகையினை பெற்றுக் கொண்ட உலக செஸ் சாம்பியன் திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்கள், தனது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார். மேலும், செஸ் விளையாட்டை மாணவர்களிடம் ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்காக தனது நன்றியினையும் பாராட்டினையும் தெரிவித்தார்.

# 10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசுகள்!



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 14.6.2012 அன்று, தலைமைச் செயலகத்தில், 2011–2012ஆம் கல்வியாண்டில் தமிழை மொழிப் பாடமாகக் கொண்டு 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ரொக்கப் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கி வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு, மாணவ சமுதாயத்தின் நலனிற்காகவும், அவர்கள் கல்வியில் சிறந்து விளங்கிட ஊக்குவிக்கும் வகையிலும், கட்டணமில்லா கல்வி, சத்துணவு, பேருந்து பயணஅட்டை, மிதிவண்டிகள், மடிக்கணினிகள், சீருடைகள், பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், புத்தகப் பை, கணித உபகரணப் பெட்டி, வண்ணப் பென்சில்கள், புவியியல் வரைபட புத்தகம், காலணிகள், ஆன்–லைன் மூலம் வேலைவாய்ப்பு பதிவு வசதி, கல்வி பயிலுதலில் இடைநிற்றலைக் குறைக்க ஊக்கத் தொகைகள் ஆகிய எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

2011–2012ஆம் கல்வியாண்டில் தமிழை மொழிப் பாடமாகக் கொண்டு 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் தமிழை மொழிப் பாடமாகக் கொண்டு மாநில அளவில் முதல் இடம் பெற்ற மாணவி எஸ். சுஷ்மிதாக்கு 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு, இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவி டி. கார்த்திகா, மாணவர்கள் பி. அசோக் குமார், சி. மணிகண்டன் ஆகிய மூன்று மாணவ, மாணவிகளுக்கு தலா 30 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு, மூன்றாம் இடங்களைப் பெற்ற பி. மகேஸ்வரி, எஸ். பிரபா சங்கரி ஆகிய இரண்டு மாணவிகளுக்கு தலா 20 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு என 6 மாணவ மாணவிகளுக்கு 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா

அவர்கள் தலைமைச் செயலகத்தில் வழங்கி வாழ்த்தினார்கள்.

மேலும், 10ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் இடம் பெற்ற மாணவர் பி. ஸ்ரீநாத்க்கு 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு, இரண்டாம் இடங்களை பெற்ற மாணவிகள் இ.எம். நந்தினி, கே.என். மகாலஷ்மி, ஸ்வாதி சென்னியப்பன், என். அகிலா, மாணவர்கள் எஸ். ஜென்கின்ஸ் காட்பிரே, டி. கவின், ஆகிய ஆறு மாணவ, மாணவிகளுக்கு தலா 20 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு, மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவிகள் எஸ். ஸ்மிதா, கே. சூர்யா, ஆர். தாரணி, டி. வினுமிதா, கே. ஷர்மிளா, பி.கே. பூஜாஸ்ரீ, பி. அம்ரிதா, ராஜேஸ்வரி, மாணவர்கள் எஸ்.கே. அபிஷேக், எம். ஸ்ரீதரா, ஐ. ஜஸ்டின் சேவியர் ஆகிய பதினொரு மாணவ, மாணவிகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு என 18 மாணவ மாணவிகளுக்கு 3 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் வழங்கி பாராட்டியதுடன், பரிசுப் பெற்ற அனைத்து மாணவ, மாணவியர்களின் உயர்கல்விக்கான செலவுகள் அனைத்தையும் தமிழக அரசே ஏற்கும் என்பதற்கான சான்றிதழ்களையும் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாநில அளவில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ரொக்கப் பரிசுகளை வழங்கியதோடு, கல்வியில் சிறந்து விளங்கி, விடாமுயற்சியுடன் தங்கள் லட்சியத்தை எய்தி, சமுதாய முன்னேற்றத்திற்காகவும், நாட்டின் நலனுக்காகவும் பாடுபட வேண்டும் என்று வாழ்த்தினார்கள்.


மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மாநில அளவில் பரிசுகளைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து தன்னம்பிக்கை, விடாமுயற்சி ஊட்டி, பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்களைப் பெற வைத்த ஆசிரியப் பெருமக்களுக்கும், பெற்றோர்களுக்கும் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து ரொக்கப் பரிசுகளைப் பெற்றுக் கொண்ட மாணவ, மாணவிகளும், அவர்களின் பெற்றோர்களும் ரொக்கப் பரிசுகளையும், சான்றிதழ்களையும் அளித்துப் பாராட்டி, வாழ்த்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள். ★

## மோட்டார் சைக்கிள் தொழிற்சாலை அமைக்க ஒப்பந்தம்




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் முன்னிலையில், தலைமைச் செயலகத்தில் ஒரகடம் சிப்காட் தொழிற்பூங்காவில், 350 கோடி ரூபாய் முதலீட்டில், மோட்டார் சைக்கிள் தயாரிக்கும் தொழிற்சாலையினை அமைப்பதற்காக எய்ஷர் மோட்டார் லிமிடெட் நிறுவனத்திற்கும், தமிழக அரசிற்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. (14.5.2012)



# ஏழை, எளிய, நடுத்தர மக்களைப் பாதிக்கும் பெட்ரோல் விலை உயர்வை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 23.5.2012

**வி**லைவாசி உயர்ந்து வருவதற்கும், இந்திய ரூபாயின் மதிப்பு சரிந்து வருவதற்கும், நாட்டில் தற்போது நிலவும் மந்தமான பொருளாதார நிலைக்கும், மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசின் தவறான பொருளாதாரக் கொள்கை தான் காரணம் ஆகும். இந்த நிலையில் விலைவாசி ஏற்றத்திற்கு மேலும் வித்திடும் வகையில் பெட்ரோல் விலையை 23.5.2012 அன்று, நள்ளிரவு முதல் லிட்டர் ஒன்றுக்கு 7 ரூபாய் 50 காசு என்று வரலாறு காணாத அளவில் விலையை உயர்த்தி மக்களை வஞ்சித்து இருக்கும் மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசின் செயல் எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றும் செயலாக அமைந்துள்ளது.

சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்து வருவதைக் காரணம் காட்டி அடிக்கடி பெட்ரோல் விலையை உயர்த்தி வரும் தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசின் நடவடிக்கை கண்டிக்கத்தக்கது ஆகும்.

பெட்ரோல் விலை லிட்டர் ஒன்றுக்கு 7 ரூபாய் 50 காசு என்ற அளவுக்கு உயர்த்தியது ஏழை, எளிய, நடுத்தர மக்கள் மீது தாங்கொணா சுமையைச் சுமத்தி மக்களை வஞ்சிக்கும் செயலாகும். மூன்றாண்டுகள் நிறைவு செய்துள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு மூன்றாண்டுகள் நிறைவு அடைந்ததற்கு மக்களுக்கு அளிக்கும் பரிசாக இத்தகைய ஒரு விலை உயர்வினை அறிவித்துள்ளது. இது கடும் கண்டனத்திற் குரியது ஆகும்.

பெட்ரோலியப் பொருள்களின் விலையை உயர்த்தும் போது எல்லாம், சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை ஏற்றம், இந்திய ரூபாய் மதிப்பு வீழ்ச்சி போன்ற எடுபடாத வாதங்களை மத்திய அரசு எடுத்து வைத்து விலை ஏற்றத்தை நியாயப்படுத்துவதை எவராலும் நிச்சயம் ஏற்றுக் கொள்ள முடியாது. நாட்டின் மொத்த கச்சா எண்ணெய்த் தேவை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதன் மூலம் பெறப்படுவதில்லை. உள்நாட்டிலும் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கச்சா எண்ணெய்க்கும் சர்வதேசச் சந்தை விலையை அடிப்படையாகக் கொள்வது நியாயமற்ற செயல். இதே போன்று அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காமல் அதன் காரணமாக பெட்ரோல் விலையை ஏற்றுவது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல.

மத்திய அரசின் இந்த மக்கள் விரோத செயல் காரணமாக இரு சக்கர வாகனங்கள் மற்றும் சிற்றுந்துகளைப் பயன்படுத்தும் ஏழை, எளிய, நடுத்தர மக்களின் மாத வருமானத்தில் பெருமளவு பற்றாக்குறை ஏற்படும். ஏற்கெனவே வங்கிக் கடன்கள் மூலம் வாகனங்களை வாங்கியோர் கூடுதல் சுமைக்கு ஆளாக்கப்படுவர். பெட்ரோல் விலை உயர்வைக் காரணம் காட்டி தனியார் வாகன உரிமையாளர்கள் வாடகையை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் நிச்சயம் உருவாகும். இதன் மூலம் ஏழை, எளிய, நடுத்தர மக்களின் வாங்கும் சக்தியும், பொருளாதார நிலையும் மேலும் வீழ்ச்சி அடையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

மேலும், மத்திய அரசின் எண்ணெய் நிறுவனங்கள் மற்றும் தனியார் எண்ணெய் நிறுவனங்கள் அனைத்தும் அதிக அளவில் லாபம் ஈட்டி, மத்திய அரசு உட்பட அதன் பங்குதாரர்களுக்கு அதிக அளவு ஈவுத் தொகையினை அளித்து வருகின்றது. எண்ணெய் நிறுவனங்களின் லாபத்தைக் குறைப்பதன் மூலமும், பெட்ரோல் மீதான மத்திய அரசின் வரிகளைக் குறைப்பதன் மூலமும், இந்திய ரூபாயின் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தும் வகையில் பொருளாதார நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும் பெட்ரோல் விலை உயர்வை நிச்சயம் தவிர்க்கலாம். பொருளாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்காமல் ஆண்டுக்குப் பல முறை பெட்ரோலின் விலையினை உயர்த்துவது என்பது மக்களை அல்லல்படுத்தும் செயலாகும்.

எனவே ஏழை, எளிய, நடுத்தர மக்களைப் பாதிக்கும் இந்த பெட்ரோல் விலை உயர்வை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இல்லையெனில் மக்கள் விடும் கண்ணீர் மத்தியில் ஆளும் மக்கள் விரோத காங்கிரஸ் கூட்டணி ஆட்சியை விரைவில் வீழ்ச்சி அடையச் செய்யும் ஆயுதமாக மாறி விடும் என்பதையும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ❖

# தமிழகத்திற்கான மாதந்தோறும் ஏற்கெனவே வழங்கிய அளவான 52,806 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும்!

மாண்புமிகு பாரதப் பிரதமர் **டாக்டர் மன்மோகன் சிங்** அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் 10.06.2012 அன்று எழுதிய கடிதத்தின் தமிழாக்கம்



தமிழகத்திற்கு, மாதம் ஒன்றுக்கு ஒதுக்கப்படும் 44 ஆயிரத்து 580 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயை, உண்மையிலேயே மாதந்தோறும் தேவைப்படும் அளவான 65 ஆயிரத்து 140 கிலோ லிட்டராக உயர்த்தி வழங்க வேண்டுமென கடந்த 25ஆம் தேதி நான் தங்களுக்குக் கடிதம் எழுதியுள்ளேன்.

மேலும், கடந்த ஆண்டு ஜூன் மாதம் 1ஆம் தேதி தங்களுக்கு நான் எழுதிய கடிதத்திலும், அதனைத் தொடர்ந்து ஜூன் 14ஆம் தேதி தங்களை நேரில் சந்தித்து அளித்த மனுவிலும், தமிழ்நாட்டுக்கான மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை உயர்த்தி வழங்கும்படி வலியுறுத்திக் கேட்டுக் கொண்டேன்.

தமிழகத்திற்குக் கடந்த ஆண்டு ஏப்ரல், மே ஆகிய மாதங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட, தலா 52 ஆயிரத்து 806 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய், கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் 44 ஆயிரத்து 580 கிலோ லிட்டராக திடீரென குறைக்கப்பட்டதால் பெரும் சிக்கல் ஏற்பட்டது. தமிழகத்தில் எனது தலைமையிலான அரசு பதவியேற்ற பின்னர், மண்ணெண்ணெய் ஒதுக்கீடு, இந்த ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையிலான காலாண்டில், எந்தவித நியாயமான காரணமும் இல்லாமல், மாதம் ஒன்றுக்கு 39 ஆயிரத்து 429 கிலோ லிட்டராக மேலும் குறைக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் பற்றாக்குறையால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள தமிழக மக்களின் இன்னலைக் களையும் வகையில், மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை, மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 52 ஆயிரத்து 806 கிலோ லிட்டராக உயர்த்தி வழங்க வேண்டுமென தங்களை ஏற்கெனவே நான் கேட்டுக் கொண்டேன்.

இந்நிலையில், மத்திய அரசு தற்போது, மாதம் ஒன்றுக்கு வெறும் 3 ஆயிரத்து 31 கிலோ லிட்டர் உயர்த்தி, 42 ஆயிரத்து 460 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழகத்திற்குக் கடந்த ஆண்டு மே மாதம் வழங்கப்பட்ட 52 ஆயிரத்து 806 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயை, கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில், 44 ஆயிரத்து 580 கிலோ லிட்டராகவும், இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து 39 ஆயிரத்து 429 கிலோ லிட்டராகவும், மேலும் அதிரடியாக மத்திய அரசு குறைத்த அளவோடு, தற்போது உயர்த்தப்பட்டுள்ள மிகக் குறைந்த அளவு மாதாந்திர ஒதுக்கீட்டை ஒப்பிட்டால், குறிப்பிட்டுச் சொல்லும்படியான எந்தப் பலனும் கிடைக்கவில்லை.

இந்த வகையில், மாதம் ஒன்றுக்குத் தமிழகத்திற்கான மண்ணெண்ணெய் ஒதுக்கீடு, நியாயமற்ற வகையில் 13 ஆயிரத்து 377 கிலோ லிட்டர் குறைக்கப்பட்டிருப்பதால், எனது தலைமையிலான அரசு பெரும் சிக்கலுக்கு ஆளாகியுள்ளது. தமிழகத்தின் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்க, மாதம் ஒன்றுக்கு 65 ஆயிரத்து 140 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுவதால் எனது தலைமையிலான அரசு தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, மாதம் ஒன்றுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவான 52 ஆயிரத்து 806 கிலோ லிட்டரையாவது வழங்க வேண்டும்.

மண்ணெண்ணெய் கிடைக்காமல் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள கிராமப்புற மற்றும் ஏழை – எளிய மக்களின் துயரத்தைப் போக்குவதில் தாங்கள் ஒத்துழைப்பு நல்குவீர்கள் என நான் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறேன். ★



# தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 12ஆம் வகுப்புப் பாடநூலில் உள்ள தமிழர்களைப் புண்படுத்தும் கேலிச்சித்திரத்தை நீக்க வேண்டும்!

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**
**அறிக்கை 13.6.2012**

1965–ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தி மொழி மட்டுமே இந்தியாவின் ஆட்சி மொழி என்பதற்கு செயல்வடிவம் கொடுக்கும் அப்போதைய மத்திய அரசின் முயற்சியை இந்தி மொழி பேசாத மாநிலங்கள் ஏற்றுக் கொள்ளாத சூழ்நிலையில், இதனை எதிர்த்து திராவிட இயக்கம் மிகப் பெரிய போராட்டத்தினை நடத்தியது. மத்திய அரசின் இந்த இந்தித் திணிப்பினை எதிர்த்துப் பேசிய பேரறிஞர் அண்ணா அவர்கள், ''தமிழ் மொழி இருக்கின்ற நேரத்திலே பிற மொழியை நுழைக்கின்ற பேதமை, தமிழ் மொழி இருக்கின்ற நேரத்திலே பிற மொழியை ஆதிக்க மொழியாக்குகின்ற அக்ரமம், இவைகளைக் கண்டித்து அந்த அக்ரமத்தை நீக்குவதற்கு வழி காண வேண்டும்'' என்று கூறினார். இந்தப் போராட்டத்தினையடுத்து, ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டு மொழிகளுமே தொடர்ந்து மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக இருக்கும் என உறுதிமொழி அளிக்கப்பட்டது.

இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மை வாய்ந்த, தமிழகத்தில் ஆட்சி மாற்றத்திற்கு ஒரு காரணமாயிருந்த, இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தினைக் கொச்சைப்படுத்தும் வகையில், மத்திய அரசின் தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் அதாவது, National Council of Educational Research and Training என்னும் அமைப்பின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள பன்னிரண்டாம் வகுப்பிற்கான அரசியல் அறிவியல் பாடப் புத்தகத்தில், ''பிராந்திய விழைவுகள்'' என்ற அத்தியாயத்தில், ''திராவிட இயக்கம்'' என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டுள்ள கேலிச் சித்திரம் அமைந்துள்ளது. இது மட்டுமல்லாமல், இந்தித் திணிப்புப் போராட்டத்தினை முன்னின்று நடத்திய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் மொழிப்போர் தியாகிகளை அவமதிக்கும் வகையிலும் அமைந்துள்ளது. இந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையிலும், அதன் உண்மை நிலையைப் படம் பிடித்துக் காட்டும் வகையிலும், அன்றைய 'தி இந்து' ஆங்கில நாளிதழில் வெளிவந்த புகைப்படம் மேற்படி புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ள போதிலும், இதற்கு முற்றிலும் மாறாக, தமிழக மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் இந்தக் கேலிச் சித்திரம் வெளியிடப்பட்டுள்ளது மிகவும் வருத்தத்திற்குரியது. இதற்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட இயக்கம் குறித்து மாணவ – மாணவியருக்கு விளங்கச் செய்ய வேண்டுமெனில், அதற்கான பாடப் புத்தகத்தில் உண்மை நிலையை விளக்கும் அப்போதைய புகைப்படங்கள் தான் சிறந்த கருவியாக அமையுமேயொழிய, கேலிச் சித்திரத்தை வரைந்து அதில் தமிழக மாணவர்களுக்கு இந்தி படிப்பது கட்டாயமில்லை என்பன போன்ற உறுதிமொழிகள் கொடுக்கப்பட்டது போலவும், அவை ஆங்கிலத்தில் உள்ளதால், தமிழ் மாணவருக்கு ஆங்கிலமும் படிக்கத் தெரியாது என்று ஒருவர் சொல்வது போலவும் வாசகங்களை எழுதி, தமிழர்களின் மனதினைப் புண்படுத்துவது பொருத்தமாக அமையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அந்த கேலிச்சித்திரம் இந்தித் திணிப்பை எதிர்த்த மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டனர் என்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுவும் ஏற்றுக்கொள்ள இயலாததாகும்.

''தமிழனின் பண்பு யாருக்கும் தாழ்ந்தவனாக இருப்பதல்ல, யாரையும் தாழ்த்துவதல்ல'' என்ற பேரறிஞர் அண்ணாவின் அமுத மொழியினை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்டி, இந்தித் திணிப்புப் போராட்டம் குறித்து தமிழர்களின் மனதினைப் புண்படுத்தும் வகையில் தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் பன்னிரண்டாம் வகுப்பு அரசியல் அறிவியல் பாடப் புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ள கேலிச் சித்திரம் உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசினை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். ★



# புதிய எழுச்சியுடன் தமிழகக் காவல்துறை !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
24.4.2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை
மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில்
கலந்து கொண்டு ஆற்றிய பதிலுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !

''மண்ணுக்கு மரம் காவல்'', ''மரத்துக்கு இலை காவல்'', ''பயிருக்கு வேலி காவல்'', ''உடலுக்கு உயிர் காவல்'', ''கண்ணுக்கு இமை காவல்'', ''கடலுக்கு கரை காவல்'' என்பதைப் போல் மக்களுக்குக் காவலாக விளங்கும் காவல் துறை மற்றும் ''காப்பதே எமது கடமை'' என்ற உணர்வுடன் செயல்படும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகிய இரு பெரும் மானியக் கோரிக்கைகளின் மீது மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை இங்கே எடுத்துக் கூறி இருக்கிறார்கள்.

இந்த மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய உறுப்பினர்கள் அவரவர் சார்ந்துள்ள கட்சிகளின் நிலைப்பாட்டை ஒட்டியே தங்களது கருத்துகளை அமைத்துக் கொண்டுள்ளனர்கள். சில உறுப்பினர்கள் காவல் துறை சமூகத்திற்குப் பயனளிக்கும் வகையில் எப்படியெல்லாம் பணியாற்ற வேண்டும் என்ற வகையிலே பேசினார்கள். சில உறுப்பினர்களின் பேச்சுகளுக்கிடையே கட்சிக் கண்ணோட்டங்கள் குறுக்கிட்டன. சில உறுப்பினர்கள் அரசின் செயல்பாடுகளைப் பாராட்டிப் பேசினார்கள். சில உறுப்பினர்கள் குறை சொல்வது தான் எங்கள் பணி என்ற அடிப்படையில், இந்த அரசின் மீது பல குற்றச்சாட்டுகளை அள்ளி வீசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! உடலில் எத்தனையோ உறுப்புகள் இருக்கின்றன.

ஆனால் இந்த உறுப்புகளிலேயே மிகவும் தலைசிறந்தது நாக்கு. அதாவது சாமர்த்தியமாக, சாதுரியமாக, திறமையாகச் செயல்படுவதில் நாக்குக்கு இணை வேறு எதுவுமே இல்லை என்று என்னால் சொல்ல முடியும். நாக்கின் நிலைமையை நீங்கள் எண்ணிப் பாருங்கள். வாயின் நடுவிலே உள்ள நாக்கைச் சுற்றி 32 பற்கள் உள்ளன. எந்த மனிதப் பிறவியாக இருந்தாலும் 32 பற்கள் இருக்கும்.

இந்த 32 பற்களும் அந்த நாக்கைக் கடித்து, குதறி, கிழித்துத் தள்ளக்கூடிய கூர்மை வாய்ந்தவை. ஆனால் இந்த சாதுரியமான, சாமர்த்தியமான நாக்கு, ஆயுட்காலம் முழுவதும் அந்த 32 பற்களுக்கு இடையிலேயே இருந்து திறமையாகச் செயல்பட்டு வெற்றிகரமாகக் காலத்தை ஓட்டுகிறது. நீங்கள் போர் வீரர்களை எடுத்துக்கொண்டாலும்கூட, போர்க் காலங்களில்தான் அவர்கள் சண்டை போடுவார்கள், போரிடுவார்கள். மற்ற நேரங்களில் அவர்கள் சென்று ஓய்வு எடுத்துக்கொள்ள முடியும். போர் இல்லாத நேரங்களில், ஒரு நாட்டில் அமைதி நிலவும் நேரங்களில் அந்தப் போர் வீரர்களுக்கு ஓய்வும் கிடைக்கும். ஆனால் இந்த மனித நாக்கிற்கு மட்டும் அப்படிப்பட்ட ஒரு ஓய்வே கிடையாது, ஒரு relief என்பதே கிடையாது. அது பிறந்தது முதல் இறக்கும்வரை ஆயுட்காலம் முழுவதும் அந்த 32 பற்களுக்கு இடையிலேயேயிருந்து செயல்பட்டாக வேண்டும். ஆக, தினம் தினம் தப்பித்தோம், பிழைத்தோம் என்ற நிலையில் வாழ்கின்ற நாக்கு எத்தனை எத்தனைப் பணிகளைச் செய்கிறது? கண்டிப்பாகப் பேச வேண்டிய நேரங்களில் கண்டிப்புடன் பேசுகிறது, கட்டளை இட வேண்டிய நேரங்களில் கட்டளையிடுகிறது, கனிவாகப் பேசவேண்டிய நேரத்தில் தேன்மழை போன்ற சொற்களைப் பொழிகிறது, சிலரை மிரட்ட வேண்டிய நேரத்தில் அதையும் செய்கிறது. சுவையான, சத்தான உணவை இந்த உடலுக்கு வழங்குகிறது. பலவிதமான கடமைகளை, காரியங்களை இந்த நாக்கு திறமையாக செயலாற்றுகிறது. இவ்வளவையும் இந்த எதிரிகளுக்கு நடுவிலேயே அது செய்கின்றது. ஆனால் அது அப்படியே தப்பித்து, தப்பித்து வெற்றிகரமாக தனது பணியை முடிக்கிறது. அதைப்போலதான் என் நிலைமையும். என் நிலைமையைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

தமிழ்நாட்டிலுள்ள பிற எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் அந்த எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களும், ஜெயலலிதா எப்போது தவறு செய்வார், எப்போது ஒரு பிழை செய்வார், எப்போது ஒரு தவறான செயலைச் செய்வார் என்று பூதக் கண்ணாடி வைத்துக்கொண்டு பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். பத்திரிகையாளர்களும், பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் ஜெயலலிதா ஏதாவது தவறு செய்ய மாட்டாரா, இதை மிகைப்படுத்தி இதை வைத்தே பத்திரிகைகளை விற்றுவிடலாம், தொலைக்காட்சி டி.ஆர்.பி. ரேட்டிங்ஸை உயர்த்திக் கொள்ளலாம் என்று அவர்கள் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். டெல்லியிலோ மத்திய அரசு, ஒஹோ! ஜெயலலிதா ஆட்சிக்கு வந்துவிட்டாரா? இனி தமிழ்நாட்டை வாழ விடக்கூடாது. ஜெயலலிதா விடுக்கும் கோரிக்கைகளை ஏற்றுத் தமிழ்நாட்டிற்கு தேவையான உதவிகளைச் செய்துவிட்டால், இனி ஜெயலலிதா அசைக்க முடியாத சக்தியாக உயர்ந்துவிடுவார், வளர்ந்துவிடுவார். ஆகவே, மத்திய அரசிலிருந்து என்னென்ன உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன? ஜெயலலிதா ஆட்சிக்கு வந்துவிட்டாரா? உடனே மண்ணெண்ணெய் allocation-cut செய், இருக்கின்றதை 50 சதவிகிதமாகக் குறைத்துவிடு என்றவொரு உத்தரவு போகிறது.

தமிழ்நாடு எத்தனை முறை கேட்டாலும், தமிழ்நாடு முதலமைச்சர் எத்தனை முறை கேட்டாலும், நிதி உதவி வழங்காதே என்று நிதி அமைச்சருக்கு கட்டளை போகிறது. தமிழ்நாட்டு மக்கள் இருளில் தவித்தாலும், என்ன கஷ்டம் வந்தாலும் தமிழக முதலமைச்சர் கேட்டுக்கொண்டால், தமிழகத்திற்கு கூடுதல் மின்சாரத்தை வழங்காதே என இப்படிப் பல உத்தரவுகள். ஆக, தமிழ்நாட்டை வாழ விடக்கூடாது, தமிழகம் தலைநிமிர்ந்து விடக்கூடாது, எழுந்துவிடக் கூடாது என்பதற்காகவே மத்திய அரசு பல அடக்குமுறைகளை ஏவுகிறது. இத்தனைக்கும் மத்தியில், வெற்றிகரமாக ஆட்சியை நடத்திக்கொண்டு மண்ணெண்ணெய் போதுமான அளவில் இல்லாவிட்டாலும், மின்சாரம் போதுமான அளவு இல்லாவிட்டாலும், போதுமான நிதி உதவி மத்திய அரசிடமிருந்து கிடைக்காவிட்டாலும், நம்மால் இயன்ற ஆதாரங்களை திரட்டிக்கொண்டு, வெற்றிகரமாக ஆட்சியை நடத்திவருகிறேன்.

ஆக, சுற்றி எதிரிகள். இங்கே மாநிலத்திலும் எதிரிகள்; ஊடகங்களிலேயும் எதிரிகள்; மத்திய நடுவண் அரசிலும் எதிரிகள்; இத்தனையும் மீறி வெற்றிகரமாக இந்த ஆட்சியை நடத்திக்கொண்டு பல சாதனைகளை சாதித்துக் கொண்டிருக்கிறோம்.

சில சட்டமன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அவர்கள் சட்டமன்றத்திற்கு வரும்போதே நிறைய பழைய காகிதங்களை, ஆவணங்களை எடுத்துக்கொண்டு வருவார்கள். அவர்கள் எங்களை மடக்குகிறார்களாம். அதனால், அவர்களுக்கு நன்றாகத் தெரியும். முதலமைச்சரானாலும் சரி, மாண்புமிகு அமைச்சர்களானாலும் சரி, இந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைதான் எங்கள் கையில் இருக்கும். தற்பொழுது இங்கே அவையில் வைக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புகள்தான் எங்கள் கையில் இருக்கும். ஆனால், சிலர் வருகின்றபோதே அதற்கு முன்னர் இங்கே அறிவிக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பைக் கையில் எடுத்துக்கொண்டு, அன்றைக்கு அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் இப்படி சொல்லப் பட்டிருக்கிறதே, இன்றைக்கு இப்படி சொல்லியிருக் கிறீர்களே, கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கையில் இப்படி சொன்னார்களே, இப்போது இப்படி சொல்லியிருக்கிறீர்களே என்று கேட்டால், எங்களிடம் இந்த ஆண்டிற்கான, நிதிநிலை அறிக்கைதான் கையில் இருக்கும். ஆகவே, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை, அதற்கு முந்தைய ஆண்டு நிதிநிலை அறிக்கை, அதற்கு முன்பு வெளியிடப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புகள், இப்படி எல்லாவற்றையும் எடுத்தக்கொண்டு வரவேண்டுமென்றால் ஒரு வண்டி நிறைய கொள்கை விளக்கக் குறிப்புகள்தான் இருக்கும். இப்படி எந்த அரசும் செயல்பட முடியாது. ஆகவே, இத்தனை எதிர்ப்புகளையும் மீறி, தடைக் கற்களை படிக்கற்களாக்கி, சோதனைகளை சாதனைகளாக்கி நாங்கள் வெற்றிமீது வெற்றி சாதித்துக்கொண்டே வருகின்றோம். அதனால்தான் என்னுடைய நிலைமையை மனித நாக்குடன் நான் ஒப்பிட்டுப் பேசினேன்.

"வாழ்க வசவாளர்" என்ற பேரறிஞர் அண்ணாவின் வாய்மொழிக்கு இணங்க, வசை பாடியவர்களுக்கும்; நல்ல ஆலோசனைகளை எடுத்துக் கூறியவர்களுக்கும்; ஆக்கப்பூர்வமான கருத்துகளைப் பறைசாற்றியவர்களுக்கும்; எங்கள் அரசின் செயல்பாடுகளைப் பாராட்டியவர்களுக்கும்; கட்சி பாகுபாடின்றி எனது மனமார்ந்த நன்றியினை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறை மானியத்தின் மீது 71 வெட்டுத் தீர்மானங்களும்; தீயணைப்புத் துறை மானியத்தின் மீது 43 வெட்டுத் தீர்மானங்களும் மாண்புமிகு பேரவை உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

"ஓர்ந்துகண் ஓடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை."

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க, குற்றம் இன்னதென்று ஆராய்ந்து எந்தப் பக்கமும் சாயாமல் நடுவுநிலைமையுடன் செயல்படக் கூடிய நல்லாட்சி தமிழ்நாட்டிலே நடைபெற்று வருகிறது. எங்களது அரசைப் பொறுத்தவரையில், குறைகள் குறைக்கப்பட வேண்டும்; நிறைகள் நீட்டிக்கப்பட வேண்டும் என்பது தான் எங்களது குறிக்கோள். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல குறைகளைச் சுட்டிக்காட்டிப் பேசியிருக்கிறார்கள். குறைகளே இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால், அந்தக் குறைகள் மிகைப்படுத்தப்பட்டு இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது, பார்த்திபனூர் பாலமுருகன் தற்கொலை பற்றியும், 1987–இல் நியமனம் செய்யப்பட்ட காவல் உதவி ஆய்வாளர்கள் பதவி உயர்வு பற்றியும் குறிப்பிட்டார். அவைகளைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

1987–இல் நேரடியாக நியமனம் செய்யப்பட்ட காவல் உதவி ஆய்வாளர்கள் 938 பேர். இவர்களில் 312 பேர் துணை காவல் கண்காணிப்பாளர்களாக பதவி உயர்வு பெற்றுவிட்டனர். 1987–இல் நியமனம் செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்களில் பதவி உயர்வு பெறாமல் இருப்பவர்கள், அவர்களுடைய முதுநிலைக்கு ஏற்ப, காலியிடங்கள் ஏற்படும்போது பதவி உயர்வு பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூரைச் சேர்ந்த கணேசன் என்பவர் தனது மகள் காஞ்சனாதேவியை, அதே ஊரைச் சேர்ந்த சேது என்பவரின் மகன் பாலமுருகன் கேலி செய்ததாக, 10.4.2012 அன்று பார்த்திபனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததையடுத்து, மனு ரசீது எண். 65/12 வழங்கப்பட்டது.

மேற்படி மனு தொடர்பாக பாலமுருகன் மற்றும் தந்தை சேது ஆகியோரை காவல் துறையினர் விசாரித்தனர். பிறகு, இருதரப்பினரும் சமாதானமாக எழுதிக் கொடுத்ததையடுத்து, காவல் துறையினர் பாலமுருகனை எச்சரித்து அனுப்பியுள்ளனர்.

பின்னர், வீட்டிற்குச் சென்ற பின் இச்சம்பவம் குறித்து சேது தனது மகன் பாலமுருகனைக் கண்டித்துள்ளார். இதனையடுத்து, 11.4.2012 அன்று

இரவு பாலமுருகன் மதுவில் விஷம் கலந்து குடித்துள்ளார். இதனையடுத்து, பாலமுருகனுக்கு பரமக்குடியில் உள்ள அரசு மருத்துவமனையில் முதலுதவி அளிக்கப்பட்டது. பின்னர் பார்த்தி பனூரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்ட பாலமுருகன், சிகிச்சை பலனின்றி 12.4.2012 இரவு மரண மடைந்துள்ளார். இது தொடர்பாக, பாலமுருகனின் சகோதரர் ரமேஷ்குமார் அளித்த புகாரின் அடிப்படையில், காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 174–ன்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. பாலமுருகன் அவரது தந்தை சேது கண்டித்ததால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டுள்ளாரே தவிர, காவல் துறையினர் விசாரித்ததற்கும், பாலமுருகனின் தற்கொலைக்கும் தொடர்பில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் பேசும்போது, சிறப்பு உதவி ஆய்வாளருக்கும், உதவி ஆய்வாளருக்குரிய சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

உதவி ஆய்வாளர் என்ற பதவிக்கு காலிப் பணியிடங்கள் இருந்தால்தான், தலைமைக் காவலர்கள் பதவி உயர்வு செய்யப்படுகிறார்கள். அவ்வாறு, காலிப் பணியிடங்கள் இல்லாமல், குறிப்பிட்ட ஆண்டு பணிக் காலம் முடிந்ததும், தலைமைக் காவலர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். இவர்களும், உதவி ஆய்வாளர்கள் அணியும் அதே சீருடையைத் தான் அணிகிறார்கள்.

அதே போன்று, அமைச்சுப் பணியாளர் காலி இடங்கள் நிரப்பிட வேண்டும் என்றும், காவல் துணை கண்காணிப்பாளர் (தொழில்நுட்பம்) பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். அமைச்சுப் பணியாளர் காலிப் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணையம் மூலம் விரைவில் நிரப்பப்படும். மேலும், காவல் துணை கண்காணிப்பாளர் (தொழில்நுட்பம்) பதவியில் 8 பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் விரைவில் நிரப்பப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள், சிவகங்கை மாவட்டத்தில் நில அபகரிப்பு சிறப்புப் பிரிவு இன்னும் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்று தெரிவித்தார். சிவகங்கை மாவட்டத்தில், நில அபகரிப்புத் தடுப்புப் பிரிவில் இதுவரை 392 புகார்கள் பெறப்பட்டு, அவற்றில் 333 புகார்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு, 11 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 6 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். காவல் துறை கண்காணிப்பாளரின் நேரடி மேற்பார்வையில் இவ்வழக்குகள் புலன் விசாரணையில் உள்ளன.

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே! முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், பல்வேறு அதிகார மையங்கள் செயல்பட்டு ஒன்றுக்கொன்று முரணான உத்தரவுகளைப் பிறப்பித்து வந்ததால், யாருடைய உத்தரவை செயல்படுத்துவது என்று தெரியாமல் பெருத்த பாதிப்புக்கு காவல் துறையினர் ஆளாயினர். இதன் காரணமாக சட்டத்தின் ஆட்சி நடைபெறுவதற்கு பதிலாக சட்ட விரோதிகளின் ஆட்சி தான் நடைபெற்றது. ரவுடிகளின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்தது. உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்ற விதம்; சென்னை சட்டக் கல்லூரி வளாகத்தில் மாணவர்களுக்கு இடையே மோதல் நடைபெற்ற போது காவல் துறையினர் வேடிக்கை பார்த்தது; சென்னை உயர் நீதிமன்ற வளாகத்திற்குள் புகுந்து அங்குள்ள வழக்கறிஞர்களையும், நீதிபதிகளையும், பொதுமக்களையும் காவல் துறையினர் தாக்கியது; சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியின் போது, முதலமைச்சர், மத்திய – மாநில அமைச்சர்கள், உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகள், காவல் துறை உயர் அதிகாரிகள் ஆகியோருக்கு முன்பே ரவுடிகள் வன்முறை வெறியாட்டம் நடத்தியது என பல்வேறு சம்பவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ரவுடிகளின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்தது. காவல் துறையினரின் கைகள் கட்டப்பட்டு இருந்தன.

இப்படி இருந்த காவல் துறையை, மக்களின் நண்பனாகவும், வன்முறையாளர்களுக்கு சிம்ம சொப்பனமாகவும் விளங்கும் வகையில் நான் மாற்றி அமைத்துள்ளேன். இதன் காரணமாக, அமளிக் காடாக விளங்கிய தமிழகம் அமைதிப் பூங்காவாக மாறி வருகிறது. குற்றங்களின் எண்ணிக்கை குறைந்து, குற்றங்களைக் கண்டுபிடித்தலின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பிற மாநிலக் காவல் துறையினரை ஒப்பிடுகையில், நமது மாநிலக் காவல் துறையினர் திறம்படப் பணிபுரிந்து வருகின்றனர்.

திமுக.-வினர் தங்கள் கட்சியினர் மீதும், முன்னாள் தி.மு.க அமைச்சர்கள் மீதும் உண்மைக்கு மாறாக நில அபகரிப்பு வழக்குகள் போடப்படுகின்றன என்ற தவறான குற்றச்சாட்டுக்களை இந்த சட்டப் பேரவையிலும், அவைக்கு வெளியிலேயும் தெரிவித்து வருகின்றனர். இதில் எள்ளளவும் உண்மை இல்லை என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் போது, சட்ட விரோத கும்பல்கள் நிலம் மற்றும் சொத்துக்களின் உரிமையாளர்களை மிரட்டியும்; அவர்களைக் கடத்திச் சென்றும்; அவர்களது சொத்துக்களை அடிமாட்டு விலைக்குப் பதிவு செய்வதையும்; போலியான ஆவணங்களைத் தயார் செய்து பொதுமக்களின் சொத்துக்களை தங்கள் பெயரில் பதிவு செய்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தன. இதனால் பாதிக்கப்பட்டோர் புகார் அளிப்பதற்குக் கூட அஞ்சினர். அதையும் மீறி அளிக்கப்பட்ட புகார்களில் பெரும்பான்மையானவை உதாசீனப்படுத்தப்பட்டன. இது போன்ற அடாவடிச் செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், எனது தலைமையிலான அஇஅதிமுக அரசு பொறுப்பேற்ற பிறகு, நில அபகரிப்புப் புகார்களின் மீது சட்டத்திற்கு உட்பட்டு, நேர்மையான முறையில் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டது. இதனையடுத்து, பாதிக்கப்பட்ட பொதுமக்கள் நில அபகரிப்பு குறித்து துணிச்சலுடன் காவல் துறையினரிடம் புகார் தர முன் வந்தனர்.

உண்மையில் சொல்லப் போனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி காலத்திலேயே நில அபகரிப்புப் புகார்கள் காவல் துறையில் கொடுக்கப்பட்டுள்ளன. காவல் துறை நடவடிக்கை எடுக்காத இனங்களில், சிலர் உயர் நீதிமன்றத்திலேயே வழக்குத் தொடர்ந்த நிகழ்வுகளும் உள்ளன.

2006லிருந்து 2011ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்திலேயே, நில அபகரிப்பு, மோசடி மற்றும் போலிப் பத்திரங்கள் குறித்து 6,615 புகார்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இவற்றில் பூர்வாங்க விசாரணைக்குப் பின் 1,887 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இவற்றில் 375 வழக்குகளில் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டன. சென்னைக் காவல் துறையில் மத்திய காவல் பிரிவில் நில ஆக்கிரமிப்பு மற்றும் மோசடி குறித்து விசாரிக்க உதவி ஆணையாளர் தலைமையில் தனிப் பிரிவு ஒன்றும் இருந்தது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அதிகார மையங்களில் இருந்தவர்களின் ஆதரவோடு,

"காவல் துறையை, மக்களின் நண்பனாகவும், வன்முறையாளர்களுக்கு சிம்ம சொப்பனமாகவும் விளங்கும் வகையில் நான் மாற்றி அமைத்துள்ளேன். இதன் காரணமாக, அமளிக் காடாக விளங்கிய தமிழகம் அமைதிப் பூங்காவாக மாறி வருகிறது. குற்றங்களின் எண்ணிக்கை குறைந்து, குற்றங்களைக் கண்டுபிடித்தலின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பிற மாநிலக் காவல் துறையினரை ஒப்பிடுகையில், நமது மாநிலக் காவல் துறையினர் திறம்படப் பணிபுரிந்து வருகின்றனர்."

எவ்வித அச்சமுமின்றி நடைபெற்று வந்த நில அபகரிப்பு மோசடிகள் தொடர்பாக பாதிக்கப் பட்டவர்களில் பெரும்பாலானோர் அச்சத்தின் காரணமாகப் புகார் கொடுக்க முன் வரவில்லை. புகார் அளித்தவர்களின் புகார்கள் மீதும் சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 375 இனங்களில் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டு இருந்தாலும், எதிரிகளைக் கைது செய்வதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்டவர்களின் சொத்துக்களை மீட்பதற்கும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, வேண்டுமென்றே நில அபகரிப்புப் புகார்கள் தொடர்பான வழக்குகள் போடப்படுகின்றன என்பது முற்றிலும் தவறானது. எனது தலைமையிலான அரசால் எடுக்கப்பட்ட பாரபட்சமற்ற நடவடிக்கை காரணமாக பொதுமக்கள் அதிக அளவில் புகார் கொடுக்கின்றனர் என்பதும்; அவ்வாறு கொடுக்கப்படும் புகார்கள் காரணமாக நிலங்களை இழந்தவர்கள் தங்கள் நிலத்தை மீளப் பெற்று வருகின்றனர் என்பதும் தான் உண்மை. இதனைக் காணும் போது, நில அபகரிப்பாளர்களால் நிலத்தை இழந்தவர்கள் அதிக அளவில் புகார்களைக் கொடுத்து வருகின்றனர் என்பது தான் உண்மை நிலை.

திமுக.வைச் சேர்ந்த முக்கியமானவர்கள் மீது நில அபகரிப்பு வழக்குகள் வேண்டுமென்றே அரசியல் காரணங்களுக்காகப் போடப்படுகின்றன என்ற ஒரு உண்மைக்கு மாறான குற்றச்சாட்டை தி.மு.க.வினர் அடிக்கடி சொல்லி வருகின்றனர். அவ்வாறு கூறுவதன் மூலம், நில அபகரிப்புப் பழியிலிருந்து தப்பி விடலாம் என்று நினைக்கின்றனர். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற பழமொழிக்கு ஏற்ப, நில அபகரிப்பு குறித்த ஒரே ஒரு புகார் பற்றி இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! 29.11.2011 அன்று சென்னை மாநகரக் காவல் துறை ஆணையரிடம் திரு.என். சேஷாத்ரி குமார் என்பவர் ஒரு புகார் கொடுத்திருந்தார். அந்தப் புகாரில், தனது குடும்பத்திற்குச் சொந்தமாக இருந்த 6 கிரவுண்ட் நிலத்தை திரு. மு.க. ஸ்டாலின் வாங்கி அங்கு குடியேறியதாகவும், அதன் பின்னர் அந்த வீட்டிற்கு அடுத்து உள்ள தனது வீட்டை விற்க கட்டாயப்படுத்தி, திரு. ராஜா சங்கர், திரு. ஸ்ரீனிவாசன் உள்ளிட்ட சிலர் தனது வீட்டை திரு. மு.க. ஸ்டாலினுக்குக் கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தியதாகவும்; அவர்களின் மிரட்டலுக்குப் பயந்து, தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் 16.7.2010 அன்று புகார் செய்ததாகவும்; ஆனால் காவல் துறையினர் அதனை வாங்க மறுத்துவிட்டதாகவும்; அதன் பிறகு திரு. பி. வேணுகோபால் ரெட்டி பெயரில் 5½ கோடி ரூபாய்க்கு வரைவோலை கொடுத்து தனது வீட்டைக் கிரயம் செய்து கொண்டார்கள் என்றும், தற்போது இந்த வீடு திரு. உதயநிதி ஸ்டாலின் பெயரில் 20 ஆயிரம் ரூபாய் வாடகைக்கு ஒப்பந்தம் போடப்பட்டு திரு. மு.க. ஸ்டாலினின் மகள் செந்தாமரை அதில் குடியிருந்து வருகிறார் என்றும் புகார் கூறியுள்ளார். மேலும், தனக்கு கொலை மிரட்டல் விடுத்து வரும் திரு. வேணுகோபால் ரெட்டி, திரு. மு.க. ஸ்டாலின், திரு. உதயநிதி ஸ்டாலின், திரு. ராஜா சங்கர், திரு. ஸ்ரீனிவாசன் உள்ளிட்டவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து தன் வீட்டை மீட்டு தருமாறும் தனது புகாரில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தப் புகாரின் அடிப்படையில், காவல் துறையினர் திரு. வேணுகோபால் ரெட்டி, திரு. மு.க. ஸ்டாலின், திரு. உதயநிதி ஸ்டாலின், திரு. ராஜா சங்கர், மற்றும் திரு. ஸ்ரீனிவாஸ் ஆகியோர் மீது சட்டப்படி வழக்குப் பதிவு செய்தனர். உடனே திரு. மு.க. ஸ்டாலின் தன்னை நிரபராதி என்று காட்டிக் கொள்ளும் பொருட்டு, ஆவேசமாக் காவல் துறை தலைமை இயக்குநரை சந்திக்கச் சென்று, தன்னை உடனே கைது செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

துணை முதலமைச்சராய் இருந்து காவல் துறை சம்பந்தப்பட்ட சில கோப்புகளை கவனித்தவர் திரு. மு.க. ஸ்டாலின்; காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது இரு முறை பதில் அளித்தவர் திரு. ஸ்டாலின். அப்படிப்பட்ட திரு. ஸ்டாலினுக்கு எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்ட ஒரு புகாரின் பேரில் தேவைப்பட்டால், புலன் விசாரணை அதிகாரி தான் கைது செய்வார் என்பது தெரியாதா ? நிச்சயம் தெரியும். ஆனாலும், தனது வீராப்பினைக் காட்டுவதற்காக, தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்திலிருந்து தப்பிப்பதற்காக, பொதுமக்களை ஏமாற்றுவதற்காக, காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திற்கு சென்று உள்ளார். மேலும், நீதிமன்றத்தின் மூலமாக வழக்கைச் சந்திப்பதாக சவாலும் விடுத்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இந்த வழக்கை, திரு. ஸ்டாலின், நீதிமன்றத்தின் மூலமாக சந்தித்து தான் நிரபராதி என்பதை நிருபித்தாரா என்றால் இல்லை.

இந்தச் சூழ்நிலையில், மேற்படி சொத்து சட்டப்படி வாங்கப்பட்டது என்றும், இதில் எந்த விதமான நில அபகரிப்பும் இல்லை என்றும் தெரிவித்து, காவல் துறையினரால் தொடுக்கப்பட்ட இந்த குற்ற வழக்கினைத் தள்ளுபடி செய்யுமாறு திரு. வேணுகோபால் ரெட்டி சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கினைத் தொடுத்தார்.

இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது, மேற்படி சொத்தை வாங்கிய திரு. வேணுகோபால் ரெட்டிக்கும்; மேற்படி சொத்தை விற்ற திரு. சேஷாத்ரி குமாருக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, மேற்படி சொத்தை வாங்கிய திரு. வேணுகோபால் ரெட்டி, விற்பனையாளர் திரு. சேஷாத்ரி குமாருக்கு வரைவோலை மூலம் 1 கோடியே 75 இலட்சம் ரூபாயை கொடுத்துள்ளார். இதனைப் பெற்றுக் கொண்ட புகார்தாரர் திரு. சேஷாத்ரி குமார், திரு. வேணுகோபால் ரெட்டி, திரு. மு.க. ஸ்டாலின், திரு. உதயநிதி ஸ்டாலின், திரு. ராஜா சங்கர், மற்றும் திரு. ஸ்ரீனிவாஸ் உள்ளிட்டவர்களுக்கு எதிரான புகாரினைத் தொடர விருப்பமில்லை என்று தெரிவித்து, அந்த வழக்கினை முடித்து விடுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், காவல் துறையால் மேற்கொள்ளப்பட்ட வழக்கினைத் தள்ளுபடி

செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! காவல் துறையினரால் போடப்பட்ட வழக்கில் ஆதாரம் இல்லை என்று சொல்லி உயர் நீதிமன்றம் வழக்கினைத் தள்ளுபடி செய்யவில்லை. நீதிமன்றத்திற்கு வெளியே புகார்தாரரும், குற்றம் சுமத்தப்பட்ட முதல் நபரும் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டதை அடுத்து, அதன் மூலம் புகார்தாரருக்கு 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் கூடுதலாகக் கிடைத்துள்ளதை அடிப்படையாக வைத்துத் தான் இந்த வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், இந்தப் புகாருக்கு உள்ளானவர்கள், மேற்படி இடத்திற்கு 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் குறைவாக கொடுத்து நிலத்தை எடுத்துக் கொண்டார்கள் என்பது தானே இதிலிருந்து தெரிய வருகிறது? இதை நில அபகரிப்பு என்று சொல்லாமல் வேறு என்ன என்று சொல்லி அழைப்பது?

இதிலே கவனிக்க வேண்டிய மற்றுமொரு அம்சம் என்னவென்றால், சென்னையின் மிக முக்கியப் பகுதியான தேனாம்பேட்டையில், 2½ கிரவுண்டு நிலம் மற்றும் 4,432 சதுர அடி கொண்ட கட்டடத்தை வெறும் 20,000 ரூபாய்க்கு வாடகை ஒப்பந்தம் செய்திருக்கிறார் திரு. உதயநிதி ஸ்டாலின். இதற்கு முன்பு இருந்த வாடகைதாரர் 1 லட்சத்து இருபதாயிரம் ரூபாய் வாடகை அளித்து இருக்கிறார். ஆனால், தற்போது வெறும் 20,000 ரூபாய் மட்டுமே அளிக்கப்படுகிறது. திரு. வேணுகோபால் ரெட்டி ஏன் இவ்வளவு குறைந்த வாடகைக்கு இந்த வீட்டை அளித்தார் என்று திரு. மு.க. ஸ்டாலின் தான் விளக்க வேண்டும்!

காவல் துறையினர் தி.மு.க. வினர் மீது மட்டும் வழக்குகள் பதிவு செய்கிறார்கள் என்று சொன்னால், பதிவு செய்யப்பட்ட 1,225 வழக்குகளில் சம்பந்தப்பட்ட அனைவரும் தி.மு.க.வினரா என்றால் நிச்சயமாக இல்லை. தவறு செய்த அனைவர் மீதும் தான் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்த அரசு அமைந்ததிலிருந்து 12.4.2012 வரை, 34,703 நில அபகரிப்பு புகார்கள் பெறப்பட்டுள்ளன. பூர்வாங்க விசாரணைக்குப் பின் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 1,225. புலன் விசாரணை முடிந்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 74. ஆக்கிரமிப்பாளர்கள் இடமிருந்து மீட்கப்பட்ட சொத்துக்கள் 1,317.15 ஏக்கர் மற்றும் 4.44 லட்சம் சதுர அடி மனைகள். மீட்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு சுமார் 758.04 கோடி ரூபாய் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் தி.மு.க.வினர் தான் கைது செய்யப்படுகிறார்கள் என்றும் குற்றம் சாட்டுகின்றனர். குண்டர் சட்டத்தின் கீழ், சிறையில் அடைக்கப்பட்ட 2,053 பேரும் தி.மு.க.வினரா? இதில் தி.மு.க.வினரும் இருக்கலாம்.

தி.மு.க.வில் குண்டர்கள் இருக்கிறார்கள் என்று தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியே கூறியிருக்கிறார்.

3.2.2012 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக் குழுக் கூட்டத்தில் பேசிய திரு. கருணாநிதி, "தி.மு. கழகத்தின் பொதுக்குழு சீரோடும், சிறப்போடும் அமைதியாக நடைபெறுகிறதே என்பதை ஒற்றர்கள் மூலமாகக் கேள்விப்பட்டு அவர்களை விட்டே சிலரைத் தூண்டி விட்டு வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் பேச்சில் எந்தத் தவறும் இல்லாத சூழ்நிலையில் அவர் தி.மு. கழகத்திலே உள்ள தொண்டர்களுக்கு, பிரமுகர்களுக்கு விடுத்த வேண்டுகோளைத் தவறாகத் திரித்து அவர் மீது மோதுவது போல; இங்கே தம்பி ஸ்டாலினுக்கு ஆதரவாக இருப்பதைப் போலக் காட்டிக் கொண்டு ஒரு பிளவைக் கழகத்திலே ஏற்படுத்த சில குண்டர்கள் முயற்சித்ததை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது" என்று கூறியிருக்கிறார். அதாவது, தி.மு.க.வில் குண்டர்கள் இருக்கிறார்கள் என்று அந்தக் கட்சியின் தலைவரே ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! ஒரே ஒரு குண்டர் தடுப்பு கைது குறித்து இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் அருகில் உள்ள கருங்கடல் கிராமத்தைச் சார்ந்த டேனியல் என்பவர் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சாத்தான்குளம் தாலுகா பகுதியில் பல இடங்களில் ஆள் மாறாட்டம் செய்து, போலி ஆவணங்கள் தயாரித்து, 5 கோடி ரூபாய் மதிப்புள்ள 500 ஏக்கர் நிலத்தை பல நபர்களிடமிருந்து அபகரித்துள்ளார். இது தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட குற்றப் பிரிவில் 18 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு டேனியல் கைது செய்யப்பட்டார். இவர் 28.2.2012 அன்று குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார். இவர் என்ன தி.மு.க.வைச் சேர்ந்தவரா?

காவல் துறையைப் பொறுத்தவரையில், சட்டம்–ஒழுங்கை நன்கு பராமரிக்கும் வகையில், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டும் வகையில், யார் தவறு செய்கிறார்களோ அவர்கள் மீது விருப்பு வெறுப்பின்றி சட்டப்படி நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இங்கே பேசிய சில உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமையைக் குறை கூறி பேசியுள்ளனர். கொலை, கொள்ளை சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளனர். இது குறித்து எனது விளக்கங்களை இங்கே எடுத்துரைக்க விரும்புகிறேன்.

பொதுவாக வழக்குகளின் எண்ணிக்கை மக்கள் தொகைக்கு ஏற்ப கூடி வருவது வாடிக்கை தான். இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ், IPC–யின் கீழ், தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 2001–ல் 1,55,422 ஆக இருந்தது, 2011–இல் 1,92,879ஆக உயர்ந்துள்ளது. தேசிய குற்ற ஆவணங்கள் கூடம், National Crime Records Bureau தயாரித்து வெளியிட்டுள்ள "இந்தியாவில் குற்றங்கள் – 2010", Crime in India – 2010 என்ற தொகுப்பில் உள்ள விவரங்களைப் பார்த்தாலும், அகில இந்திய அளவில் குற்றங்கள் கூடி வருவது தெரிய வரும்.

குற்றங்களிலேயே கொடிய குற்றமாகக் கருதப்படும் கொலைக் குற்றங்கள் 2002–லிருந்து ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வந்து 2006–ஆம் ஆண்டுக்கு பிறகு ஆண்டுதோறும் கூடிக் கொண்டே வந்திருக்கிறது.

2002–இல் 1,605 கொலைக் குற்றங்கள்;
2003–இல் 1,473
2004–இல் 1,389
2005–இல் 1,365
2006–இல் 1,273

இதுவரையில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, ஒவ்வொரு ஆண்டும் கொலைக் குற்றங்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்திருக்கிறது. அதன் பின்னர், மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி அமைந்தது. அதன் பிறகு, 2007 இல் 1,521 கொலைகள். கவனியுங்கள். 2006–இல் 1,273 ஆக இருந்தது. 2007–இல் 1,521 ஆகிவிட்டது. 2008–இல் 1,634. 2009–இல் 1,644. 2010–இல் 1,715 கொலைக் குற்றங்கள்.

2006 உடன் ஒப்பிடும் போது 2010–ல் கொலைக் குற்றங்களின் எண்ணிக்கை 35 சதவீதம் உயர்ந்துள்ளது. எனது முந்தைய ஆட்சியில் குறைந்து கொண்டே வந்த கொலைக் குற்றங்கள்; அதற்கு பின் வந்த திமுக ஆட்சியில் கூடிக் கொண்டே வந்துள்ளன. 2011–ஆம் ஆண்டிலும் இந்த எண்ணிக்கை உயர்ந்திருந்தாலும், இந்த உயர்வு 1.8 சதவீதம் தான் என்பதும்; அதற்கு முந்தைய ஆண்டின் உயர்வான 4.3 சதவீதத்திற்கு இது மிகவும் குறைவானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலான கொலைகள், குடும்பப் பிரச்சினை, வாய்த் தகராறு, முன் விரோதம், கள்ளத் தொடர்பு, பணம் கொடுக்கல் வாங்கல் ஆகியவற்றின் காரணமாகவே நிகழ்கின்றன. இச்சம்பவங்கள் திடீரென்று அல்லது கோபம் காரணமாக நிகழ்பவை. திட்டமிட்டு செய்யப்பட்ட கொலைகளின் எண்ணிக்கை மிகக் குறைவு. எனவே இவை அனைத்தையும் காவல்துறை தடுக்க முடியும் என்று எதிர்பார்க்க இயலாது. ஆனால், பணத்திற்கும் நகைகளுக்காகவும் செய்யப்படும் ஆதாயக் கொலைகள் மீது காவல்துறை மிகவும் கவனம் செலுத்த வேண்டும். ஆதாயக் கொலைகளின் எண்ணிக்கை 2006–இல் 89 ஆக இருந்து, ஆண்டுதோறும் கூடி 2010–இல் 153 ஆக உயர்ந்துள்ளது. இது, 2011–ல் 123 ஆக குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதாவது, ஆதாயக் கொலைகள் ஏறத்தாழ 20 சதவீதம் 2011–இல் குறைந்திருக்கிறது.

வாகன வசதிகள் பெருகி உள்ள நிலையில் வெகு தொலைவிலிருந்து குற்றவாளிகள் இங்கு வந்து குற்றங்களை செய்து விட்டுத் தப்பித்து விடுவது தற்போது நடைபெற்று வருகிறது. திருப்பூரில் நடந்த கன்னக்களவு வழக்கில் மேற்கு வங்கத்திலிருந்து வந்த குற்றவாளிகளைத் தேடி திருப்பூர் காவல்துறையினர் வங்காளத் தேச எல்லைக்குச் சென்று, இரண்டு குற்றவாளிகளைப் பிடித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

முந்தைய தி.மு.க. ஆட்சியின் போது நடைபெற்ற கொலை வழக்குகளும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன. உதாரணத்திற்கு சில வழக்குகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நாம் தமிழர் கட்சியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முத்துக்குமார் என்பவரை கடந்த 15.02.2011 அன்று அடையாளம் தெரியாத நபர்கள் கொலை செய்தனர். பின்னர், இவ்வழக்கு 21.06.2011 அன்று புதுக்கோட்டை மாவட்ட குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றம்

செய்யப்பட்டு, சுரேஷ் உள்ளிட்ட 7 எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு தற்போது வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

தருமபுரி மாவட்டம், இந்தூர் காவல் நிலைய சரகம், பள்ளப்பட்டியில் முருகன் என்பவர் **16.04.2009** அன்று இரவு கொலை செய்யப்பட்ட வழக்கில், புலன் விசாரணைக்குப் பின்பு, **30.11.2009** அன்று கண்டுபிடிக்க முடியாத வழக்காக முடிக்கப்பட்ட வழக்கு, மீண்டும் **11.08.2011** அன்று இவ்வழக்கில் மறு விசாரணை மேற்கொள்ளப்பட்டு, விசாரணையில், நல்லம்பள்ளி பா.ம.க. ஒன்றியச் செயலாளர் பெரியசாமி மற்றும் மூவர் முருகனைக் கொலை செய்து அருகில் உள்ள கிணற்றில் வீசி விட்டுச் சென்றதும் தெரிய வந்து, நான்கு எதிரிகள் கைது செய்யப்பட்டு, வழக்கு தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலைய சரகம், ஆத்திப்பட்டியில், **1.4.2008** அன்று, அடையாளம் தெரியாத நபர்கள், ம.தி.மு.க. உறுப்பினர் முருகன் என்பவரைக் கொலை செய்தது தொடர்பாக, **2.4.2008** அன்று வழக்குப் பதிவு செய்யப்பட்டு, வழக்கு **2.4.2009** அன்று மாநில குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டு, விசாரணையில் இருந்து வந்த வழக்கில், **18.4.2012** அன்று அருப்புக்கோட்டை ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் அழகு ராமானுஜம், அவரது கூட்டாளிகளுடன் சேர்ந்து கொலை செய்தது கண்டுபிடிக்கப்பட்டு, அழகு ராமானுஜம் கைது செய்யப்பட்டார்.

சென்ற ஆட்சியில் செல்வாக்குப் படைத்தவர் களின் ஆதரவுடன் கொலை செய்து; அதை வாகன விபத்தாக மாற்றிய சம்பவங்களில் உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டிய ஒன்றை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

மதுரை மாவட்டம், அவனியாபுரம் காவல் நிலைய சரகம், வில்லாபுரத்தைச் சேர்ந்த பாண்டியராஜன் என்பவரை அக்கிராமத்தைச் சேர்ந்த எஸ்.ஆர்.கோபி மற்றும் **15** பேர் **16.4.2009** அன்று நாடாளுமன்ற தேர்தலின் போது, தனக்குச் சொந்தமான இடத்தில் கம்யூனிஸ்ட் கட்சி தேர்தல் அலுவலகம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்ததால் ஏற்பட்ட முன் விரோதம் காரணமாக அவரைக் கொலை செய்துவிட்டு; அவனியாபுரம் ஈச்சனோடை சாலையில் பாண்டியராஜன் விபத்தில் இறந்தது போல் ஜோடித்து சடலத்தை அச்சாலையில் வீசி விட்டு எஸ்.ஆர் கோபிக்குச் சொந்தமான ஸ்கார்பியோ வாகனத்தை சடலத்தின் மீது ஏற்றி சென்றுள்ளனர். இது தொடர்பாக அவனியாபுரம் காவல் நிலையத்தில் வாகன விபத்து மரணம் என வழக்குப் பதிவு செய்யப்பட்டு பின்னர் **30.7.2011** அன்று, அவ்வழக்கு கொலை வழக்காக மாற்றம் செய்யப்பட்டு எதிரிகள் எஸ்.ஆர்.கோபி மற்றும் சுரேஷ் உள்ளிட்ட ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.

தி.மு.க. ஆட்சியில் செல்வாக்குப் பெற்றவர்களின் ஆதரவுடன், காவல் துறையின் கைகள் கட்டப்பட்ட நிலையில் குற்றங்கள் நிறைவேறின. ஆனால், இப்போது குற்றவாளிகள் ஆதரவற்ற அநாதைகள். குற்றம் செய்பவர்களும் அவர்களை தூண்டுபவர்களும், ஊக்குவிப்பவர்களும், இரும்புக்கரம் கொண்டு அடக்கப்படுகின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! காவல் துறை பணி செம்மையாக நடைபெற, வழக்கமான பணிகளை, வழக்கமான முறையில் மேற்கொண்டால் போதாது. காலத்திற்கேற்ப நவீன யுக்திகளைக் கடைபிடித்து, புதிது புதிதாக ஏற்படும் சவால்களைச் சமாளிக்கும் திறன் கொண்டதாகக் காவல் துறை விளங்கினால் தான் காவல் துறையினர் தமது பணியினைச் செம்மையாக நிறைவேற்ற இயலும். எனவே தான், நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்கும் போதெல்லாம் காவல் துறையில் பல புதிய முன் முயற்சிகளை எடுத்து வருகிறேன். இந்த முன் முயற்சிகளில் சில, காவல் துறையினர் தம் பணித் திறனை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளன; ஒரு சில பொதுமக்களுக்கு நேரடியாகப் பயனளிக்கக் கூடிய வகையில் அமைந்துள்ளன; மற்றும் சில காவல் துறையினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாக அமைந்துள்ளன. இதன் மூலம், காவல் துறையினர் முழு அர்ப்பணிப்பு உணர்வுடன் தங்கள் பணியைச் செய்ய இயலுவதால், அதன் பலன் பொதுமக்களுக்கு கிடைக்கிறது. இவ்வாறு எடுக்கப்பட்ட முன்முயற்சிகளில் ஒரு சிலவற்றை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

காவல் பணிக்கு உரிய நேரத்தில் ஆட்களைத் தேர்வு செய்வது இன்றியமையாதது ஆகும். அவ்வாறு நடைபெறும் தேர்வு வெளிப்படையாகவும், நியாயமானதாகவும் இருத்தல் வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் என்ற ஒரு வாரியத்தை **1991**ஆம் ஆண்டு நான் ஏற்படுத்தினேன்.

காவலர்களுக்கான குடியிருப்பைக் கட்ட தனி வீட்டு வசதி வாரியம் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 1981ஆம் ஆண்டு தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தை ஏற்படுத்தினார். 1989ஆம் ஆண்டு அப்போதைய தி.மு.க. அரசு இதனை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்துடன் இணைத்துவிட்டது. இதனால், காவலர்களுக்கான குடியிருப்புகளைக் கட்டுவதில் தொய்வு ஏற்பட்டது. காவலர் குடியிருப்புகள் மற்றும் காவல் துறை கட்டடங்கள் ஆகியவற்றைக் கட்டுவதற்கு தனியே ஒரு அமைப்பு இருக்க வேண்டும் என்பதால், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தை நான் 1991 ஆம் ஆண்டு மீண்டும் ஏற்படுத்தினேன். காவலர்கள் அனைவருக்கும் வீட்டு வசதி ஏற்படுத்தித் தரப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் எனது அரசு செயல்பட்டு வருகிறது.

காவல் துறையின் வரலாற்றில் ஒரு புதிய தொடக்கமாகவும், பெண்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்வதை உறுதி செய்யும் வகையிலும், மகளிராலேயே நிர்வகிக்கப்படும் அனைத்து மகளிர் காவல் நிலையம் என்ற ஒரு புதிய திட்டத்தை 1992ஆம் ஆண்டு நான் தொடங்கி வைத்தேன். மகளிர் பாதுகாப்பில் ஒரு மைல் கல்லாக விளங்கும் இந்தத் திட்டம் இதர மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்குகிறது.

கடல் வழியே தமிழ்நாட்டிற்கு அச்சுறுத்தல் ஏதும் ஏற்படாமல் இருக்கும் பொருட்டும், கடலோர பாதுகாப்பை ஏற்படுத்தும் பொருட்டும், கடலோரக் காவல் படை என்ற ஒரு புதிய அமைப்பினை 1994ஆம் ஆண்டு நான் துவக்கி வைத்தேன்.

குற்ற நிகழ்வுகளைத் தடுக்கவும், விபத்துகளில் சிக்குண்டவர்களுக்கு உடனடியாக மருத்துவ உதவி அளிக்கும் பொருட்டும், நெடுஞ்சாலை ரோந்துப் படை 1994 ஆம் ஆண்டு என்னால் தொடங்கி வைக்கப்பட்டது.

காவல் துறையின் திறமையை மேம்படுத்த தகவல் பரிமாற்றம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால், 'அனலாக்' என்ற பழைய தொழில்நுட்பத்தில் செயல்பட்டு வந்த உயர் நுண்ணலை வலைப் பின்னல் அமைப்பினை லக்கமாக, அதாவது டிஜிட்டலாக மாற்ற இந்தியாவிலேயே முதன் முதலாக 1992ஆம் ஆண்டு நான் நடவடிக்கை எடுத்தேன். இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் தான் காவல் துறையின் பயன் பாட்டிற்கென நுண்ணலைத் தகவல் தொடர்பு வசதி தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

**" இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் தான் காவல் துறையின் பயன்பாட்டிற்கென நுண்ணலைத் தகவல் தொடர்பு வசதி தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது. காவல் நிலையங்களுக்குச் செல்லும் பொதுமக்கள் அமருவதற்கு வசதியாக இந்தியாவிலேயே முதன் முறையாக, ஒவ்வொரு காவல் நிலையத்திலும் 10 நாற்காலிகள் வாங்குவதற்கு கடந்த ஆண்டு நான் அனுமதி வழங்கினேன்".**

காவல் நிலையங்களுக்குச் செல்லும் பொதுமக்கள் அமருவதற்கு வசதியாக இந்தியாவிலேயே முதன் முறையாக, ஒவ்வொரு காவல் நிலையத்திலும் 10 நாற்காலிகள் வாங்குவதற்கு கடந்த ஆண்டு நான் அனுமதி வழங்கினேன்.

காவல் துறை அலுவலர்களுக்கு சிறப்பான பயிற்சி அளிக்கும் வகையில், உலகத் தரம் வாய்ந்த காவல் உயர் பயிற்சியகம் ஊனமாஞ்சேரியில் நிறுவிட 2004 ஆம் ஆண்டு நான் அடிக்கல் நாட்டினேன். மத்திய காவல் படைகளுக்குத் தான் இது போன்ற உயர் பயிற்சியகம் உள்ளது. மாநில காவல் துறைக்கு உலகத் தரத்தில் இவ்வாறான பயிற்சியகம் ஏற்படுத்தப்பட்டது தமிழ்நாட்டில் மட்டும் தான்.

இந்தியாவிலேயே முதன் முறையாக, காவல் துறையினர் குறைந்த விலையில் பொருட்களைப் பெறும் வகையில், பல்பொருள் அங்காடிகள், அதாவது Canteens சென்னை, மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் என்னால் திறந்து வைக்கப்பட்டன.

காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு காப்பீட்டுத் தொகை உயர்த்தியது; காவலர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு படிகளை

உயர்த்தியது; உதவித் தொகைகளை உயர்த்தியது; காவல் துறையினரின் குழந்தைகளுக்கான பரிசுத் தொகைத் திட்டம் துவங்கப்பட்டது; காவலர்கள், காலத்தே பதவி உயர்வு பெறுவதை உறுதி செய்தல்; சிறப்புக் காவல் படை அணித் தலைமையிடங்கள் மற்றும் ஆயுதப்படை தலைமையிடங்களில் மருத்துவச் சேவை மையங்கள் துவக்கப்பட்டது என காவலர் நலன்களுக்காக பல்வேறு நடவடிக்கைகளையும் நான் தொடர்ந்து எடுத்து வருகிறேன்.

காவல் துறையினர் தற்போது தமது பணிகளை சிறப்பாகச் செயலாற்றுகின்றனர் என்றால், அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. காவலர் சிறப்பாகச் செயல் புரிவதற்கு ஒரு உந்துதல் அவசியம் ஆகும். அத்தகைய உந்துதலை தலைமைப் பண்பு மிக்க தலைவரால் தான் வழங்க முடியும். இந்தத் தருணத்தில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி திரு. ஹாரி எஸ். ட்ரூமென் கூறியதை இங்கு நினைவு கூர விரும்புகிறேன். "Men make history and not the other way around. In periods where there is no leadership, Society stands still. Progress occurs when courageous, skillful leaders seize the opportunity to change things for the better". முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இருந்ததும் இதே காவல் துறை தான். தற்போது எனது தலைமையின் கீழ் இயங்கி வருவதும் இதே காவல் துறை தான். ஆனால், சிறப்பாகச் செயல்பட வேண்டும், சட்டம் – ஒழுங்கை நிலை நிறுத்த வேண்டும், சட்டத்தை மதிப்பவர்களுக்கு நண்பனாகவும், சட்டத்தை மீறுபவர்களுக்கு பகைவனாகவும் செயல்பட வேண்டும் என்ற புதிய எழுச்சியுடன் காவல் துறை செயல்பட்டு வருவதற்குக் காரணம் அவர்கள் எனது தலைமையின்கீழ் பணிபுரிவதால் தான். எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் ஸ்காட்லாண்ட் யார்டு காவல் துறைக்கு இணையாகப் புகழப்பட்டு பின்னர் வீழ்ச்சியடைந்த காவல் துறை, மீண்டும் அந்தப் புகழை விரைவில் மீட்டெடுக்கும் என்பதனையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! காவல் துறையைப் போன்றே தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணியும் மகத்தானது. தீ விபத்து ஏற்படும் காலங்களிலும்; இயற்கை இடர்பாடு ஏற்படும் காலங்களிலும்; தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணி மகத்தானது ஆகும். இத்தருணங்களில், உயிர்ச்சேதம் மற்றும் பொருட் சேதங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை இத்துறை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. தீ விபத்து ஏற்படும் போது, விரைந்து சென்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதால், இத்துறைக்குத் தேவையான பல நவீன வசதிகளை எனது அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களின் வீரதீரச் செயல்களை அங்கீகரிப்பதில் எனது அரசு எப்போதும் முன் நிற்கிறது. அந்த அடிப்படையில் தான், கடந்த குடியரசு தின விழாவில், சென்னை எழிலகம் வளாகத்தில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில், உயிரைத் துச்சமென மதித்துக் கடமையாற்றி படுகாயமடைந்த கோட்ட தீயணைப்பு அலுவலர் திருமதி பிரியா, மற்றும் நிலைய தீயணைப்பு அலுவலர் திரு. முருகன் ஆகியோருக்கும், இந்த தீ விபத்தில் இறந்த முன்னணி தீயணைப்பாளர் திரு. அன்பழகனுக்கும் அண்ணா வீரதீரப் பதக்கத்தினை நான் வழங்கி சிறப்பித்தேன். தமிழகக் காவல் துறையைப் போன்றே தமிழக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை முன்னணித் துறையாக விளங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு தொடர்ந்து எடுக்கும்.

இப்போது இந்த ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்.

**உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை**

**காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான அறிவிப்புகள் 2012–2013.**

**1. காவல் துறையில் புதிய ஆள் சேர்க்கை**
**New Recruitments to the Police Force**

காவல் துறையில் தற்போது 1,12,363 பணியிடங்கள் உள்ளன. பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப காவல் துறைப் பணியாளர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையிலும்; காவல் துறையின் செயல்பாடு மேலும் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டும்; சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் காவல் துறையினர் அதிக அக்கறை செலுத்தும் வகையிலும்; மாநிலத்திலுள்ள 1,498 காவல் நிலையங்களுக்கென 19,620 கூடுதல் பணியிடங்கள் நான்கு ஆண்டு காலத்தில் தோற்றுவிக்கப்படும். இவ்வாறு புதிய பணியிடங்கள் தோற்றுவிப்பதாலும், காலிப் பணியிடங்களை நிரப்புவதாலும் மொத்தம் 30,000 பணியாளர்கள் காவல் துறைக்கென தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் 4 ஆண்டு காலத்தில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**2. காவல் துறையினருக்கான பயிற்சிக் கட்டமைப்புகளை வலுப்படுத்தல்**

**Provision of facilities to augment training infrastructure in every district for setting up of Police Training Schools**

சென்னை அசோக் நகரில் உள்ள காவல் பயிற்சிக் கல்லூரி உட்பட தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, வேலூர், கோயம்புத்தூர், ஆவடி, விழுப்புரம், சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தற்போது எட்டு நிரந்தர காவல் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. இந்தப் பயிற்சி மையங்களில் ஆண்டொன்றுக்கு 3,000 காவலர்களுக்கு மட்டுமே பயிற்சி அளிக்க முடியும்.

கடந்த 21.3.2012 அன்று 12,165 காவலர்கள் மற்றும் தீயணைப்பு வீரர்களைத் தேர்ந்தெடுக்க தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் அறிவிக்கை வெளியிட்டுள்ளது. எனவே, 2012–13–ஆம் ஆண்டில் குறைந்த பட்சம் 15,000 காவலர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டிய தேவை உள்ளது. காவல் துறையில் ஒவ்வொரு ஆண்டும் ஆள் சேர்க்கை அதிகம் அமையப் போவதால், வரும் ஆண்டுகளிலும் பயிற்சிக்கான இந்தத் தேவை தொடரும். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு காவலர் பயிற்சிப் பள்ளி தொடங்கப்படும். இதற்கென இந்த ஆண்டில் 30 கோடி ரூபாய் செலவிடப்படும்.

**3. காவல் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்க 1,000 கோடி ரூபாய் திட்டம்**

**Rs.1,000 crores package for development of infrastructure in Police Department**

என்னுடைய அரசு, காவல் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 2011–12 ஆம் ஆண்டிலேயே முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்தது. அதனை ஒரு அளவு கோலாக வைத்துக் கொண்டு அதற்கும் மேலாக, காவல் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்க, வரும் நான்கு ஆண்டுகளில் கூடுதலாக 1,000 கோடி ரூபாய் செலவிடப்படும். அதன் தொடக்கமாக இந்த நிதியாண்டில் சென்ற ஆண்டில் உள்கட்டமைப்பு வசதிகளுக்கென வழங்கப்பட்ட நிதி ஆதாரங்களைக் காட்டிலும் கூடுதலாக 250 கோடி ரூபாய் வழங்கப்படும். அரசின் இந்த நடவடிக்கையினால் தொலை நோக்குப் பார்வையுடன் காவல் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை பெருக்க முடியும்.

**4. காவல் துறையினருக்கான சீருடைப் படியை உயர்த்தி வழங்குதல்**

**Enhancement of Uniform Allowance for Police Personnel**

காவல் துறையினருக்கு வழங்கப்படும் சீருடைப் படி மாதமொன்றுக்கு 200/– ரூபாயிலிருந்து 250/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென ஆண்டொன்றுக்கு 6 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.

**5. சென்னை மாநகரக் காவல் ஆணையரகத்திற்கு ரோந்துப் பணிகளுக்கென 100 வாகனங்கள் வழங்குதல்**

**Sanction of 100 Patrol Vehicles for Chennai City Police Commissionerate**

சென்னை மாநகரில் ரோந்துப் பணிகளைத் துரிதப்படுத்த 100 வாகனங்கள் 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். இது குற்ற நிகழ்வுகளைக் குறைக்க உதவும். இந்த வாகனங்கள் அனைத்தும், காவல் நிலையங்களுடன் நேரடியாக உடனடித் தொடர்பு கொள்ளக் கூடிய வகையில் நவீன தகவல் தொடர்பு (communication) வசதிகள் பொருத்தப்பட்டவையாக இருக்கும்.

**6. லக்க அடிப்படையில் இயங்கும் காவல் வானொலி தொடர்புத் திட்டத்தை சென்னை மற்றும் திருச்சி மாநகரக் காவல் ஆணையரகங்களுக்கு அனுமதித்தல்**

**Sanction of Digital Based Police Radio System for Chennai and Trichy Commissionerates**

காவல் துறையில் தற்போது இயங்கி வரும் கம்பியில்லா தொலைத் தொடர்பு வசதிகளுக்கான digital based micro wave link 1992–இல் தான் முதன்முதலாகத் தமிழ்நாட்டில் சென்னைக்கும் மதுரைக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டது. அந்த வழியில் நவீன தொழில்நுட்ப வளர்ச்சி அடங்கிய லக்க (Digital) அடிப்படையில் இயங்கும் வானொலித் தொடர்புத் திட்டம், சென்னை மற்றும் திருச்சி மாநகரக் காவல் ஆணையரகங்களுக்காக 30 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் அனுமதிக்கப்படும்.

**7. காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல்**

**Construction of Police Stations**

இந்த அரசு பதவியேற்ற பொழுது 190 காவல் நிலையங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்தன. அவற்றுள் 2011–2012–இல் 22 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு 9 கோடியே 25 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்

பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் 60 காவல் நிலையங்களுக்கு 35 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

**8. காவல் துறை வாகனங்களின் பராமரிப்பை மேம்படுத்த காவல்துறை போக்குவரத்து நிறுவனத்தை ஏற்படுத்துதல்**

**Setting up of a Police Transport Corporation for proper maintenance of Vehicles of the Police Department**

காவல் துறையில் 13,000–க்கும் மேற்பட்ட வாகனங்கள் உள்ளன. சென்னை மற்றும் திருச்சியில் மட்டும் தற்பொழுது துறையின் வாகனங்களைப் பராமரிக்க காவல் வாகனப் பட்டறைகள் அமைந்துள்ளன. பிற இடங்களில் பராமரிப்புப் பணிகள், இயக்கூர்திகள் பராமரிப்புப் பணிகள் துறை மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே, அவசரத் தேவைகள் எழும் சமயங்களில், காவல் துறை வாகனங்களை உடனடியாகப் பழுது பார்க்க முடியவில்லை. காவல் துறையின் வாகனங்களைச் செம்மையான முறையில் தனி கவனத்துடன் திட்டமிட்டுப் பராமரிப்பதற்கென, ஒரு காவல் துறை போக்குவரத்து நிறுவனம் ஏற்படுத்தப்படும்.

**9. மாநில முதன்மைக் காவல் கட்டுப்பாட்டு அறையை ஏற்படுத்துதல்**

**Establishment of a State Police Master Control Room**

அவசர காலங்களில் காவல் துறை உடனடியாகத் தலையிட்டு உதவுவதற்கு ஏதுவாக, காவல் கட்டுப்பாட்டு அறைகள் மாவட்டத் தலைநகரங்கள் மற்றும் சில முக்கிய நகரங்களில் இயங்கி வருகின்றன. இவை அந்தந்த மாவட்டம் அல்லது ஆணையரக எல்லைகளுக்குள்ளான பகுதிகளில் அமைந்துள்ள காவல் நிலையங்கள் மற்றும் வாகனங்களுடன் தொடர்பு வசதி கொண்டவையாகும். மாநிலத்தின் எந்த ஒரு பகுதியில் காவல் துறையின் உடனடி செயல்பாடு தேவைப்பட்டாலும், அப்பகுதிக்குப் போதுமான காவல் படையை அனுப்பவும்; அவர்களது செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணிக்கவும்; மாநில அளவில் ஒரு முதன்மைக் காவல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்படும். அனைத்துக் காவல் நிலையங்கள், காவல் நிலைய வாகனங்கள், நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் மற்றும் ஏனைய ரோந்து வாகனங்கள் முதலியன கம்பியில்லாத தொடர்பு வசதி மூலம் மாநில முதன்மை காவல் கட்டுப்பாட்டு அறையுடன் இணைக்கப்படும்.

**10. தமிழ்நாடு தொழில் பாதுகாப்புப் படையை நிறுவுதல்**

**Establishment of a Tamil Nadu Industrial Security Force**

வங்கிகள், சில மத்திய அரசு நிறுவனங்கள் முதலியவற்றின் அன்றாட காவல் பணிகளுக்காக காவல் துறையினர் பணி அமர்த்தப்படுகின்றனர். இதனால் காவல் துறையில் சட்டம் ஒழுங்கு பராமரித்தல்; குற்றப் புலனாய்வு போன்ற வழக்கமான பணிகளுக்காகக் கிடைக்கப் பெறும் காவல் துறையினரின் எண்ணிக்கை குறைந்து விடுகிறது.

வங்கிகள் மற்றும் நிறுவனங்களின் காவலர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், தமிழ்நாடு தொழில் பாதுகாப்புப் படை வாரியம் அமைக்கப்படும். இந்தப் படை ஒரு காவல் துறை உயர் அதிகாரியின் தலைமையின் கீழ் இயங்கும். படையின் பயிற்சியாளர்களாக ஓய்வு பெற்ற காவல் துறை அதிகாரிகளும்; ஓய்வு பெற்ற ராணுவ வீரர்களும் அமைவர். நன்கு பயிற்சி பெற்ற திறமை வாய்ந்த தனியாரைக் கொண்டு இயங்கும் இந்தப் படை, கட்டணத்தை வசூலித்துக் கொண்டு வங்கிகள், இதர நிறுவனங்கள் முதலியவற்றில், காவலர்களை, பாதுகாப்புப் பணிகளுக்காக, பணி அமர்த்தும்.

**11. கடற்கரைப் பகுதிகளில் ரோந்துப் பணிக்காக அனைத்து நிலப் பரப்பிலும் இயங்கக் கூடிய 9 வாகனங்கள் வழங்குதல்**

**Purchase of 9 all Terrain Vehicles for Beach Patrolling**

சென்னையில் மெரினா, எலியட்ஸ் மற்றும் திருவான்மியூர் முதலிய கடற்கரைப் பகுதிகளில் ரோந்து பணிகளைத் திறம்பட மேற்கொள்ள 30 இலட்சம் ரூபாய் செலவில் அனைத்து நிலப் பரப்பிலும் இயங்கக் கூடிய 9 வாகனங்கள் வழங்கப்படும்.

**12. சிறுவர் மற்றும் சிறுமியர் குழுக்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்**

**Increasing the Number of Boys and Girls Clubs**

இளம் சிறுவர் மற்றும் சிறுமியர்கள் தவறான பாதையில் சென்று குற்ற நிகழ்வுகளில் ஈடுபடாமல் பயனுள்ள செயல்களில் அவர்களை ஈடுபடுத்த 1993–ஆம் ஆண்டு முதன்முதலாக தமிழ்நாட்டில் சிறார்

குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. 2012–2013–ஆம் ஆண்டில், ஒவ்வொரு காவல் மாவட்டத்திற்கும் 10 குழுக்கள் என்ற வீதத்தில், 400 சிறுவர் மற்றும் சிறுமியர் குழுக்கள் புதியதாக ஏற்படுத்தப்படும். இக்குழுக்களில் உள்ள சிறுவர் மற்றும் சிறுமியருக்கு மோட்டார் வாகனம் ஒட்டுதல் உள்ளிட்ட பல்வேறு திறன் வளர்க்கும் பயிற்சிகள் அளிக்கப்படும்.

**13. தமிழக எல்லையில் உள்ள 25 காவல் சோதனைச் சாவடிகளை வலுப்படுத்துதல்**

**Strengthening of 25 Checkposts in the Border Areas**

தமிழக எல்லைப் பகுதிகளில் 107 காவல் சோதனைச் சாவடிகள் உள்ளன. அவற்றில் மிகவும் முக்கியமான 25 காவல் சோதனைச் சாவடிகள் 5 கோடி ரூபாய் செலவில் நவீனமயம் ஆக்கப்படும்.

**14. தடய அறிவியல் துறையின் செயல் திறனை மேம்படுத்துதல்**

**Strengthening the Capabilities of the Forensic Sciences Department**

தடய அறிவியல் துறையின் திருச்சி மற்றும் கோயம்புத்தூர் மண்டல ஆய்வகங்களில் உள்ள குருதி வடிநீரியல் ஆய்வுப் பிரிவுகள் ரத்த மாதிரிகளைப் பரிசோதிக்கும் வசதிகளுடன் 1 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். இந்த ஆய்வகங்கள் ரத்த மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்யக் கூடிய செயல் திறனைப் பெறுவதால் குற்றவாளிகளைக் கண்டறிவதில் துறையின் செயல்பாடு மேன்மை அடையும்.

**15. காவல் நிருவாகப் பிரிவைத் தரம் உயர்த்துதல்**

**Upgradation of the Administrative Wing**

சென்னைக் காவல் ஆணையரகத்தில் உள்ள மண்டல அலுவலகங்களில் நிருவாகப் பணியில் பணிபுரிபவர்கள் பதவி உயர்வு பெற ஏதுவாக 5 முதுநிலை நிருவாக அலுவலர் பதவிகள் 32 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

**16. குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையை வலுப்படுத்துதல்**

**Strengthening of CBCID Wing**

குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் செயல்பாட்டினை வலுப்படுத்துவதற்காக 3 கோடி ரூபாய் செலவில் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப் பட்டு, நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய தகவல் தொடர்புக் கருவிகள், கணினிகள் போன்ற தளவாடங்களும் வழங்கப்படும்.

**17. சென்னை மாநகரக் காவல் ஆணையர் அலுவலகத்திலுள்ள படைக் குடியிருப்பினைப் புதுப்பித்தல்**

**Reconstruction of barracks in Chennai Commissioner's Office**

சென்னை மாநகர காவல் ஆணையரக அலுவலக வளாகத்தில் உள்ள 500 ஆயுதப்படை காவலர்களுக்கான படைக் குடியிருப்பு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இந்த படைக் குடியிருப்பு 3 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படும்.

**18. போக்குவரத்துக் காவல் நிலையங்கள் உருவாக்குதல்**

**Formation of Traffic Police Stations in important Cities**

தமிழ்நாட்டில் மொத்தம் 213 போக்குவரத்துக் காவல் நிலையங்கள் உள்ளன. மேலும், சில நகரங்களில், போக்குவரத்தை சரி செய்யவும்; போக்குவரத்து தொடர்பான காவல் பணிகளைச் செம்மையாக மேற்கொள்ளவும்; போக்குவரத்துக் காவல் நிலையங்கள் தேவைப்படுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு கூடுதலாக 5 புதிய போக்குவரத்துக் காவல் நிலையங்கள் 2 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். இவை மணப்பாறை, தாராபுரம், திருப்பத்தூர், அவனியாபுரம் மற்றும் சென்னை மாநகரத்தில் குரோம்பேட்டை ஆகிய இடங்களில் அமைக்கப்படும்.

**19. காவல் துறை அதிகாரிகளின் பாதுகாப்பிற்காக குண்டு துளைக்காத கவச மேற்சட்டைகள் வழங்குதல்**

**Providing Bullet Proof Jackets for the protection of Police Personnel**

அபாயகரமான மற்றும் ஆபத்தான சூழ்நிலைகளில் பணிகளை மேற்கொள்ளும் காவல் துறை அதிகாரிகளின் பாதுகாப்பிற்காக 32 இலட்சம் ரூபாய் செலவில் 80 குண்டு துளைக்காத கவச மேற்சட்டைகள் கொள்முதல் செய்யப்படும்.

**20. தகவல் தொடர்பு கோபுரங்கள் 10 இடங்களில் நிறுவுதல்**

**Erection of Communication Towers at 10 Places**

மிக உயர் அலை (VHF) தகவல் தொடர்பு அமைப்பினை மேம்படுத்த 40 மீட்டர் உயரமுள்ள

தகவல் தொடர்பு கோபுரங்கள், திருவாரூர் மாவட்டத்தில் முத்துப்பேட்டையிலும்; சிவகங்கை மாவட்டத்தில் திருப்பாச்சேத்தியிலும்; கோயம்புத்தூர் மாவட்டத்தில் எம்.எல்.புரம் மற்றும் கவரக்கல்லிலும்; இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடனையிலும்; மற்றும் 60 மீட்டர் உயரமுள்ள தகவல் தொடர்பு கோபுரங்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் பேராவூரணியிலும்; மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழியிலும் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

மேலும், ராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதியிலும்; நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி மற்றும் தொட்டபெட்டாவிலும்; 70 இலட்சம் ரூபாய் செலவில் தகவல் தொடர்பு வசதிகளை சீராக்க அதி உயர கோபுரங்கள் நிறுவப்படும்.

**21. சூரிய சக்தியினால் இயங்கக் கூடிய பதிலி சாதனங்கள் மூலம் (Back up system) மின் வசதிகளை காவல் நிலையங்களில் ஏற்படுத்துதல்**

**Installation of Solar Power Back up System for Police Stations**

குற்றம் மற்றும் குற்றவாளிகள் வலைப்பின்னல் திட்டத்தினைச் செயல்படுத்தும் காவல் நிலையங்களுக்குத் தடையில்லா மின்சக்தி வழங்கக் கூடிய சூரிய சக்தியினால் இயங்கும் பதிலி சாதனங்கள், (Back up system), 65 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**22. காவல் துறை அலுவலர்களுக்கு இரு சக்கர வாகனங்கள் வழங்குதல்**

**Providing Two-wheelers for Police Personnel**

காவல்துறையில் பணிபுரியும் சார்பு ஆய்வாளர்களின் பயன்பாட்டிற்காக 1 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் 228 இரு சக்கர வாகனங்கள் வழங்கப்படும்.

**23. இணைய வழிக் குற்ற ஆய்வுக் கூடம் தோற்றுவித்தல்**

**Formation of Cyber Lab**

உள்நாட்டுப் பாதுகாப்பிற்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய வகையில் செயல்படும் சில குற்றவாளிகள் இணைய வழி மூலம் தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்கின்றனர். அவர்களது நடவடிக்கைகளைக் கண்காணிக்கக் கூடிய திறனை உள்நாட்டுப் பாதுகாப்பு நுண்ணறிவுப் பிரிவில் வளர்க்கும் வகையில், ஒரு இணைய வழிக் குற்ற ஆய்வுக் கூடம் 60 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்படும்.

**24. வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் செயல் இழப்புப் பிரிவுக்கு குண்டு துளைக்காத ஆடைகள் வழங்குதல்**

**Providing of Bomb suits to Bomb Detection and Disposal Squads**

வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் செயல் இழப்புப் பிரிவினருக்கு 80 இலட்சம் ரூபாய் செலவில் குண்டு துளைக்காத ஆடைகள் வழங்கப்படும்.

**25. வேலூரில் உள்ள ஆயுதப்படைப் பிரிவுக்கு கட்டடம் கட்டுதல்**

**Construction of Armed Reserve Building in Vellore**

வேலூரில் உள்ள ஆயுதப்படைப் பிரிவுக்கு 2 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய கட்டடம் கட்டப்படும்.

**26. படைக் குடியிருப்புகளுக்கு அடுக்குப் படுக்கைகள் வழங்குதல்**

**Provision of Bunker Beds in Police Barracks**

சிறப்புக் காவல் படை மற்றும் ஆயுதப் படை வளாகங்களில் குடியிருக்கும் காவலர்களுக்கென அடுக்குப் படுக்கை அமைப்புகள் 3 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**27. காவல் துறையின் நுண்ணறிவுப் பிரிவின் திறனை கிராம அளவில் வலுப்படுத்துதல்**

**Strengthening the Intelligence Network of the Police Department at the Village Level**

நுண்ணறிவுப் பிரிவின் செயல்திறனை மேலும் வலுப்படுத்த, கிராம அளவில் முக்கியத் தகவல்களைச் சேகரித்து உடனுக்குடன் தெரிவிக்கக் கூடிய ஒரு செயலமைப்பு 10 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**28. குற்றங்கள் நிகழாமல் தடுப்பதற்கு முக்கியத்துவம் அளித்தல்**

**Prevention of Crime to Receive Top Priority**

குற்றங்கள் நிகழாமல் தடுப்பதற்கு இவ்வரசு முன்னுரிமை வழங்கி குற்றவியல் விசாரணை முறைத்

தொகுப்புச் சட்டத்தின் கீழ் இதற்கென அமைந்துள்ள அதிகாரங்களைக் கொண்டு, காவல் துறை ஆணையர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் கவனமாக மேற்பார்வையிட தலைமைச் செயலாளர், உள் துறைச் செயலாளர் மற்றும் காவல் துறை இயக்குநர் ஆகியோரைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்படும்.

**29. புறக் காவல் நிலையங்களை காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்துதல்**

**Upgradation of Out Posts into regular Police Stations**

கடந்த நிதியாண்டில் 12 புறக் காவல் நிலையங்கள் காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன. அதே போல் இந்த நிதியாண்டில் 12 புறக் காவல் நிலையங்கள் 13 கோடி ரூபாய் செலவில் முழு அளவிலான காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்தப்படும்.

**30. ஐ.பி.எஸ் அதிகாரிகளுக்கான இல்ல அலுவலக உதவியாளர் படி**

**Residential Office Assistant Allowance for IPS Officers**

உயர் கால முறை ஊதிய நிலை மற்றும் அதற்கு மேம்பட்ட நிலையில் உள்ள, அதாவது Super-time Scale and above நிலையில் உள்ள, அனைத்து இந்தியப் பணிகளைச் சேர்ந்த, அதாவது All India Services-ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கு, அவர்களது இல்லத்தில் அலுவலக நிமித்தமான வேலைகளைச் செய்ய உதவுவதற்கு அலுவலக உதவியாளர்கள் அனுமதிக்கப்பட்டு, ஒரு அலுவலக உதவியாளரை மாதம் 8,000 ரூபாய் ஊதியத்தில் ஒப்பந்த அடிப்படையில் நியமித்துக் கொள்ளலாம் என்று 28.02.2011–இல் முந்தைய அரசு அறிவித்திருந்தது.

இந்த சலுகை சென்னையில் பணிபுரியும் I.A.S. மற்றும் I.F.S. அதிகாரிகளுக்கு மட்டும் வழங்கப்பட்டிருந்தது. இந்தச் சலுகை இனி I.P.S. அதிகாரிகளுக்கும் வழங்கப்படும்.

I.P.S. அதிகாரிகள் பலர், உயர் கால முறை ஊதியம் மற்றும் அதற்கு மேம்பட்ட ஊதியத்தில் சென்னைக்கு வெளியே, காவல் துறைத் துணைத் தலைவர், காவல் துறை தலைவர் ஆகிய பதவிகளில் இருப்பதால், இந்தச் சலுகை சென்னை நகரம் மட்டுமின்றி, மாநிலத்தில் பிற இடங்களில் பணிபுரியும் I.P.S. அதிகாரிகளுக்கும் வழங்கப்படும்.

**31. போக்குவரத்துக் காவலர்களுக்கு எலுமிச்சம் பழச் சாறு வழங்குதல்**

**Supply of Lime Juice for Traffic Police**

போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவது காவல் துறை பணிகளில் முக்கியமான ஒன்றாகும். இப்பணியைச் செய்யும் காவல் துறையினர் கோடைக் காலத்தில் கடும் வெயிலில் சாலைகளிலும், சாலை சந்திப்புகளிலும், நிழலுக்கு ஒதுங்கக் கூட இயலாத இடங்களில் நின்று பணிபுரிய வேண்டியுள்ளது. இவர்கள் பொதுவாக, ஒரு நாளில் காலையில் நான்கு மணி நேரமும், மதியம் நான்கு மணி நேரமும் வெயிலின் தாக்கத்தைப் பொருட்படுத்தாமல் பணிபுரிகின்றனர். இவர்களது சிரமத்தைக் குறைக்கும் வகையில், இவர்களுக்கு பணியில் இருக்கும் போது, காலை எட்டு மணி முதல் மாலை நான்கு மணிக்கு உள்ள நேரத்தில், இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை எலுமிச்சம் பழச் சாறு வழங்கப்படும். இது கோடை காலத்தில் நான்கு மாதங்களுக்கு வழங்கப்படும். காவலர்கள் முதல் உதவி ஆய்வாளர்கள் வரையில் சுமார் 6,500 பேர் இதனால் பயனடைவர்.

**32. குடிமைப் பாதுகாப்பு**

**Civil Defence**

பயிற்சி பெற்ற குடிமக்கள் அடங்கிய குடிமைப் பாதுகாப்பு அலகுகள் சென்னை, மாமல்லபுரம், திருநெல்வேலி, மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் தொடங்கப்படும். இயற்கைச் சீற்றங்கள் மற்றும் எதிர்பாரா விபத்துகள் போன்ற பேரிடர் நிகழும் காலங்களில் இந்த அலகுகள் அரசுத் துறைகளுக்கு உதவியாகச் செயல்படும்.

**33. ஊர்க்காவல் படையினருக்கு மூன்று அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்**

**Construction of three Unit Offices for Home Guards**

ஊர்க்காவல் படையினர் திறம்படச் செயல்பட கிருஷ்ணகிரி, திருப்பூர் மற்றும் அரியலூர் ஆகிய இடங்களில் 45 இலட்சம் ரூபாய் செலவில் மூன்று அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

**34. வான் நோக்கி உயரும் நீட்டிப்பு ஏணி கொண்ட ஊர்தி வழங்குதல்**

**Provision of Sky lift**

சென்னை நகரில் அடுக்குமாடிக் கட்டடங்களில் ஏற்படும் தீ விபத்துகளை வெற்றிகரமாக

எதிர்கொள்ள 6 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு வான் நோக்கி உயரும் ஏணி கொண்ட ஊர்தி, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கு வழங்கப்படும்.

**35. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பணியாளர்களுக்கு காப்பீட்டுத் தொகை அதிகரித்தல்**

**Enhancement of Risk Insurance for Fire and Rescue Services Department Personnel**

காவல் துறைப் பணியாளர்களுக்கு, தமிழ்நாடு காவல் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதற்கு ஈடாக, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கும் காப்பீட்டுத் தொகை 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

**36. அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு தற்காப்பு உடைகள் வழங்குதல்**

**Fire Protection equipment for all Fire Personnel**

தற்போது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையில் 175 'தீயிலிருந்து பாதுகாக்கும் தற்காப்பு உடைகள்' மட்டுமே உள்ளன. எந்த ஒரு நேரத்திலும் தீ விபத்துகளை எதிர்கொண்டு பணியாற்ற வேண்டிய நிலையில் 1,980 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை பணியாளர்கள் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் தீயிலிருந்து பாதுகாக்கும் தற்காப்பு உடைகள் வழங்க வேண்டியது அவசியம். அப்பொழுது தான் தீ விபத்து எங்கு ஏற்பட்டாலும் அதனை எதிர்கொள்ள உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள முடியும். ஆகவே, 28 கோடி ரூபாய் செலவில் 1,980 'தீயிலிருந்து பாதுகாக்கும் தற்காப்பு உடைகள்' தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை வீரர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்படும்.

**37. பல்பொருள் அங்காடிகள் ஊயவேநநளே வசதியை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினருக்கும் விரிவுபடுத்துதல்.**

**Extension of Canteen facility to the personnel of Fire and Rescue Services**

இந்தியாவிலேயே முதன் முறையாக, காவல் துறையினர், குறைந்த விலையில், பொருட்களைப் பெறும் வகையில், பல்பொருள் அங்காடிகள், அதாவது Canteens, சென்னை, மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் என்னால் திறந்து வைக்கப்பட்டன.

இங்கே பேசிய மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கும் Canteen வசதியை நீட்டித் தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். இந்தக் கோரிக்கையினை ஏற்று, காவல் துறையினருக்காக என்னால் அண்மையில் சென்னை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் திறந்து வைக்கப்பட்ட பல்பொருள் அங்காடிகள், அதாவது Canteens மூலம் பொருட்களைக் குறைந்த விலையில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி துறையில் பணிபுரியும் அலுவலர்களும் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்படும். இதனால், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையில் பணிபுரியும் 6,800 அலுவலர்கள் பயன் அடைவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கைகளின்மீது நான் ஆற்றிய பதில் உரையில் மாண்புமிகு உறுப்பினர் களுக்கு உரிய விடை கிடைத்திருக்கும் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளுக்கு என்னால் பதில் அளிக்கப்படாமல் ஏதேனும் இருந்திருந்தால், மாண்புமிகு உறுப்பினர்களின் பேச்சு அவைக் குறிப்பேட்டில் இருப்பதால், அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய ஒவ்வொரு பிரச்சனைக்கும், கேள்விக்கும், பதில்கள் தயாராக இருக்கின்றன. ஆனால் அனைத்திற்கும் பதில் சொல்வது என்றால், இன்று இரவு 8 மணியானால் கூட முடியாது. ஆகவே இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொண்டு வந்துள்ள வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு, காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டு, பலதரப்பட்ட கருத்துகளை எடுத்துச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மீண்டும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். ★

# சட்டவிரோதமாக மணல் கடத்துவோரை இரும்புக்கரம் கொண்டு அடக்குவோம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை - 17.5.2012

எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அளவற்ற முறையில் மணல் எடுப்பதைத் தடுக்கும் வகையிலும், நீர் ஆதாரங்களைப் பாதுகாக்கும் வகையிலும், பொதுமக்களுக்குத் தங்கு தடையின்றி, நியாயமான விலையில், முறையாக மணல் கிடைக்க வழிவகை செய்யும் வகையிலும், மாநில அரசின் வருவாயைப் பெருக்கும் வகையிலும், அரசே மணலை எடுத்து விற்பனை செய்வது என முடிவு எடுக்கப்பட்டது. இதன் காரணமாகப் பொது மக்களுக்குக் குறைந்த விலையில் மணல் கிடைத்து வந்ததுடன் நீர் ஆதாரங்கள் பாதுகாக்கப்படும் வகையில் மணல் அள்ளும் பணி முறைபடுத்தப்பட்டது.

2006–ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, வரைமுறையின்றி மணல் அள்ளப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள ஆற்றுப்படுகைகள் அனைத்தும் பாழ்படுத்தப்பட்டன. தாமிரபரணி ஆற்றில் 5 ஆண்டுகளுக்கு மணல் அள்ளக் கூடாது என்று சென்னை உயர் நீதிமன்றம் 2010-ஆம் ஆண்டு உத்தரவு பிறப்பிக்கும் அளவுக்கு தாமிரபரணி ஆற்றுப் படுகை சேதமடைந்து இருந்தது.

நான் மீண்டும் மூன்றாவது முறையாக முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, மணல் கடத்துவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட நிருவாகங்களுக்கு உத்தரவிட்டேன்.

எனது உத்தரவினையடுத்து, வருவாய்த் துறையும், காவல் துறையும் இணைந்து தமிழ்நாடு முழுவதும் உள்ள ஆற்றுப் படுகைகளில் தீவிர சோதனைகளை மேற்கொண்டு, மணல் கடத்தலில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

கடந்த ஓராண்டு காலத்தில், மணல் கடத்தலில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது 4,173 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அவ்வழக்குகளில் தொடர்புடைய 5,033 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 5,501 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதுவரை 12 பேர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். 14 கோடி ரூபாய் அளவுக்கு அபராதத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. அண்டை மாநிலங்களுக்கு மணல் கடத்தப் படுவது மற்றும் சட்டவிரோதமாக மணல் அள்ளுவது ஆகியவை முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் 603 கோடி ரூபாயாக, அதாவது சராசரியாக ஆண்டொன்றிற்கு 120 கோடி ரூபாயாக இருந்த மணல் வருவாய், கடந்த ஓராண்டில், தாமிரபரணி ஆற்றில் மணல் எடுக்காத சூழ்நிலையிலும், 197 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இதிலிருந்தே மணல் கொள்ளை வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை தமிழக மக்கள் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

இருப்பினும், அங்கொன்றும், இங்கொன்றுமாக ஒரு சில இடங்களில் சட்டவிரோதமான முறையில் மணல் அள்ளுவது தொடர்வதாகவும், அதைத் தடுக்கும் அரசு அதிகாரிகள் தாக்கப்படுவதாகவும் தகவல்கள் வந்துள்ளன.

உதாரணமாக, 12.5.2012 அன்று திருப்பத்தூர் வட்டம், பணியாண்ட பள்ளி, மதுரா ஜெயபுரம் கிராமத்தில் மணல் கடத்தப்படுவதாக கிராமத்திலிருந்து திருப்பத்தூர் சார் ஆட்சியருக்கு தொலைபேசி செய்தி வரப் பெற்றது. இதைத் தடுத்து நிறுத்தும் வண்ணம், கிராம உதவியாளர் திரு. ராஜேந்திரன் அவர்கள் அங்கே அனுப்பி வைக்கப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த கிராம உதவியாளர் பிற்பகல் 3.30 மணியளவில் அந்தக் கிராமத்தில் உள்ள வாரி புறம்போக்கில் அனுமதி இல்லாமல் கள்ளத்தனமாக மணல் ஏற்றிக் கொண்டிருந்த டிராக்டர் வாகனத்தைத் தடுத்து நிறுத்திய போது, மணல் ஏற்றிக் கொண்டிருந்த மூன்று நபர்கள் வாகனத்தை எடுத்துக் கொண்டு தப்பியோட முயற்சித்து இருக்கிறார்கள். இதனைத் தடுத்து நிறுத்திய போது, வாகன உரிமையாளர் திரு. திருப்பதி மற்றும் ஐந்து நபர்கள் கிராம உதவியாளர் திரு. ராஜேந்திரனை சாதியின் பெயரைச் சொல்லி இழிவாகப் பேசி, கடுமையாகத் தாக்கி, அவரை இழுத்துச் சென்று வாரிக் கரையின் மேடான பகுதியில் கழுத்தை நெறித்துக் கொல்ல முயன்றுள்ளனர். மேலும், அவ்விடத்தில் குழி பறித்து

அவரைப் புதைக்கவும் முயன்றுள்ளனர். அப்போது, திரு. ராஜேந்திரன் தன் உயிரைக் காப்பாற்ற முயற்சித்த போது, அப்பகுதியில் குப்பை கொட்டுவதற்காக வந்த 12 வயது சிறுமி இதனை நேரடியாகப் பார்த்து, பயந்து உரத்தக் குரலில் கத்தியுள்ளார். இதனால், அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் அங்கு ஓடி வந்தனர். இதனைக் கண்ட மணல் கடத்தல்காரர்கள், டிராக்டரில் இருந்த மணலை அங்கே கொட்டிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர். அம்மணாங்கோயில் வருவாய் ஆய்வாளர், கிராம நிருவாக அலுவலர் ஆகியோர் மணல் கடத்தல்காரர்கள் கொண்டு வந்திருந்த இரண்டு சக்கர வாகனத்தைக் கைப்பற்றி, கந்திலி காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இது தொடர்பாக, கந்திலி காவல் நிலையத்தில், திரு. திருப்பதி மற்றும் ஐந்து நபர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. திரு. சேகர் என்பவர் இது தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளார். திரு. திருப்பதி மற்றும் திரு. கோவிந்தராஜன் ஆகிய இருவரும் நீதிமன்றத்தில் சரண் அடைந்துள்ளனர். இவர்களை போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ளவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளையும் காவல் துறையினர் எடுத்து வருகின்றனர்.

மக்களின் குடிநீர்த் தேவைக்கும், விவசாயத்திற்கும் ஆதாரமாக விளங்கும் இயற்கையின் வரப்பிரசாதமான ஆற்றுப் படுகைகளை சமூக விரோதிகள் தங்கள் சுய லாபத்திற்காக சேதப்படுத்துவதை எனது தலைமையிலான அரசு ஒரு போதும் அனுமதிக்காது என்பதையும், சட்டவிரோதமாக மணல் கடத்துவோர் யாராக இருந்தாலும், அவர்களை இந்த அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ❖

# அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிட ஆணை


ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் செயல்படும் அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள அங்கன்வாடிப் பணியாளர், குறு அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்களில் 11,432 பணியிடங்களை நிரப்பிட அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மாவட்டத்தில் உள்ள காலிப்பணியிடங்கள் விவரம் குறித்து அறிவிப்பு வெளியிட அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன.

அங்கன்வாடிப் பணியாளர்கள், குறு அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்களுக்குப் பெண்கள் மட்டுமே விண்ணப்பம் செய்யலாம். 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று, 25 - 35 வயதுவரம்பிற்குள் உள்ள விண்ணப்பதாரர்கள் அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் குறு அங்கன்வாடிப் பணியாளர் பணியிடத்திற்கும், 20-40 வயது வரம்பிற்குள் உள்ள தமிழ் எழுத படிக்கத் தெரிந்த விண்ணப்பதாரர்கள் உதவியாளர் பணியிடத்திற்கும் விண்ணப்பம் செய்யலாம்.

மேலும், தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்படாத ஊதிய விகிதத்தில் அங்கன்வாடிப் பணியாளர் பணிக்கு ரூ.2500-5000+ தரஊதியம் ரூ.500/- என்ற விகிதத்திலும், குறு அங்கன்வாடிப் பணியாளர் பணிக்கு ரூ.1800-3300+ தர ஊதியம் ரூ.400/- என்ற விகிதத்திலும், உதவியாளர் பணிக்கு ரூ.1300-3000 + தரஊதியம் ரூ.300/- என்ற ஊதிய விகிதத்திலும் உரிய படிகளுடன் வழங்கப்படும்.

விண்ணப்பம் வழங்கும் நாள், விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள், நேர்முகத் தேர்வு நாள் மற்றும் இதர விவரங்கள் தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தனியே அறிவிப்புகள் வெளியிடப்படும். சென்னை மாவட்டத்திற்கு முதன்மைச் செயலர் மற்றும் சிறப்பு ஆணையர் அவர்களால் தனியே உரிய அறிவிப்புகள் வெளியிடப்படும்.

மேலும், உரிய விண்ணப்பங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இணையதளமான http:/`www.icds.tn.nic.in' லிருந்தும் பணிநியமனம் தொடர்பான அறிவிப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் முதன்மைச் செயலர்/சிறப்பு ஆணையர், அவர்களால் அறிவிப்புகள் வெளியிட்ட பின்னர் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். ❖



# டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை - 23.5.2012

கடந்த சில நாட்களாக திருநெல்வேலி மாவட்டத்தில் நிலவி வரும் டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த எனது தலைமையிலான அரசு ஏற்கெனவே தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

டெங்குக் காய்ச்சலால் இதுவரை 29 பேர் உயிரிழந்துள்ளதை அடுத்து, டெங்குக் காய்ச்சலை உடனடியாக முற்றிலும் கட்டுப்படுத்தும் வகையில் எனது தலைமையில் தலைமைச் செயலகத்தில் 23.5.2012 அன்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் முதன்மைச் செயலாளர், அரசு உயர் அதிகாரிகள் மற்றும் மருத்துவத் துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக நிலவி வரும் காய்ச்சலுக்குக் காரணமான வைரஸை ஆய்வு செய்த இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகக் குழுவினர், டெங்கு வைரஸ் வகை–1 மற்றும் டெங்கு வைரஸ் வகை–3 ஆகியவற்றால் இந்தக் காய்ச்சல் திடீரென ஏற்பட்டுள்ளதாகக் கண்டறிந்தனர். இதன் அடிப்படையில், எனது உத்தரவின் பேரில், டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனது உத்தரவின் பேரில், 17.5.2012 அன்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் விஜய் திருநெல்வேலி சென்று இது குறித்து கடையநல்லூர், தென்காசி நகராட்சிகளில் கள ஆய்வு மேற்கொண்டார். இந்தக் காய்ச்சல் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு முகாம் நடத்தப்படவும் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், மாண்புமிகு அமைச்சர் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் சென்று டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப் பட்டவர்களின் சிகிச்சை குறித்து ஆய்வு செய்ததுடன், டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப் பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார்.

18.5.2012–லிருந்து ஒரு வட்டாரத்திற்கு இரண்டு டெங்குக் காய்ச்சல் விழிப்புணர்வு மற்றும் சிகிச்சை முகாம்கள் வீதம், 38 விழிப்புணர்வு முகாம்கள் நாள்தோறும் திருநெல்வேலி மாவட்டத்தில் நடத்தப்பட்டு வருகின்றன.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அதிகமான நபர்கள் சிகிச்சை பெற்று வருவதன் காரணமாக, கூடுதலாக இரண்டு குழந்தைகள் நல சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டதோடு மட்டுமல்லாமல், ஒரு வட்டாரத்திற்கு ஒரு பூச்சியியல் வல்லுநரும், மூன்று வட்டாரங்களுக்கு ஒரு மூத்த பூச்சியியல் வல்லுநரும் நியமிக்கப்பட்டு கொசுத் தடுப்புப் பணிகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தலைமைப் பூச்சியியல் வல்லுநர் தலைமையில், 25 பூச்சியியல் வல்லுநர்கள் இதற்கான கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஒரு வட்டாரத்திற்கு ஒரு மருத்துவ அலுவலரும், ஒரு நகராட்சிக்கு ஒரு மருத்துவ அலுவலரும் நியமிக்கப்பட்டு, விழிப்புணர்வுப் பிரச்சாரத்திலும், நோய் கண்டறியும் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், இரண்டு துணை இயக்குநர்கள் மற்றும் மூன்று சுகாதார அலுவலர்கள் திருநெல்வேலி மாவட்டத்திற்கென கூடுதலாக நியமிக்கப்பட்டுள்ளனர். நோய்த் தடுப்புப் பணிகளுக்கென்று 29 வாகனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

டெங்குக் காய்ச்சல் பரவுவதைத் தடுப்பதையும், அதனைக் கட்டுப்படுத்துவதையும், நோய் தாக்கியவர்களுக்கு சிறந்த முறையில் மருத்துவ வசதிகள் அளிப்பதையும் கண்காணிப்பதற்காக எனது உத்தரவின் பேரில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு உள்ளது. சுகாதாரத் துறை சிறப்புச் செயலாளர், பொது சுகாதாரத் துறை இயக்குநர், பொது சுகாதாரத் துறை கூடுதல் இயக்குநர், மருத்துவக் கல்வித் துறை இயக்குநர், மருத்துவப் பணிகள் இயக்குநர் ஆகியோர் திருநெல்வேலி மாவட்டத்தில் முகாமிட்டு, தடுப்புப் பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

மேலும், சென்னை குழந்தைகள் நல மருத்துவ மனையிலிருந்து இரண்டு நிபுணர்கள் மற்றும் சென்னை மருத்துவக் கல்லூரியிலிருந்து இரண்டு பொது மருத்துவ நிபுணர்கள் திருநெல்வேலியில் முகாமிட்டு அங்குள்ள மருத்துவர்களுக்குத் தேவைப்படும் மருத்துவ ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

16.5.2012–லிருந்து ஒரு வட்டாரத்திற்கு 70 தற்காலிகப் பணியாளர்கள் வீதம் தினக்கூலி அடிப்படையில், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகளில் 1,330 கொசு ஒழிப்புப் பணியாளர்கள் கொசுப் புழு மற்றும் கொசு ஒழிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எனது தலைமையிலான அரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொண்ட இந்த நடவடிக்கைகளின் காரணமாக டெங்குக் காய்ச்சல் அண்டை மாவட்டங்களான விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்குப் பரவுவது பெருமளவு தடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை 1,466 பேர் காய்ச்சல் காரணமாக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில், 817 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கண்டறியப் பட்டுள்ளது. இதில் 423 பேர் மருத்துவமனைகளில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். மீதமுள்ளோர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

23.5.2012 அன்று எனது தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்டத்தில் ஒட்டுமொத்த துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கொசு ஒழிப்பு நடவடிக்கையாக புகை மருந்து அடிக்கும் நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு முழுவதிலும் இது தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு செயல்படுத்தப்படும்.

2. பொதுமக்களுக்கு இந்த நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், திருநெல்வேலி மாவட்டத்தில் கூடுதலாக 50 வண்டிகள் மூலம் தெருமுனைப் பிரச்சாரமும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் விளம்பரங்களும் மேற்கொள்ளப்படும்.

3. திருநெல்வேலி மாவட்டத்தில், கிராமங்கள் தோறும் நடமாடும் மருத்துவக்குழு மூலமாக காலையிலும், மாலையிலும் மருத்துவ முகாம்கள் மேற்கொள்ளப்பட்டு, காய்ச்சலால் பாதிக்கப் பட்டவர்கள் மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும்.

4. திருநெல்வேலி மற்றும் தென்காசி மருத்துவமனைகளில் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிறப்பு சிகிச்சை அளிப்பதற்காகக் கூடுதலாகத் தனி வார்டுகள் அமைக்கப்படும். இதற்காக சென்னையிலிருந்து சிறப்பு மருத்துவர்கள் அனுப்பப்படுவர்.

5. திருநெல்வேலி மாநகராட்சி மற்றும் கடையநல்லூர் போன்ற டெங்குக் காய்ச்சல் உள்ள இடங்களில் பொதுமக்கள் தண்ணீர் சேமித்து வைப்பதற்கான தேவையைக் குறைக்கும் வகையில் தினந்தோறும் குடிநீர் வழங்கப்படும்.

6. தனியார் மருத்துவமனைகளில் காய்ச்சலுக்காகச் சிகிச்சை பெற வருபவர்கள் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனரா எனக் கண்டறியும் பரிசோதனைகள் மேற்கொள்ளவேண்டும் என அறிவுறுத்தப்படுவர்.

7. மற்ற மாவட்டங்களில் காய்ச்சலால் பாதிக்கப் பட்டவர்களைத் தீவிரமாகக் கண்காணிக்கவும், டெங்குக் காய்ச்சல் ஏற்படாத வண்ணம் கொசுக்களை ஒழிப்பதற்கான நடவடிக்கையையும் தீவிரமாக மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்களும், மாவட்ட மருத்துவ அலுவலர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த டெங்குக் காய்ச்சலுக்குக் காரணமான கொசுக்களை ஒழிக்கும் பணிகளை தமிழக அரசு முனைப்புடன் மேற்கொண்டு வருகிறது. அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கும் வகையில், வீட்டைச் சுற்றி தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும், தண்ணீர் சேமித்து வைக்கும் தொட்டிகளை வாரம் ஒரு முறை ப்ளீச்சிங் பவுடர் அல்லது சாம்பல் கொண்டு நன்கு கழுவ வேண்டும் என்றும், எந்தக் காய்ச்சல் ஏற்பட்டாலும், உடன் அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலோ அல்லது அரசு மருத்துவமனைக்கோ அல்லது மருத்துவ முகாமிற்கோ சென்று பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். பொதுமக்கள் யாரும் டெங்குக் காய்ச்சல் குறித்து அச்சப்பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* * *


## கார்பன் பிளாக் தொழிற்சாலை அமைக்க ஒப்பந்தம்




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் முன்னிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில், திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்க்கண்டிகை சிப்காட் தொழிற்பூங்காவில், 350 கோடி ரூபாய் முதலீட்டில் டயர் தயாரிப்பதற்குத் தேவையான கார்பன் பிளாக் தயாரிக்கும் புதிய தொழிற்சாலையினை அமைப்பதற்காக ஃபிலிப்ஸ் கார்பன் பிளாக் லிமிடெட் நிறுவனத்திற்கும், தமிழக அரசிற்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. (14.5.2012)

# சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் புராதனச் சின்னமாக விளங்கும் கலங்கரை விளக்கத்தினைப் பராமரித்திட அரசு நடவடிக்கை

**சென்னை** உயர் நீதிமன்ற வளாகத்திற்குள் 1844–ஆம் ஆண்டு கட்டப்பட்டு புராதனச் சின்னமாக விளங்கும் கலங்கரை விளக்கம் கவனிப்பாரின்றிக் கிடப்பதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து, உடனடியாக, அதனைப் பராமரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிட்டார்கள்.



சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள கட்டுமான அமைப்புகளைப் பராமரிப்பது, புதுப்பிப்பது ஆகிய பணிகள், உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. பி. ஜோதிமணி அவர்கள் தலைமையில் இயங்கும் கட்டடக் குழுவின் ஒப்புதலுக்குப் பிறகே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கப்பல்களுக்கு வழிகாட்டும் வண்ணம் 1844–ஆம் ஆண்டு கலங்கரை விளக்கம் ஒன்று சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்டது. இதனைப் பராமரிக்கும் பணியினை, 1977–ஆம் ஆண்டு, காமராஜர் சாலையில் கலங்கரை விளக்கம் அமைக்கும் வரை, மத்திய அரசு மேற்கொண்டு வந்தது. பின்னர், சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள கலங்கரை விளக்கம் பயன்படுத்தப்படாததால், பராமரிப்புப் பணியினை மத்திய அரசு கைவிட்டு விட்டது.

இந்தச் சூழ்நிலையில், சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நூறாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டுப் புராதனச் சின்னமாக விளங்கும் கலங்கரை விளக்கத்தினைப் பராமரிப்பதற்கான நடவடிக்கைகளை சென்னை உயர் நீதிமன்ற கட்டடக் குழுவின் ஒப்புதல் பெற்று உடனடியாக எடுக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். ❖

## கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் 117ஆவது பிறந்த நாள்!




கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்களின் 117ஆவது பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை வாலாஜா பெரிய மசூதியில் உள்ள அவரது துயிலிடத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மலர்ப்போர்வை போர்த்தி மரியாதை செலுத்தினார்கள். (5.6.2012)





# திருக்கோயில்களில் சுவையான அன்னதான உணவு பக்தர்கள் வரவேற்பு!

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் திருக்கோவில்களுக்கு வரும் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அன்னதானத் திட்டம் என்ற புதுமைத் திட்டத்தை அறிவித்து கடந்த 2002ஆம் ஆண்டு மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலில் தொடங்கி வைத்தார்கள்.

முதல் கட்டமாக 63 கோவில்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. கோவிலுக்கு வரும் பக்தர்கள் மத்தியில் அமோக வரவேற்பைப் பெற்றதால் பின்னர், படிப்படியாக 7 கட்டங்களாக இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

அன்னதானத் திட்டம் செயல்படுத்தப் பட்டு வரும் திருக்கோவில்களில் உச்சிகால பூஜை முடிந்தவுடன் கோவில்களுக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. இந்த அன்னதானத்தில் சாதம், சாம்பார், ரசம், மோர், கூட்டு, பொரியல், ஊறுகாய் ஆகிய உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

கடந்த 2006–ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சிமாற்றம் காரணமாக இந்தத் திட்டம் சரிவர கண்காணிக்கப்படாததால், பயனாளிகளின் எண்ணிக்கை, உணவின் தரம் போன்றவற்றில் தொய்வு ஏற்பட்டது.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 3–ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும் அன்னதானத் திட்டத்தின் பயனாளிகளின் எண்ணிக்கையை உறுதிசெய்வதுடன் உணவின் தரத்தை மேம்படுத்த வேண்டும் எனவும் உத்தரவிட்டார்கள். அதோடு மட்டுமில்லாமல் நிதி வசதி மிகுந்த கோவில்களில் ஞாயிற்றுக்கிழமை தோறும் வடை பாயாசத்தோடு மதிய உணவளிக்க வேண்டும் எனவும் ஆணையிட்டுள்ளார்கள். ஆன்றோர்கள், சான்றோர்கள், பக்தர்கள் மற்றும் ஆர்வலர்களால் பெரிதும் பாராட்டப்படும் அன்னதானத் திட்டத்தை மேலும், 106 கோவில்களுக்கு விரிவுபடுத்தி இந்தத் திட்டத்திற்குப் புத்துயிர் அளித்துள்ளார்கள்.

இத்திட்டம், வெளி மாநிலங்களிலிருந்து வரும் பக்தர்கள் மற்றும் வெளியூர் பக்தர்களின் மத்தியில் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளதால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், திருவரங்கம் அரங்கநாதசுவாமி, பழனி ஆகிய இரண்டு கோயில்களில் தினந்தோறும் 200 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 23.3.2002 முதல் திருவரங்கம் அரங்கநாதசுவாமி, சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில், மலைக்கோட்டை தாயுமானசுவாமி, உறையூர் வெக்காளியம்மன் ஆகிய கோயில்களில் அன்னதானத் திட்டம் தொடங்கப்பட்டது.

இம்மாவட்டத்தில் கடந்த 11.11.2011 முதல் பூலோகநாதர் சுவாமி, திருப்பட்டூர் பிரம்மபுரிஸ்வரர், மணப்பாறை நல்லாண்டவர், லால்குடி, பூவாளுர் ஆகிய கோயில்களில் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அன்னதானத் திட்டத்தின் வாயிலாக இம்மாவட்டத்தில் 29.2.2012 வரை 67,83,012 பக்தர்கள் பயன் பெற்றுள்ளார்கள்.

ஒரு நாளைக்கு ஒரு கோயிலில் 200 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தால் பயன்பெற்ற சிலரைச் சந்தித்தோம்.

**தூத்துக்குடி மாவட்டம், தென்திருப்பேரை கிராமத்தைச் சேர்ந்த வீரபாகு (வயது 85) நம்மிடம்,** "நான் ஒவ்வொரு ஆண்டும் அருள்மிகு ரெங்கநாதரை தரிசனம் செய்ய ஸ்ரீரங்கத்திற்கு வந்து கொண்டிருக்கிறேன். கோயிலில் அன்னதானம் வழங்க முதல்வர் அம்மா உத்தரவிட்டுள்ளதை செய்தித்தாள் மூலமாகத் தெரிந்து கொண்டேன். சாமி தரிசனம் முடிந்து, அன்னதான பிரசாதம் எங்கு வழங்கப்படுகிறது என்று விசாரித்தபோது மதியம் சரியாக 12 மணிக்கு வழங்குவதாகச் சொன்னார்கள். கோவிலில் வழங்கப்பட்ட அன்னதானம் சுவையாக இருந்தது", என்றார்.

**சர்மிளா (வயது 37) என்பவர் கூறும்போது,** "சென்னையிலிருந்து குடும்பத்துடன் வந்துள்ளோம். ஸ்ரீரங்கம் அரங்கநாதரை சிறப்பாக தரிசனம் செய்தோம். பின்னர் கோயிலில் வழங்கப்பட்ட மதிய உணவான சாப்பாடு, வடை, பாயசம் மன நிறைவோடும், சந்தோஷமாகவும் இருந்தது" என்றார்.

இவரையடுத்து, **ஆர். ஆறுமுகம் (வயது 58)** என்ற பக்தர் நம்மிடம், "சாமி தரிசனம் செய்ய சுற்றுலாவாக வந்துள்ளேன். உச்சிகால பூஜை முடிந்தவுடன் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. வெளியில் ஹோட்டல்களில் சாப்பாட்டிற்காக அலைய வேண்டியதில்லை. கோயில் வளாகத்தில் அன்னதானம் வழங்குவது கடவுள் கொடுத்த வரப்பிரசாதம்", என்று தெரிவித்தார்.

– க.முத்துசாமி
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருச்சிராப்பள்ளி



# இயலாதோர்க்கு உயரிய சிகிச்சை அளிக்கும் மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களையும், சமூக நலத்திட்டங்களையும், ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்கள் பயன்பெறுகின்ற வகையில் செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் ஏழை எளிய மக்களுக்கு விலையில்லா அரிசி, விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகள், விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்குதல் மற்றும் ஏழை எளிய மாணவ–மாணவியரின் கல்வித் தரம் உயரவும் எந்தச் சூழ்நிலையிலும் இடைநிற்றலைத் தவிர்க்க உதவித் தொகை, விலையில்லா மிதிவண்டி, விலையில்லா மடிக்கணினி, விடுதி மாணாக்கர்களுக்கான உணவுக் கட்டண உயர்வு, ஏழைப் பெண்களுக்கு திருமாங்கல்யத்திற்கான தங்கம் மற்றும் உதவித் தொகை, வீடு இல்லாத மக்களுக்குப் பசுமை வீடுகள் போன்ற உயரிய திட்டங்களை வகுத்து நமது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மக்களுக்கு உற்ற துணையாக இருந்து சாதனை புரிந்து வருகிறார்கள்.

வசதி படைத்தவர்களுக்கு இணையாக அனைவரும் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைத்' தொடங்கி வைத்துள்ளார்கள். ஒரு நாடு சிறந்து விளங்க வேண்டும் என்றால் மனித வளம் மிக முக்கியமாகும். மனித வளம் என்பது கல்வி அறிவு, உடல் பலம் மற்றும் மனவளம் ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. ஒரு குடும்பத்தின் தலைவனோ, தலைவியோ அல்லது குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களுக்கோ மருத்துவ சிகிச்சை என்பது தற்போதைய காலக்கட்டத்தில் அதிக செலவு வைக்கக் கூடியதாகும். அந்த குடும்பம் சிகிச்சைக்காக கடன்பட்டு மிகவும் அவதிக்கு உள்ளாவதை உணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்த சிறப்பான திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் பல்வேறு நிலைகளில் துணை நிற்கின்ற தமிழக அரசு மக்கள் ஆரோக்கியமாக சுகாதாரமாக வாழ துணை நின்று மக்களைக் காத்து நிற்கிறது என்பது மிகச் சிறந்த சேவையாகும். அந்த வகையில் ஏழை எளிய மக்களிடம் மிகவும் வரவேற்பைப் பெற்ற திட்டம்தான் 'முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்'. ஒருவன் எத்தனை செல்வங்களைப் பெற்றிருந்தாலும் அவன் நோயுற்றால் வாழ்வில் நிம்மதியை இழந்து விடுவான். எனவேதான் நோயற்ற வாழ்வே

குறைவற்ற செல்வம் என்று சொல்லி வைத்தார்கள். அந்த வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக, ஆரோக்கியமான தமிழகத்தை உருவாக்க அரும்பாடுபட்டு வருகிறார்கள். மக்கள் முழு நல வாழ்வு வாழ தாயுள்ளம் கொண்ட நமது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஒரு உயரிய திட்டம் தான் 'முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்'.

வசதி படைத்தவர்கள் தனியார் மருத்துவமனை மூலம் பெறும் உயரிய, தரம்வாய்ந்த மருத்துவச் சிகிச்சை, எல்லாத் தரப்பு மக்களுக்கும் சென்றடைய வறுமைக் கோட்டில் வாழ்பவர்களும் வளமும் நலமும் பெற இத்திட்டம் பெரிதும் துணை புரிகின்றது. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/–த்திற்குள் உள்ள அனைவரும் இத்திட்டத்தின் பயனாளிகளாக முடியும். ஏற்கெனவே மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அடையாள அட்டை பெற்றவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும். அடையாள அட்டை இல்லாதவர்கள் கிராம நிருவாக அலுவலர் சான்று மற்றும் குடும்ப அட்டை ஆகிய ஆவணங்களுடன் வந்து இந்தத் திட்டத்தின் பயன்களைப் பெறலாம்.

சுமார் 1,016 சிகிச்சைகளைப் பெறக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட இந்தத் திட்டம் ஆண்டுக்கு ஒரு இலட்சம் வீதம் நான்கு ஆண்டுகளுக்கு 4 இலட்சம் ரூபாயினைக் காப்பீட்டுத் தொகையாகக் கொண்ட திட்டமாக விளங்குகிறது. மேலும், இத்திட்டத்தின் மூலம் இதய நோய், சிறுநீரகம், நரம்பியல், எலும்பு தொடர்பான நோய்கள் உட்பட பல்வேறு விதமான நோய்களுக்கு சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் சுமார் **2,55,000** பயனாளிகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைய ஏதுவாகிறது. மே 2012 முதல் வாரத்தில் இம்மாவட்டத்தில் **472** பயனாளிகளும், இம்மாவட்டத்தை சேர்ந்த 188 பயனாளிகள் வெளிமாவட்ட மருத்துவமனைகளிலும் என மொத்தம் **660** பயனாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர். இதற்காக இதுவரை ரூ.**1.4** கோடி வழங்கப்பட்டுள்ளது. இம் மாவட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில், **14** தனியார் மருத்துவமனைகளும், **3** அரசு மருத்துவமனைகளும் இணைக்கப்பட்டு மருத்துவ சேவையை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகின்றன. இதுதவிர இத்திட்டத்திற்காக இம்மாவட்டத்தில் **1,83,841** ஸ்மார்ட் கார்டுகள் பயனாளி களுக்கு வழங்கப்பட்டுள்ளன.





**இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், மணலூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி. எஸ். பஞ்சவர்ணம், (வயது 27) கூறும்போது,**

'எனது இரண்டாவது குழந்தை கருவுற்றிருக்கும் போதே டாக்டர்கள் எனது இதயத்தில் பிரச்சினை உள்ளது என்றும், அதற்குத் தொடர்ந்து மாத்திரை சாப்பிட வேண்டும் எனவும் கூறினர். மேலும் பிரசவத்திற்குப் பின்பு கடந்த இரண்டு வருடங்களாக மாத்திரை தொடர்ந்து சாப்பிட்டு வந்தேன். ஆனால் என்னால் சிறு வேலை கூட செய்ய முடியாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தேன். சிறிது தூரம் நடந்தால் கூட மூச்சு வாங்கி நெஞ்சு வலிக்கும். என் கணவர் என் குழந்தைகளையும் வைத்துக் கொண்டு என்னையும் பராமரிக்க முடியாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தார். எனவே, நான் எனது வயதான தாயார் மற்றும் விதவை சகோதரியுடனும் வாழ வேண்டிய கட்டாயத்துடனும், வலி மிகுந்த உடல்நிலையுடனும் ஏதோ வாழ்ந்தோம் என்று வாழ்ந்து வந்தேன். என் அம்மா வயதான காலத்திலும் எனக்காகக் கூலி வேலை செய்து என்னைப் பராமரித்து வந்தார். இந்த நிலையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்த திட்டத்தின் மூலம் எனக்கு இருதய வால்வு மாற்றும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. சிகிச்சை முடிந்து இன்று பூரண நலமுடன் இருந்து வருகிறேன். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கடந்த மூன்று வருடமாக வாழ்வா சாவா என்று போராடி வந்த எனக்கு முதல்வர் அம்மா அவர்கள் உயிர்ப் பிச்சை அளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு என் கோடானு கோடி நன்றி', என்று கண்ணீர் மல்க நம்மிடம் கூறினார்.

**சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியம், இராஜகம்பீரம் என்ற ஊரைச் சேர்ந்த திரு. அழகுசுந்தரம், (வயது 33) நம்மிடம் கூறும்போது,**

'கடந்த 3 வருடமாக வேலைக்குப் போக முடியாமல் நெஞ்சு வலியால் துடிச்சிக்கிட்டு இருந்தேன். கொஞ்ச தூரம் கூட நடக்கவோ, சைக்கிள் ஓட்டவோ என்னால் முடியாது. பயங்கரமாக மூச்சு வாங்கும். நெஞ்சு வலிக்கும். இடது கை மரத்துப் போன மாதிரி ஆயிடும். இதனால் மில்லில் பார்த்து வந்த வேலை போயிருச்சு. வாழ்க்கையில் பிடிப்பு இல்லாமல் வாழ்ந்து கொண்டிருந்தேன். இந்நிலைமையில் கல்யாணம் பண்ணிக் கொள்ளத் தயக்கமாக இருந்தது. கடவுளாப் பார்த்து செய்தது போல் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்த இந்தத் திட்டத்தால் எனக்கு ஒரு பைசா செலவில்லாமல் இதய அறுவை சிகிச்சை



செய்து கொண்டேன். இப்ப நான் ரொம்ப தைரியமாக இருக்கேன். வயதான என் தாயோட கண்ணீர் இப்பதான் நின்னுருக்கு. இன்னமும் வேலைக்குப் போய் என்னைப் பராமரித்துக் கொண்டிருக்கும் என் வயதான அப்பாவுக்குத் துணையாக இன்னும் சில மாதங்களில் நான் வேலைக்குப் போகக்கூடிய அளவில் தயாராகி விடுவேன் என்று நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கு' என கண்களில் நம்பிக்கை மின்ன நம்மிடம் தன்னுடைய உணர்வினைப் பகிர்ந்து கொண்டார். 'என் உயிர் உள்ளவரை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றியோடு இருப்பேன்', எனக் கூறினார்.

**சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நகர், கக்கன்பாக்கத்தில் வசிக்கும் திரு. முகம்மது ஜக்கரியா, (வயது 27) கூறும் போது,**

UKG படிக்கின்ற பெண் குழந்தையும், பிறந்து சில மாதங்களே ஆன ஆண் குழந்தையையும் அதோட இதய நோயாளியான என்னையும் வைத்துக் கொண்டு என் மனைவி தினந்தோறும் வாழ்க்கையே ஒரு போராட்டமாக ஆண்டவனின் அருளை வேண்டி நிற்பதைப் பார்க்கும்பொழுது நான் படும் வேதனை சொல்ல இயலாது. நான் பார்த்துக் கொண்டிருந்த தனியார் வேலையையும் என் நோயின் காரணமாகத் தொடர்ந்து செய்ய இயலாமல் போய்விட்டது. குடும்பத்திற்கு வருமானம் இல்லாமல் மிகவும் சிரமமான சூழ்நிலையில் வாழ்ந்து வந்த எனக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் இத்திட்டத்தின் மூலம் எனக்கும் வாழ ஒரு வாய்ப்புக் கொடுத்துள்ளார். இந்த உதவி மட்டும் எனக்குக் கிடைக்கவில்லை என்றால் நான், என் குடும்பம் எல்லாம் என்ன நிலைமை ஆகியிருப்போம் என்று என்னால நினைச்சுக் கூட பார்க்க முடியவில்லை. கருணை உள்ளம் கொண்ட முதல்வர் அம்மா அவர்களுக்கு என் வாழ்நாள் முழுவதும் நன்றி சொன்னாலும் தகும். நானும் என், குடும்பமும் எப்பவும், அரசுக்கு நன்றியோடு இருப்போம், என்று உணர்வு பொங்கக் கூறினார்.

பெரும் பணம் செலவு செய்து, மருத்துவ சிகிச்சை செய்ய இயலாத ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நம் அரசு அளித்துள்ள 'முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்' ஒரு சாதனைத் திட்டம் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

– எஸ். கண்ணதாசன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சிவகங்கை மாவட்டம்.

❖ ❖ ❖

# ரூ.1.37 கோடி மதிப்பில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள்!

## புதுப்பொலிவு பெறும் கொல்லிமலை சுற்றுலா மையங்கள்

**நா**மக்கல் மாவட்டம் கொல்லிமலையின் சிறப்புகள் பல்வேறு வகையில் எடுத்துக் கூறப்படுகிறது. கொங்குத் திருநாட்டில் நாமக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பெரிய மலைத்தொடர் கொல்லிமலை. இம்மலை தெற்கு, வடக்கில் 28 கி.மீ நீளமும், கிழக்கு மேற்கில் 19 கி.மீ அகலமும் கொண்டது. மொத்தம் 283.9 ச.கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட கொல்லிமலை வரலாற்றுக்கு முந்திய காலந்தொட்டு மக்களின் வாழ்விடமாக விளங்குகிறது. கொல்லிமலை 14 நாடுகளாக அறியப்பட்டுள்ளது. கொல்லிமலை என்றாலே நாவில் இனிக்கும் தேன் தான் நினைவிற்கு வரும். மேலும், பழ வகைகளில் பலா, மலை வாழை, மா, கொய்யா, அன்னாசி போன்றவையும், தினை, நெல், மரவள்ளி, கேழ்வரகு, ஏலம், காப்பி, மிளகு போன்ற பயிர் வகைகளும் இங்கு பயிரிடப்படுகின்றன. உழைப்பில் சிறந்த கொல்லிமலைவாழ்மக்கள் உருவாக்கும் எல்லாமே சுவையானது தான். ஆரியூர், புளியஞ்சோலை, சேலூர், வாழவந்திநாடு ஆகிய அடர்ந்த வனப் பகுதிகளை உடையது கொல்லிமலை.

**ஆகாய கங்கை**

நாமக்கல் நகரிலிருந்து 50 கி.மீ தொலைவில் கொல்லிமலை அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 1,500 மீ உயரம் உடைய கொல்லிமலையின் உச்சியிலிருந்து பார்த்தால் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எங்கும் பசுமையான காட்சி பரந்து விரியும். காரவள்ளி என்ற இடத்திலிருந்து 70 கொண்டை ஊசி வளைவுகளைக் கடந்து கொல்லிமலையின் உச்சிக்குச் செல்ல வேண்டும். அடர்ந்த வனம், மரம், செடிகளுக்கிடையே வாகனங்கள் ஊர்ந்து செல்லும் போது சிலு, சிலுவென இயற்கைக் காற்று நம் தேகத்தைத் தழுவுவது ஆனந்தத்திற்குரியதாகும். கொல்லிமலையில் ஆகாய கங்கை அருவி, சிற்றருவி, மாசில்லா அருவி, தாவிரவியல் பூங்கா, படகு இல்லம்,

அறப்பளீஸ்வரர் கோவில், வியூ பாயிண்ட் உள்ளிட்டவை சுற்றுலா பயணிகள் கண்டு ரசிக்கும் அற்புதப் பகுதிகள். ஆகாய கங்கை அருவியில் ஏறத்தாழ 140 அடி உயரத்திலிருந்து வெள்ளியை உருக்கிக் கொட்டியது போல தண்ணீர் கொட்டுகிறது. தமிழகத்தில் சிறப்பு வாய்ந்த குற்றாலம் அருவிகளில் குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே தண்ணீர் கொட்டும். ஆனால், இந்த அருவியில் மழைக்காலங்களில் அதிகளவிலும், கோடைக் காலங்களில் குறைந்த அளவிலும் தண்ணீர் கொட்டிக்கொண்டே இருக்கும்.

**வியூ பாயிண்ட்**

இந்த அருவிக்கு அறப்பளீஸ்வரர் கோவிலிலிருந்து செங்குத்தாக 1,000 படிகளில் இறங்கிச் செல்ல வேண்டும். முதியவர்கள் மற்றும் சிறியவர்கள் செல்லமுடியாது என்பதால் மாவட்ட நிருவாகத்தின் சார்பில் அறப்பளீஸ்வரர் கோவில் அருகே உள்ள சிற்றருவியில் இவர்கள் குளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இங்கு நீராடும் சுற்றுலாப் பயணிகள் அறப்பளீஸ்வரரை தரிசித்து விட்டு ஓய்வு எடுப்பதற்காக கோயில் முன்பு சிறப்புப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. கொல்லிமலைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவரும் பகுதியாக வாசலூர்பட்டியிலுள்ள படகு இல்லம் திகழ்கிறது. இந்தப் படகு இல்லத்தில் ஏற்கெனவே 2 படகுகள் இருந்தன. தற்போது ரூ.2 இலட்சம் செலவில் மேலும் 3 புதிய படகுகள் வாங்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளின் பயன் பாட்டுக்கு விடப்பட்டுள்ளன. கொல்லிமலைக்கு வருகை தரும் அனைத்து சுற்றுலாப் பயணிகளும் நிச்சயம் படகு சவாரி செய்வார்கள். மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மூலம் இப்படகு இல்லம் பராமரிக்கப்படுவதால் மிகக் குறைந்த கட்டணத்திலேயே படகு சவாரி செய்ய முடிகிறது. படகு இல்லத்தின் அருகில் சுற்றுலாப் பயணிகள் மகிழ்வுறும் வகையில் பூங்கா நிறுவப்பட்டுள்ளது.

**வாசலூர்பட்டி படகு இல்லம்**

கொல்லிமலைக்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகள் மத்தியில் அங்குள்ள மாசில்லா அருவிக்கு பெரும் வரவேற்பு உண்டு. சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக மாவட்ட நிருவாகம் மாசில்லா அருவி பகுதியில் பெண்களுக்காக தனியாக உடை மாற்றும் அறை, கழிப்பிட வசதி, காத்திருப்போர் அறை ஆகியவை ரூ.13 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. மாசில்லா அருவிக்கு சுற்றுலாப் பயணிகள் மிக எளிதாகச் செல்வதற்கு ரூ.11 இலட்சம் மதிப்பில் தார்ச்சாலைகள் அமைக்கப் பட்டுள்ளன. ஆரியூர் கிராமத்திலிருந்து உற்பத்தியாகும் அருவி ஏறத்தாழ 4 கி.மீ தொலைவில் மரம் செடிகளுக்கிடையே தவழ்ந்து வந்து 20 அடியிலிருந்து கொட்டுகிறது. இயற்கை அழகுடன் கூடிய இந்த அருவியில் மூலிகை கலந்து தண்ணீர் கொட்டுவது சுற்றுலாப் பயணிகளை அதிகம் ஈர்க்கிறது. பிரசித்தி பெற்ற மாசி பெரியண்ணன் கோயில் அருகே இந்த அருவி அமைந்திருப்பதால் இதற்கு மாசில்லா அருவி என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.


**தாவரவியல் பூங்கா**

கொல்லிமலைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் பார்க்கும் இடங்களில் மிகவும் முக்கியமானது தாவரவியல் பூங்கா ஆகும். பூங்காவிற்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்குக் கழிப்பிட வசதி ரூ. 7 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. வாகன நெரிசலைத் தவிர்க்கும் வகையில் பூங்கா முன்புறம் ரூ. 8 இலட்சம் மதிப்பில் வாகனம் நிறுத்தும் இடம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பூங்காவை ரசிக்கும் வண்ணம் செயற்கை நீரூற்றுகள், சிறு குழந்தைகள் விளையாடுவதற்குப் பூங்காக்கள் கொல்லிமலையின் சிறப்பைக் குறிக்கின்ற வகையில் வன விலங்குகளின் சிலைகள் பார்ப்பவர்களை ஈர்ப்பவையாக உள்ளன.

நாமக்கல் மாவட்டத்தின் ஒரே சுற்றுலாத் தலமாக விளங்குவது கொல்லிமலை என்பதால் இதன் வளர்ச்சியில் மாவட்ட நிருவாகம் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது.



கொல்லிமலையில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள ரூ.1.37 கோடி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொல்லிமலையை பிளாஸ்டிக் பயன்படுத்தாத ஒரு சுற்றுலா நகரமாக உருவாக்க மாவட்ட நிருவாகம் எடுத்த முயற்சியின் காரணமாக 40 மைக்ரான் கொண்ட பிளாஸ்டிக் பொருட்களுக்கு முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனைக் கண்காணிக்க ஒரு சோதனைச் சாவடி உருவாக்கப்பட்டு கண்காணிக்கப் படுகிறது. இதனால் கொல்லிமலையில் சுற்றுச்சூழல் மாசுபடுவது முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளது. கொல்லிமலை மலைவாழ் மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான நரியன்காடு – முள்ளுக்குறிச்சி மாற்றுப்பாதை அமைக்கும் பணி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.



**வல்வில் ஓரி விழா**

இவ்வாறு பல்வேறு இயற்கை சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள கொல்லிமலைக்கு மற்றொரு சிறப்பும் உண்டு. கொங்குநாட்டு கொள்ளிக்காவலனாக ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வலம் வந்த கடையேழு வள்ளல்களில் ஒருவரான வல்வில்ஓரி வள்ளலாகவும், வலியவனாகவும், மக்களுக்கு அரணாகவும் வாழ்ந்து வந்தவர் ஆவார். வல்வில்ஓரியின் வரலாற்றுச் சிறப்புகளை வெளிக்கொணரும் வகையில் அரசின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் (ஆடி 18) அன்று வல்வில்ஓரி விழா நடத்தப்படுகிறது.

கொல்லிமலையை சிறந்த சுற்றுலாத் தலமாக உருவாக்கும் வகையில் தமிழக அரசு மேற்கொள்ளும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளுக்கு மாவட்ட நிருவாகம் மிகச் சிறப்பாக செயலாற்றி வருகிறது என்றால் அது மிகையாகாது.

– டி.எஸ். சுப்பிரமணியம்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
நாமக்கல் மாவட்டம்

# ஆரோக்கியமான குழந்தை பெற ஆசையா?

## நம்பிக்கை மையம் வாருங்கள்!

ஆரோக்கியமான குழந்தை நம் பொறுப்பு!



**பெற்றோர்-சேய் நலத்திட்டத்தின் மூலம் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுங்கள்.**

நம்பிக்கை மையம்

- அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்
- மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனைகள்
- ஆரம்ப சுகாதார மையங்கள்

**ஆகிய இடங்களில் உள்ளன**

TANSACS

எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்புகொள்ளவும்:

**1800 419 1800**

(எந்த கட்டணமும் இல்லை)

**தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்**

417, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை–600 008.

தொலைபேசி : 044–2819 0467 / 2819 0891 நிகரி : 044– 2819 0465 மின்னஞ்சல் : tnsacs@gmail.com வலைதளம் : www.tansacs.in

வெளியீட்டு ஆணை எண்.730/வரைகலை/விளம்பரம்/2012

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/ARD/48/12-14
& WPP No. TN/PMG (CCR) 518/12-14

